36.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட நவீன ஆடை / துணிநூல் தொழில்நுட்பத்தில் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆடை புனைதல் தொழில்நுட்பம் (Garment Fabrication) / ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை உருவாக்கம் / ஆடை தொழில்நுட்பம் (Apparel / Garment Technology) / நவீன ஆடை தொழில்நுட்பம் (Fashion Technology) / நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை தொழில்நுட்பத்தில் (Fashion Design & Clothing) பட்டயம். அல்லது (இ) தையல் வேலை தொழில்நுட்ப தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்.
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன்பேசி தொழில் நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர்)	3641	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல்/ மின்னணு மற்றும் தொலை தொடர்பு / மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் / கணினி வலைதளவியலில் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல்/ மின்னணு மற்றும் தொலை தொடர்பு / மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் / கணினி வலைதளவியலில் பட்டயம் அல்லது (இ) திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (சூரிய சக்தி தொழில் நுட்பவியலாளர் (மின்னியல்))	3642	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட

			ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம்; அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) சூரிய சக்தி தொழில்நுட்பவியலாளர் (மின்) தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (நில அளவர்)	3643	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட நில அளவை / அமைப்பியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட நில அளவை பொறியியல் / அமைப்பியலில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) நில அளவர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர்)	3644	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல் / உயிர் மருத்துவம் (Bio-Medical)/ மருத்துவ மின்னணுவியல் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பில் பொறியியல்/ தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னணுவியல்/ உயிர் மருத்துவம் (Bio-Medical) / மருத்துவ மின்னணுவியல் பொறியியல் / மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் பட்டயம் அல்லது (இ) மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்)	3645	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட துணிநூல் இயந்திர மின்னணுவியல் / துணிநூல் தொழில்நுட்பம் / துணிநூல் செயலாக்கம் (Textile Processing) / துணிநூல் பொறியியல் பட்டம் அல்லது

			(ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட துணிநூல் இயந்திர மின்னணுவியல் / துணிநூல் தொழில்நுட்பம் / துணிநூல் செயலாக்கம் (Textile Processing) / துணிநூல் பொறியியல் பட்டயம் அல்லது (இ) துணிநூல் இயந்திர மின்னணுவியல் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் /பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) கடைசலர் அல்லது "கருவி மற்றும் சாயம் தயாரிப்பாளர்" (PTJF) அல்லது " கருவி மற்றும் சாயம் தயாரிப்பாளர்" (சாயங்கள் மற்றும் அச்சுகள்) தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் / உலோகவியல் / இயந்திர மின்னணுவியல்/ உற்பத்தி / தயாரிப்பில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட இயந்திரவியல் மற்றும் தொடர்புடைய / உற்பத்தி / தயாரிப்பு பொறியியலில் பட்டயம் அல்லது (இ) பற்றவைப்பவர் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ்/தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் கம்பியாள்)	3648	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி அல்லது அதற்கு இணையானவை மற்றும் ii) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று (அ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மின்னியல்/ மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் / தொழில்நுட்பப் பட்டம் அல்லது (ஆ) அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் / பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் மூலம்

			வழங்கப்பட்ட மின்னியல் / மின்னியல் மற்றும் மின்னணுவியலில் பொறியியல் பட்டயம் அல்லது (இ) மின் கம்பியாள் தொழிற்பிரிவில் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்
45.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	i) மேல்நிலை (பிளஸ் 2) தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்வி நிறுவனங்களில் அல்லது திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள காந்தி கிராம ஊரக கல்வி நிறுவனம் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகம் அல்லது வேளாண்மை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் இரண்டு வருட வேளாண்மை பட்டயம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்
46.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	i) மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் ii) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட நிறுவனத்தில் / காந்தி கிராம ஊரக பல்கலைக்கழகம் / தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர் இயக்குநரகம் ஆகிய ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் இரண்டு வருட தோட்டக்கலை பட்டயம் பெற்றிருக்க வேண்டும் அல்லது அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தோட்டக்கலையில் பட்டயம் பெற்றிருக்க வேண்டும்
47.	தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பியல்)	3549	அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட அமைப்பியலில் பட்டயம்
48.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3550	அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்னியலில் பட்டயம்
49.	இளநிலை எரிப்பாளர்	3651	இளம் அறிவியலில் (வேதியியல்) பட்டம் அல்லது வேதிப் பொறியியலில் பட்டயம்
50.	இளநிலை முதலாள் (தொழிற்சாலை)	3652	இயந்திரப் பொறியியலில் பட்டயம்
51.	இளநிலை தொழில் வினைஞர் (இயக்கூர்தி கம்மியர்)	பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் கம்மியர் மோட்டார் வாகனம் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்
52.	இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்)		i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் மின் பணியாளர் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்
53.	இளநிலை தொழில் வினைஞர் (பற்ற வைப்பவர்)		i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் பற்ற வைப்பவர் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்

54.	இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்)		i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் பொருத்துநர் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய பழகுநர் பயிற்சி (NAC) சான்று பெற்றிருத்தல் அவசியம்
55.	இளநிலை தொழில் வினைஞர் (டீசல் கம்மியர்)	3656	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் டீசல் கம்மியர் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்
56.	இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெப்பநிலை கட்டுப்படுத்தும் கம்மியர்)	3661	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் குளிர்பதன கம்மியர் தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்
57.	இளநிலை தொழில் வினைஞர் (உலோகத்தகடு)	3660	i) பத்தாம் வகுப்பில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ii) தொழிற் பயிற்சி பள்ளியில் உலோகத்தகடு தொழிற்பிரிவில் பயின்று தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) பெற்று இருக்க வேண்டும் iii) பழகுநர் சட்டம் 1961/1973-ன் கீழ் தொழில் பழகுநர் பயிற்சியை ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பெற்று அதற்குரிய தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் (NAC) பெற்றிருத்தல் அவசியம்
58.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3591	மின்னியல் மற்றும் மின்னணுப் பொறியியலில் பட்டயம் அல்லது அதற்கு இணையானது

4.2.1. தேர்வர்கள் இவ்வறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி, தொழில்நுட்பத் தகுதி மற்றும் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். பதவிக்கான நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை பெற்ற பின்னர் அனுபவம் மற்றும் பயிற்சி காலத்திற்கான தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

4.2.2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பட்டயம் / தொழிற்பயிற்சி / தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / இளங்கலைப் பட்டம்/ முதுகலைப்பட்டம் / கல்வித்தகுதி முறையே 10-ஆம் வகுப்பு + 12-ஆம் வகுப்பு / பட்டயப்படிப்பு / தொழிற் பயிற்சி சான்றிதழ் அல்லது இணைக்கல்வித் தகுதி + இளங்கலையில் பட்டம் + முதுகலைப்பட்டம் என்ற வரிசையில் பெற்றிருக்க வேண்டும்.

4.2.3. கல்வி தகுதியானது பட்டயம் என நிர்ணயிக்கப்பட்ட பதவிகளுக்கு அந்த பாடத்தில் பட்டக்கல்வி பெற்றிருப்பது உயர் தகுதியாக கருதப்படும். தேர்வர்கள் அப்பாடத்தில் பட்டக்கல்வித் தகுதி கொண்டிருந்தாலும் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக் குறியீடு:3101) மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவிக் குறியீடு:3104) பதவிகளைத் தவிர மற்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவார்.

4.2.4. இரண்டு வருட வேளாண்மை பட்டயக் கல்வித் தகுதி இல்லாத தேர்வர்கள் அதே பாடத்தில் உயர் கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக் குறியீடு:3101) பதவிக்கும், இரண்டு வருட தோட்டக்கலை பட்டயக் கல்வித் தகுதி இல்லாத தேர்வர்கள் அதே பாடத்தில் உயர் கல்வித்தகுதி பெற்றிருந்தாலும் உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவிக் குறியீடு:3104) பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர். மேலும் வேளாண்மை தொழில்நுட்பத்தில் மூன்று வருட பட்டயக் கல்வித் தகுதி கொண்டவர்கள் உதவி வேளாண்மை அலுவலர் (பதவிக்குறியீடு: 3101) பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

4.2.5. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கத்தின் பல்வேறு கோட்டங்களில் உள்ள இளநிலை தொழில்வினைஞர் (பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க) (கம்மியர் மோட்டார் வாகனம், மின்

பணியாளர், பற்றவைப்பவர், பொருத்துநர், டீசல் கம்மியர், தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் கம்மியர் மற்றும் உலோகத்தகடு) பதவிகளுக்கு தொழிற்பயிற்சி சான்று பெறாமல் அதே பாடப்பிரிவில் உயர் கல்வித் தகுதி பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

4.2.6. ஆதாரச் சான்றுகள்:

4.2.6.1. பத்தாம்வகுப்பு / மேல்நிலைக்கல்வி / தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / தொழிற்பயிற்சி சான்றிதழ் / பட்டயம் / பட்டம் / முதுகலைப்பட்டம் / ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டம் அல்லது அப்படிப்புகளுக்கான தற்காலிக பட்டம் / தற்காலிக பட்டய சான்றிதழ் அல்லது ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழுடன் தற்காலிக / இறுதி சான்றிதழ் ஆகியவை கல்வித்தகுதிக்கு ஆதாரமானவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

4.2.6.2. தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய பழகுநர் பயிற்சி சான்றிதழ் / தொழிற்பயிற்சி / பட்டயம் / பட்டப்படிப்பு / முதுகலைப்பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அறிவிக்கை தேதிக்குப் பின்னர் வழங்கப்பட்டிருப்பின், தேர்வர்கள் தங்களது கல்வித்தகுதியை அறிவிக்கைதேதி அன்று அல்லது அறிவிக்கைத்தேதிக்கு முன்னர் பெற்றதற்கு ஆதாரமான ஆவணங்களை அதாவது தற்காலிக பட்டயம் / தொழிற்பயிற்சி / பட்டச்சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை VI ல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் உள்ளவாறு நிறுவனம் / பல்கலைக்கழகத்தின் தலைவரிடம் சான்று பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.3. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட அதிகமான கல்வித்தகுதியைப் பெற்றிருப்பதாக உரிமைகோரும் தேர்வர், அதற்கு ஆதாரமாக அறிவிக்கை நாள் அன்றோ அதற்கு முன்னரோ பெறப்பட்ட சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.4. வேதியியலாளர், நிலை I (பதவிக் குறியீடு: 3679) மற்றும் விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் (பதவிக் குறியீடு: 1731) ஆகிய பதவிகளுக்கு அனுபவம் கோரும் தேர்வர்கள் அவர்களது அனுபவ சான்றிதழினை இவ்வறிவிக்கையில் பிற்சேர்க்கை V-ல் உள்ள அனுபவ சான்றின் படிவத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.6.5. கல்வித்தகுதி / தொழில்நுட்பத் தகுதி / அனுபவம் ஆகியவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட படிப்புக்கான காலஅளவு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேர்வுகளில், விண்ணப்பத்தில் உள்ள உரிமை கோரலுக்கும் பதிவேற்றப்பட்ட ஆவணங்களுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின், தேர்வரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2.6.6. பட்டப்படிப்புச் சான்றிதழ் தொலைந்து விட்டாலோ அல்லது குறிப்பிட்ட காரணங்களுக்காக உடனடியாக சான்றிதழ் கிடைக்கப் பெறாமலிருந்தாலோ, பட்டப்படிப்புச் சான்றிதழ் பதிவேட்டின் சுருக்கக்குறிப்பு கல்வித்தகுதிக்கு சான்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

4.2.6.7. இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்போதே இணைக்கல்வித் தகுதியைக் கோரும் தேர்வர்கள் அதற்குரிய அரசாணையின் நகலினை பதிவேற்றம் செய்ய வேண்டும், தவறினால் அவர்களின் விண்ணப்பம் உரிய நடைமுறைக்குப் பின்பு நிராகரிக்கப்படும். இணைக்கல்வித் தகுதி தொடர்பான அரசாணைகள் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் இணையதளத்தில் (www.tnsche.tn.gov.in) உள்ளன. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்ட இணைக்கல்வித் தகுதி தொடர்பான அரசாணைகள் இந்தத் தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4.3. மருத்துவ மற்றும் உடற்தகுதி:

4.3.1. பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் உடல் தகுதிச் சான்றிதழை பணி நியமனத்தின் போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.2. பின்வரும் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வர்களின் பார்வைத்திறன் கீழே குறிப்பிட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	பார்வைத் தரம்
1.	வேதியியலாளர், நிலை-I	3679	தரம் III அல்லது மேம்பட்ட தரம். நிறக்குருடு அல்லது மாலைக்கண் குறைபாடு தகுதியில்லை
2.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க	
3.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	

4.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3591	தரம் III அல்லது மேம்பட்ட தரம். நிறக்குருடு மற்றும் மாலைக்கண் குறைபாடு தகுதியில்லை
5.	இளநிலை பொறியாளர்	3662	தரம் III அல்லது மேம்பட்ட தரம். நிறக்குருடு தகுதியில்லை
6.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	
7.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	
8.	சுரங்க அளவர்	3674	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
9.	உதவி மேலாளர் (சுரங்கம்)	3654	
10.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	
11.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	
12.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3547	
13.	அளவர்	3378	
14.	தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பியல்)	3549	
15.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3550	
16.	இளநிலை எரிப்பாளர்	3651	
17.	இளநிலை முதலாள் (தொழிற்சாலை)	3652	
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (கட்டிடக்கலை வரைவாளர்)	3615	
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பு)	3618	
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (அமைப்பியல் வரைவாளர்)	3620	
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம்)	3624	
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (உணவு தயாரிப்பு)	3626	
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627	
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (ஆலையில் தளவாட உதவியாளர்)	3628	
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629	

32.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் தானியங்கி வாகனங்கள் பழுது பார்த்தல்)	3632	
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்)	3633	
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635	
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்பட்ட இயந்திர கருவிகள் இயக்குபவர்)	3638	
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்)	3639	
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர்)	3641	
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (சூரிய மின்சக்தி தொழில்நுட்பவியலாளர் (மின்))	3642	
45.	இளநிலை பயிற்சி அலுவலர் (நில அளவையாளர்)	3643	
46.	இளநிலை பயிற்சி அலுவலர் (மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர்)	3644	
47.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்)	3645	
48.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	
49.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	
50.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648	
51.	இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	பத்தி 3-ல் உள்ள அட்டவணை யினைக் காண்க	
52.	இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்)		
53.	இளநிலை தொழில் வினைஞர் (பற்ற வைப்பவர்)		
54.	இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்)		

55.	இளநிலை தொழில் வினைஞர் (டீசல் கம்மியர்)	3656	தரம் III அல்லது மேம்பட்ட தரம்
56.	இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் கம்மியர்)	3661	
57.	இளநிலை தொழில் வினைஞர் (உலோகத்தகடு)	3660	
58.	உதவி ரப்பர் தயாரிப்பாளர்	3258	

4.3.3. பார்வைத்திறனில் குறைபாடு உள்ள தேர்வர்கள் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் தகுதிவாய்ந்த கண்சிகிச்சை நிபுணரிடமிருந்து கண்பார்வைத் திறன் சான்றிதழ் பெற்று பணியில் சேரும்போது பணிநியமன அலுவலரிடம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

4.3.4. வேதியியலாளர், நிலை-I (பதவி குறியீடு.3679), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் (பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க), இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் (பதவி குறியீடு.1853), தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) (பதவி குறியீடு: 3591), இளநிலை பொறியாளர் (பதவி குறியீடு.3662), உதவி வேளாண்மை அலுவலர் (பதவி குறியீடு.3101), உதவி தோட்டக்கலை அலுவலர் (பதவி குறியீடு.3104) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை VI-ல் குறிப்பிட்டுள்ளவாறு அரசு மருத்துவனையில் பணிபுரியும் கண் மருத்துவ நிபுணரிடமிருந்து கண் தகுதி சான்றிதழினை பெற்று இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் மேற்கண்ட பதவிகளுக்கு பரிசீலனை செய்யப்படமாட்டாது.

4.3.5. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம், மின் பணியாளர், பற்ற வைப்பவர், பொருத்துநர், டீசல் கம்மியர், தட்பவெப்பநிலை கட்டுபடுத்தும் தொழில் நுட்பவியலாளர் மற்றும் உலோகத்தகடு) ஆகிய பதவிகளுக்கு

4.3.5.1. தேர்வர்கள் கீழ்கண்ட குறைந்தபட்ச உடற்தகுதிகளை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்;

உயரம் (செ.மீ)	எடை (கி.கி)
152	45

4.3.5.2. மேற்குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச உடற்தகுதிகளைப் பெற்றிருக்கும் தேர்வர்கள் மட்டுமே இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர். இளநிலை தொழில் வினைஞர் பதவிகளுக்கு (பதவிக் குறியீடு: பத்தி 3-ல் உள்ள அட்டவணையைக் காண்க) விண்ணப்பிக்கும் தேர்வர்கள் உடற்தகுதிச் சான்றிதழை பிற்சேர்க்கை VI-ல் உள்ள படிவத்தில் அரசு மருத்துவ நிறுவனங்களில் பணியாற்ற அரசால் நியமிக்கப்பட்ட உதவி மருத்துவர் நிலைக்கு மேல் உள்ள மருத்துவ அலுவலரிடம் பெற்று, இணையவழி விண்ணப்பத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களின் விண்ணப்பம் அப்பதவிகளுக்கு பரிசீலனை செய்யப்படமாட்டாது.

4.3.5.3. மூத்த சிவில் அறுவை சிகிச்சை நிபுணர், சிவில் அறுவை சிகிச்சை நிபுணர், மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணர், நிலைய மருத்துவ அதிகாரி, உதவிப் பேராசிரியர், மூத்த உதவிப் பேராசிரியர், மருத்துவப் பேராசிரியர் மற்றும் குழந்தை மருத்துவப் பேராசிரியர் ஆகியோர் உடற்தகுதிச் சான்றிதழை வழங்குவதற்கு தகுதிவாய்ந்த அலுவலர்கள் ஆவர்.

4.4. தமிழ் மொழியில் தகுதி:

4.4.1. தேர்வர்கள் தேர்வு அறிவிக்கை வெளியாகும் நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். பின்வரும் தகுதியைப் பெற்றிருக்கும் ஒருவர் தமிழில் போதிய தகுதி உடையவராகக் கருதப்படுவார். பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியில் / உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் / மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் / பட்டப் படிப்பில், தமிழை ஒருமொழிப் பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; அல்லது உயர்நிலை பள்ளிப்படிப்பை / பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்..

4.4.2. தேர்வர் தங்களது பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு / இளங்கலை பட்டம் / முதுகலைப் பட்ட மதிப்பெண் சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றையோ, தமிழில் இரண்டாம்நிலை மொழித்தேர்வில் (முழுத்

தேர்வு) தேர்ச்சி பெற்றதற்கான சான்றையோ இணையதளத்தில் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும்போது அவற்றை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.4.3 போதிய தமிழறிவுப் பெற்றதற்கான சான்றாவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் தேர்வர், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் (தமிழில்) தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

4.5. தேர்வுக்கு விண்ணப்பித்தலில் உள்ள கட்டுப்பாடுகள்:

4.5.1. அனுபவம் கோரப்படும் பதவிகள் தவிர மற்ற பதவிகளுக்கு ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., பி.வ.(இ.அ) மற்றும் பி.வ.(இ) தவிர "ஏனையோர்" இந்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசு / யூனியன் பிரதேசப் பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் முறையான பணியில் பணிபுரிந்தவர்கள் இப்பதவிகளுக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

4.5.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் கீழ்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

வ. எண்	**பதவியின் பெயர்**	**பதவிக் குறியீடு**	**துறை / நிறுவனம்**
1.	வேதியியலாளர், நிலை-I (பீங்கான் தொழில்நுட்ப நிறுவனம், விருத்தாச்சலம்)	3679	தொழில் மற்றும் வணிகம்
2.	சுரங்க அளவர்	3674	தமிழ்நாடு கனிமவள நிறுவனம்
3.	உதவி மேலாளர் (சுரங்கம்)	3654	தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

4.6. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான பொருத்தமென அடையாளப் படுத்தப்பட்ட பதவிகள்

4.6.1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீட்டிற்கு, ஏற்றதாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

வ. எண்	**பதவியின் பெயர்**	**பதவிக் குறியீடு**	**பொருத்தமான நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளின் வகைகள்**
1.	இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	அனைத்து வகைகளும்
2.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	
3.	இளநிலை வரைதொழில் அலுவலர்	3547	
4.	அளவர்	3378	
5.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க	
6.	இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம்)		
7.	இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்)		
8.	இளநிலை தொழில் வினைஞர் (பற்றவைப்பவர்)		
9.	இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்)		
10.	இளநிலை தொழில் வினைஞர் (டீசல் கம்மியர்)	3656	
11.	இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் கம்மியர்)	3661	
12.	இளநிலை தொழில் வினைஞர் (உலோகத்தகடு)	3660	
13.	இளநிலை பயிற்சி அலுவலர் (கட்டடக்கலை வரைவாளர்)	3615	
14.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	
15.	இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பு)	3618	

16.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	அனைத்து வகைகளும்
17.	இளநிலை பயிற்சி அலுவலர் (அமைப்பியல் வரைவாளர்)	3620	
18.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	
19.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	
20.	இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	
21.	இளநிலை பயிற்சி அலுவலர் (நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம்)	3624	
22.	இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	
23.	இளநிலை பயிற்சி அலுவலர் (உணவு தயாரிப்பு)	3626	
24.	இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627	
25.	இளநிலை பயிற்சி அலுவலர் (ஆலையில் தளவாட உதவியாளர்)	3628	
26.	இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)	3629	
27.	இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	
28.	இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	
29.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் தானியங்கி வாகனங்கள் பழுது பார்த்தல்)	3632	
30.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்)	3633	
31.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	
32.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635	
33.	இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	
34.	இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	
35.	இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்பட்ட இயந்திர கருவிகள் இயக்குபவர்)	3638	
36.	இளநிலை பயிற்சி அலுவலர் (விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்)	3639	
37.	இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	
38.	இளநிலை பயிற்சி அலுவலர் (திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர்)	3641	
39.	இளநிலை பயிற்சி அலுவலர் (சூரிய மின் தொழில்நுட்பவியலாளர் (மின்))	3642	
40.	இளநிலை பயிற்சி அலுவலர் (நில அளவையாளர்)	3643	
41.	இளநிலை பயிற்சி அலுவலர் (மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர்)	3644	
42.	இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்)	3645	
43.	இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	
44.	இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	
45.	இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648	
46.	உதவி வேளாண்மை அலுவலர்	3101	
47.	தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பியல்)	3549	
48.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3550	
49.	இளநிலை எரிப்பாளர்	3651	
50.	இளநிலை முதலாள் (தொழிற்சாலை)	3652	

51.	தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3591	அனைத்து வகைகளும்
52.	உதவி ரப்பர் தயாரிப்பாளர்	3258	
53.	விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	கண் பார்வையின்மை தவிர மற்ற அனைத்து வகைகளும்
54.	உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	LV, HH, LD, CP, LC, DF, AC, MuD, ASD, SLD, MI
55.	இளநிலை பொறியாளர்	3662	LV, HI, HH, LD, LC, DF, AC, MD

சுருக்கம்:

LV	– Low Vision	CP	– Cerebral Palsy
VI	– Visually Impaired	LC	– Leprosy Cured
HH	– Hard of Hearing	AC	– Acid Attack Victims
HI	– Hearing Impaired	DF	– Dwarfism
LD	– Locomotor Disability	MuD	– Muscular Dystrophy
ASD	– Autism Spectrum Disorder	SLD	– Specific Learning Disability
MI	– Mentally Ill	MD	– Multiple Disabilities

4.6.2. மேற்குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளி வகையினைச் சேர்ந்த தேர்வர்கள் மட்டுமே இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். எனவே தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முன்னர் இதனை சரியாக படித்து இத்தேர்வுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. தேர்வு நடைமுறை:

5.1. ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) ஒரு படிநிலை எழுத்துத்தேர்வு உடையது. இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்ட உரிமைக்கோரல்களின் அடிப்படையில், தேர்வர் எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

5.2. தரவரிசை நடைமுறை:

5.2.1. எழுத்துத் தேர்வில் தேர்வர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் அல்லது தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். எழுத்துத் தேர்வில் (தாள்-I-ல் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II) மற்றும் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் இறுதி தரவரிசையை தீர்மானிக்கும்.

5.2.2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வர்கள் சம மதிப்பெண்களைப் பெற்றால், அதிக கல்வித் தகுதி பெற்ற தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.2.3. எழுத்துத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களும் கல்வித் தகுதியும் ஒரே மாதிரியாக இருப்பின், வயதில் மூத்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.2.4. வயதும் ஒரே மாதிரியாக இருப்பின், விண்ணப்ப எண்ணிலிருந்து தீர்மானிக்கப்பட்டபடி, ஆணையத்திற்கு முன்னதாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.3. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு முன் கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும். அறிவிக்கையில் பத்தி 6-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச மதிப்பெண் மற்றும் இடஒதுக்கீடு விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தகுதியான தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தால் இறுதி செய்யப்படும். தேர்வர்கள், கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:3 / 1:2 (அனுபவம் கோரப்படாத பதவிகளுக்கு) என்ற விகிதத்திலும், 1:5 (அனுபவம் கோரப்படும் பதவிகளுக்கு) என்ற விகிதத்திலும் அனுமதிக்கப்படுவார்கள்.

5.4. கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பின் போது, தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட அனுபவ சான்றிதழ்கள் உரிய துறைத்தலைமை / அமைப்பினரால் அமைக்கப்படும் குழுவினால் சரிபார்க்கப்படும். தேர்வர்களின் அனுபவ சான்றிதழினை உரிய நடைமுறைகளுக்குப் பின் இக்குழு நிராகரிக்கலாம். இக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

5.5. கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்குப் பின்னர், எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் இடஒதுக்கீடு விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வர்கள் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு (பொருந்தும் இடங்களில்) அனுமதிக்கப்படுவர். கலந்தாய்வு தேவைப்படும் பதவிகளுக்கு தேர்வர்கள் பொது மற்றும் அனைத்து ஒதுக்கீட்டு பிரிவினரும் முறையே 1:3 மற்றும் 1:1.5 என்ற விகிதத்தில் மூலசான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கும் அனுமதிக்கப்படுவர். கலந்தாய்வு தேவைப்படாத பதவிகளுக்கு அனைத்து பிரிவினரும் 1:1.2 என்ற விகிதத்தில் மூலசான்றிதழ் சரிபார்ப்பிற்கு மட்டும் அனுமதிக்கப்படுவர்.

5.6. நியமன ஒதுக்கீட்டு விதி பொருந்தாத ஒரேயொரு பணியிடத்தை மட்டும் கொண்ட பதவிகளைப் பொறுத்தவரை, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அனுமதிக்கப்படும் தேர்வர்களின் எண்ணிக்கை மூன்றாக இருக்கும்.

5.7. தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் (தாள்-I-ன் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II) பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும், நியமன இட ஒதுக்கீட்டு விதிகளுக்கு உட்பட்டும் இறுதி தெரிவு மேற்கொள்ளப்படும். தேர்வர்கள், அவர்களது தரவரிசையின் அடிப்படையில் கலந்தாய்வில் (பொருந்தும் இடங்களில்) பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

5.8. தேர்வர்கள் எழுத்துத் தேர்வின் தாள் I மற்றும் தாள் II தேர்விலும் கலந்து கொள்வது கட்டாயமாகும். தாள் I மற்றும் தாள் II ஆகிய இரண்டிலும் கலந்து கொள்ளாத தேர்வர்கள் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் கூட, தெரிவிற்கு கருதப்பட மாட்டார்.

6. தேர்வுத் திட்டம்:

<table>
<tr><th rowspan="2">பாடம்</th><th rowspan="2">தரம்</th><th rowspan="2">வினாக்களின் எண்ணிக்கை</th><th rowspan="2">நேரம்</th><th rowspan="2">அதிகபட்ச மதிப் பெண்கள்</th><th colspan="2">குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள்</th><th rowspan="2">தேர்வின் வகை</th><th rowspan="2">தேர்வு முறை</th></tr>
<tr><th>ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), பி.வ.(இ),</th><th>ஏனை யோர்*</th></tr>
<tr><td>தாள் I
பகுதி அ
தமிழ் தகுதித் தேர்வு</td><td rowspan="3">பத்தாம் வகுப்பு</td><td>100</td><td rowspan="3">3 மணி நேரம்</td><td>150</td><td>60</td><td>60</td><td rowspan="4">கொள் குறி வகை</td><td rowspan="3">OMR</td></tr>
<tr><td>பகுதி ஆ
பொது அறிவு</td><td>75</td><td rowspan="2">150</td><td rowspan="3">135</td><td rowspan="3">180</td></tr>
<tr><td>பகுதி இ
திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு</td><td>25</td></tr>
<tr><td>தாள் II
பாடத்தாள்</td><td>பட்டயம்/ தொழிற் பயிற்சி</td><td>200</td><td>3 மணி நேரம்</td><td>300</td><td>CBT</td></tr>
<tr><td colspan="4">மொத்தம் (தாள் I ல் பகுதி ஆ மற்றும் பகுதி இ மற்றும் தாள் II)</td><td>450</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="9">* ஏனையோர் - ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ, / சீ.ம, பி.வ.(இஅ), பி.வ.(இ) பிரிவினைச் சாராதவர்கள்</td></tr>
<tr><td colspan="9">OMR - ஒளிக்குறி உணரி CBT – கணினிவழித் தேர்வு</td></tr>
</table>

6.1. தாள் II – பாடத் தாள்

பதவியின் பெயர்	பதவிக் குறியீடு	பாடத் தாள்	பாடக் குறியீடு	தரம்	வினாத்தாள் மொழி
வேதியியலாளர், நிலை-I	3679	வேதிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்	452	பட்டயம்	ஆங்கிலம்
சுரங்க அளவர்	3674	அமைப்பியல் மற்றும் சுரங்கப் பொறியியல்	574	பட்டயம்	ஆங்கிலம்
உதவி மேலாளர் (சுரங்கம்)	3654	சுரங்கப் பொறியியல்	346	பட்டயம்	ஆங்கிலம்
இளநிலை பொறியாளர்	3662	அமைப்பியல் பொறியியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்	1853	கைத்தறி தொழில்நுட்பம், துணிநூல் தொழில்நுட்பம் மற்றும் துணிநூல் உற்பத்தி	445	பட்டயம்	ஆங்கிலம்
பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	பத்தி 3-ல் உள்ள அட்டவணையினைக் காண்க	அமைப்பியல் பொறியியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்

இளநிலை வரைதொழில் அலுவலர்	3115	அமைப்பியல் பொறியியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர்	1731	உடற்கல்வியியல்	354	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை வரைதொழில் அலுவலர்	3547	அமைப்பியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
உதவி ரப்பர் தயாரிப்பாளர்	3258	ரப்பர் மற்றும் பாலிமர் தொழில்நுட்பம்	576	பட்டயம்	ஆங்கிலம்
அளவர்	3378	தொழிற்பிரிவு: நில அளவையாளர்	387	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கட்டடக்கலை வரைவாளர்)	3615	தொழிற்பிரிவு: கட்டடக்கலை வரைவாளர்	531	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்)	3617	தொழிற்பிரிவு: அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்	532	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கணினி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பு)	3618	தொழிற்பிரிவு: கணினி வன்பொருள் மற்றும் வலைதள பராமரிப்பு	533	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்)	3619	தொழிற்பிரிவு: மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்	534	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (அமைப்பியல் வரைவாளர்)	3620	தொழிற்பிரிவு: வரைவாளர் (சிவில்)	388	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்)	3621	தொழிற்பிரிவு: பொறியியல் வரைபடம் மற்றும் வரைவாளர் (இயந்திரவியல் மற்றும் அமைப்பியல்)	551	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்னணுவியல்)	3622	தொழிற்பிரிவு: கம்மியர் மின்னணுவியல்	535	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (மின் பணியாளர்)	3623	தொழிற்பிரிவு: மின் பணியாளர்	438	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம்)	3624	தொழிற்பிரிவு: நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம்	570	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்)	3625	தொழிற்பிரிவு: பொருத்துநர்	436	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (உணவு தயாரிப்பு)	3626	தொழிற்பிரிவு: உணவு தயாரிப்பு (பொது)	536	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு)	3627	தொழிற்பிரிவு: தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சாதனங்கள் பராமரிப்பு	537	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (ஆலையில் தளவாட உதவியாளர்)	3628	தொழிற்பிரிவு: ஆலை தளவாட உதவியாளர்	569	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை	3629	தொழிற்பிரிவு: தொழிற்துறை எந்திரனியல் மற்றும்	538	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்

எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்)		எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்			
இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்)	3630	தொழிற்பிரிவு: இயந்திர வேலையாள்	539	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்)	3631	தொழிற்பிரிவு: பணிமனை கணக்கீடு அறிவியல்	540	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் தானியங்கி வாகனங்கள் பழுது பார்த்தல்)	3632	தொழிற்பிரிவு: கம்மியர் தானியங்கி வாகன பழுது பார்த்தல்	541	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்)	3633	தொழிற்பிரிவு: கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்	553	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்)	3634	தொழிற்பிரிவு: கம்மியர் மின்சார வாகனம்	542	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3635	தொழிற்பிரிவு: கம்மியர் மோட்டார் வாகனம்	437	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்)	3636	தொழிற்பிரிவு: உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்	543	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெட்பநிலை கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3637	தொழிற்பிரிவு: கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்	435	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்பட்ட இயந்திர கருவிகள் இயக்குபவர்)	3638	தொழிற்பிரிவு: மேம்பட்ட இயந்திர கருவி இயக்குபவர்	544	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்)	3639	தொழிற்பிரிவு: விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்	545	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில்நுட்பம்)	3640	தொழிற்பிரிவு: தையல் தொழில்நுட்பம்	546	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர்)	3641	தொழிற்பிரிவு: திறன்பேசி தொழில்நுட்பவியலாளர் மற்றும் செயலி சோதனையாளர்	547	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (சூரிய சக்தி தொழில் நுட்பவியலாளர் (மின்னியல்))	3642	தொழிற்பிரிவு: சூரிய சக்தி தொழில் நுட்பவியலாளர் (மின்னியல்)	548	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (நில அளவையாளர்)	3643	தொழிற்பிரிவு: நில அளவையாளர்	387	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர்)	3644	தொழிற்பிரிவு: மருத்துவ மின்னணுவியல் நுட்பவியலாளர்	549	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்

இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்)	3645	தொழிற்பிரிவு: துணிநூல் இயந்திர மின்னணுவியல்	568	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்)	3646	தொழிற்பிரிவு: கடைசலர், கருவி மற்றும் டை மேக்கர்	552	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்)	3647	தொழிற்பிரிவு: பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)	440	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை பயிற்சி அலுவலர் (கம்பியாள்)	3648	தொழிற்பிரிவு: கம்பியாள்	550	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
உதவி வேளாண்மை அலுவலர்	3101	வேளாண்மை	431	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
உதவி தோட்டக்கலை அலுவலர்	3104	தோட்டக்கலை	432	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பியல்)	3549	அமைப்பியல் பொறியியல்	443	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3550	மின்னியல் மற்றும் மின்னணுப் பொறியியல்	446	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)	3591	மின்னியல் மற்றும் மின்னணுப் பொறியியல்	446	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை எரிப்பாளர்	3651	வேதிப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்	452	பட்டயம்	ஆங்கிலம்
இளநிலை முதலாள் (தொழிற்சாலை)	3652	இயந்திரப் பொறியியல்	441	பட்டயம்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3655	தொழிற்பிரிவு: கம்மியர் மோட்டார் வாகனம்	437	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்)	3659	தொழிற்பிரிவு: மின் பணியாளர்)	438	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (பற்ற வைப்பவர்)	3658	தொழிற்பிரிவு: பற்ற வைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)	440	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்)	3657	தொழிற்பிரிவு: பொருத்துநர்	436	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (டீசல் கம்மியர்)	3656	தொழிற்பிரிவு: டீசல் கம்மியர்	521	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெட்பநிலை கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்)	3661	தொழிற்பிரிவு: கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பவியலாளர்	435	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்
இளநிலை தொழில் வினைஞர் (உலோகத்தகடு)	3660	தொழிற்பிரிவு: உலோகத்தகடு	520	தொழிற் பயிற்சி	ஆங்கிலம் மற்றும் தமிழ்

6.2. தேர்வர் தாள்-I-ன் பகுதி அ-ல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 40% (அதாவது 60 மதிப்பெண்கள்) பெற்றிருந்தால் மட்டுமே தாள்-I-ன் பகுதி ஆ, பகுதி இ மற்றும் தாள்-II மதிப்பீடு செய்யப்படும்.

6.3. தாள் I –ல் பகுதி ஆ மற்றும் பகுதி இ விற்கான வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.

6.4. மாற்றுத் திறனாளி தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் தாள்-I பகுதி-அ-வினை (தமிழ் தகுதித் தேர்வு) எழுதுவதிலிருந்து விலக்குப் பெறலாம். அத்தகைய விலக்கு கோரும் மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது தேவையான விவரங்களை தவறாமல் அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பின்னர் பெறப்படும் எந்த ஒரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்தகைய தேர்வர்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை II-இல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் மாற்றுத்திறனாளி சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

6.5. எழுத்துத் தேர்வுகளுக்கான பாடத்திட்டங்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை III-இல் உள்ளது. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலகு வாரியான கேள்விகளின் பகிர்மானம் உத்தேசமானது. தேவைப்பட்டால், ஒவ்வொரு அலகிலும் உள்ள கேள்விகளின் எண்ணிக்கையை ஓரளவு அதிகரிக்கவோ குறைக்கவோ தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

6.6. தேர்வின் போது பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள், இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை-IV இல் உள்ளன.

6.7. இவ்வறிவிக்கை ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி பதிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது. ஏதேனும், சந்தேகம் இருப்பின் ஆங்கில பதிப்பே இறுதியானதாகும்.

7. பணி நியமன இட ஒதுக்கீடு:

இத்தெரிவில் உள்ள அனைத்து பதவிகளுக்கும் இட ஒதுக்கீட்டு நியமன விதிகள் பொருந்தும். பல்வேறு இனங்களைச் சார்ந்த தேர்வர்களுக்கான இட ஒதுக்கீட்டு விவரங்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை II-இல் கொடுக்கப்பட்டுள்ளன. பணிநிலை எண்ணிக்கை 1 என்று நிர்ணயிக்கப்பட்ட வேதியியலாளர், நிலை-I (பதவிக் குறியீடு: 3679), இளநிலை பயிற்சி அலுவலர் (கட்டடக் கலை பட வரைவாளர்) (பதவிக் குறியீடு: 3615), இளநிலை பயிற்சி அலுவலர் (ஆலையில் தளவாட உதவியாளர்) (பதவிக் குறியீடு: 3628), இளநிலை பயிற்சி உதவியாளர் (கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம்) (பதவிக் குறியீடு: 3633) மற்றும் இளநிலை பயிற்சி உதவியாளர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்) (பதவிக் குறியீடு: 3645) ஆகிய பதவிகளுக்கு இடஒதுக்கீட்டு விதிகள் பொருந்தாது.

8. தேர்வர்களுக்கான தகவல் பரிமாற்றம்

8.1. தேர்வர்களுக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டு, தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு ஏதுவாக www.tnpscexams.in என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அனுமதிச்சீட்டு அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. தேர்வர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையினையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

8.2. எழுத்துத் தேர்வு முடிவுகள், சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வு நாள் மற்றும் நேரம் ஆகியவை தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்படும். தேர்வர்களுக்கு இதுகுறித்து தனியாக அஞ்சல் மூலமாக தகவல் அனுப்பப்படமாட்டாது. மேற்கூறிய தகவல் தேர்வர்கள் பதிவு செய்துள்ள அலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றிற்கு குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். எனவே தேர்வர்கள் இது தொடர்பாக தேர்வாணைய இணையதளத்தை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தவறான கைப்பேசி எண் / மின்னஞ்சல் முகவரி காரணமாகவோ அல்லது தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களாலோ தேர்வர்களை குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடையாவிட்டாலும், சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல், தாமதம் ஏற்பட்டாலும் தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாதது குறித்து தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

9. தேர்வாணையத்துடனான தகவல் தொடர்பு:

9.1. தெளிவுரை வேண்டும் தேர்வர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரிலோ அல்லது 1800 419 0958 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலமாகவோ, அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

9.2. ஒருமுறைப் பதிவு மற்றும் கணினிவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களை helpdesk@tnpscexams.in எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். இதர சந்தேகங்களை grievance.tnpsc@tn.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அஞ்சல் வழியாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அனைத்தும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தேர்வாணையச் சாலை, வ. உ. சி. நகர், பூங்கா நகர், சென்னை–600 003, எனும் முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

9.3. தேர்வர்கள் பின்வரும் விவரங்களுடன் தேர்வாணையத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்விவரங்கள் இல்லாமல் பெறப்படும் தகவல்கள் கவனிக்கப்படமாட்டாது.

அ) தேர்வின் பெயர்
ஆ) அறிவிக்கை எண் மற்றும் ஆண்டு
இ) பதிவு எண்
ஈ) தேர்வரின் பெயர் (முழுமையாக)
உ) விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள முழுமையான முகவரி
ஊ) தற்போது செயல்பாட்டில் உள்ள சரியான மின்னஞ்சல் முகவரி

9.4. வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரி வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டாது. எழுத்துத்தேர்வில் தோல்வியடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்கு காரணங்கள் கேட்டு அல்லது விடைப்புத்தகங்களை மறுமதிப்பீடு செய்யும்படி கேட்டு தேர்வர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டாது.

10. வழக்குகள்:

இத்தெரிவு தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு இத்தெரிவு தற்காலிகமானதாகும்.

செயலாளர்

பிற்சேர்க்கை – I

இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை

1. **இணையதளம்**: தேர்வர்கள் www.tnpscexams.in என்ற தேர்வாணையத்தின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **ஒருமுறைப் பதிவு:**

2.1. தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள ஒருமுறைப் பதிவு பிரிவில் பதிவு செய்த பின்பு தேர்விற்கான விண்ணப்பத்தினை நிரப்பத் தொடங்க வேண்டும். தேர்வர்கள் ஒருமுறைப்பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை செல்லுபடியாகும்.

2.2. ஒருமுறைப்பதிவின்போது, தேர்வர்கள் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து, 20KB - 50KB அளவில் "Photograph.jpg" என்றும், கையொப்பத்தினை 10KB - 20KB அளவில் "Signature.jpg" என்றும் CD / DVD / pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் 200 DPI என்ற அளவில் ஒளிச்செறிவு இருக்குமாறு சேமித்து, பதிவேற்றம் செய்வதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.

2.3. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது தேர்வரின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கென தனித்தனியே தன்விவரப்பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். தேர்வர் தேர்வு எழுதவிரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே கணினிவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

2.4. ஒரு முறைப்பதிவு (OTR) செய்வதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவை கட்டாயமாகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு தேர்வரும் தனக்கான தனி மின்னஞ்சல் முகவரியையும், கடவுச் சொல்லையும் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். எந்த தேர்வரும் தனது மின்னஞ்சல் முகவரி, கடவுச் சொல் மற்றும் அலைப்பேசி எண்ணை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தேர்வர் தமக்கான மின்னஞ்சல் முகவரி ஏதும் வைத்திருக்கவில்லையெனில், அவர் விண்ணப்பிப்பதற்கு முன்னரே, புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி கணினிவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒரு முறைப்பதிவு அல்லது கணினிவழி (Online) விண்ணப்பங்கள் சார்ந்த கேள்விகள் / கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் பெறப்பட்டால் மட்டுமே பதில் அளிக்கப்படும்.

2.5. தேர்வர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், தேர்வரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. தேர்வர் ஒருமுறைப்பதிவில் தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தேர்வரின் உண்மைத்தன்மையினை உறுதி செய்வதற்காக மட்டும் Central Identities Data Repository-(CIDR) க்கு ஆதார் தொடர்புடைய விவரங்களை தேர்வாணையம் பகிர்ந்துக்கொள்ளும். வருங்காலத்தில் விண்ணப்பிக்க இருக்கும் தேர்வர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப்பதிவில் உள்நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும்.

2.6. ஒருமுறைப்பதிவின் போது அளிக்கப்பட வேண்டிய தகவல்கள்

2.6.1. தேர்வர் கணினிவழியில் பதிவு செய்யும் பொழுது, பத்தாம் வகுப்பு (SSLC) பதிவு எண், சான்றிதழ் எண், தேர்ச்சி பெற்ற ஆண்டு, மாதம், பயிற்று மொழி மற்றும் சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக பதிவு செய்திருப்பது கண்டறியப்பட்டால், தேர்வுக்கான கணினிவழி விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2.6.2. பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சிக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வைத்திருக்கும் தேர்வர் தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

2.6.3. தேர்வர் பத்தாம் வகுப்பு (SSLC) தொடர்பான விவரங்கள் மட்டுமின்றி ஒருமுறை பதிவுக்குத் தேவையான மற்ற அனைத்து விவரங்களையும் எத்தகைய தவறுமின்றி கவனமுடன் அளிக்கவேண்டும். இவ்விவரங்கள், ஒவ்வொரு தேர்வுக்கும் இணையவழியில் விண்ணப்பிக்கும்போது தேர்வரால் அவ்வப்பொழுது அளிக்கப்படும் மற்ற அனைத்து விவரங்களுக்கும் அடிப்படையாக இருக்கும்.

2.7. **ஒருமுறைப் பதிவில் திருத்தம்**:

2.7.1. தேர்வர், ஒருமுறைப் பதிவில் அளித்துள்ள விவரங்களை, ஆதாரச் சான்றுகளை பதிவேற்றம் செய்து தேவைப்படும் பொழுது திருத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

2.7.2. ஒருமுறைப் பதிவில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், அதனை தேர்வர், இணையவழியில் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே சரி செய்து விட வேண்டும். தேர்வருடைய ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்கள் தானாகவே போட்டித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களில் நிரப்பப்படும் என்பதால், ஒருமுறைப் பதிவில் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறாக இருப்பின், அதன்விளைவாக அவர்களது இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். எனவே, தேர்வர் தங்களது ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்களை கவனமுடனும், சரியாகவும் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றார்.

2.7.3. ஒருமுறைப்பதிவு அல்லது இணையவழி விண்ணப்பங்களை நிரப்புவது குறித்த அறிவுரைகளை தேர்வர் பின்பற்றாததால் வரும் எந்த விளைவுகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

2.7.4. ஒருமுறைப் பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கங்கள் www.tnpscexams.in என்ற இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. **இணையவழி விண்ணப்பம்**:

3.1. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் "APPLY" என்ற உள்ளீடு வழியே ஒருமுறைப் பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். தேர்வர் ஏற்கனவே ஏற்படுத்திய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை மறந்துவிட்டால், அவற்றை "FORGOT PASSWORD" மற்றும் "FORGOT USER ID" ஆகிய விருப்பத் தெரிவுகள் மூலம் மீண்டும் பெறலாம் / உருவாக்கலாம். தேர்வருக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை தேர்வாணையம் வழங்காது.

3.2. ஏற்கனவே பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் தேர்வர் அதனைப் பயன்படுத்தி உள்நுழையலாம். ஒரு முறைப்பதிவில் ஏற்கனவே பதிவு செய்துள்ள புகைப்படம் உள்ளிட்ட விவரங்களுடன், முந்தைய இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களும் திரையில் தெரியவரும். தேர்வர் மேலும் தொடரும் முன், ஒரு முறைப்பதிவில் தங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை சரிபார்த்து மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டும். தேர்வாணையத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் போது, அதற்குரிய கூடுதலாக தேவைப்படும் விவரங்களையும் பதிய வேண்டும். தேர்வர் ஒரு முறைப்பதிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் ஏதேனும் தவறாக இருப்பின், OTR Edit என்ற விருப்பத் தெரிவின் மூலம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம். ஒரு முறைப்பதிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பங்களில் மட்டுமே தோன்றும்.



3.3. தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்ட அன்றோ, அதற்கு பிறகோ எடுக்கப்பட்ட புகைப்படத்தை இணையவழியில் ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும்போதும் தேர்வர் பதிவேற்றம் செய்ய வேண்டும். தேர்வர் தங்களது விண்ணப்பத்தில் கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (உயரம் 4.5 செ.மீ. [170 Pixels] மற்றும் அகலம் 3.5 செ.மீ. [130 Pixels]) வெள்ளைப் பின்னணியில், முகம் மற்றும் இரண்டு காதுகளும், கழுத்துப் பகுதியும் தெளிவாகத் தெரியுமாறு சரியான அளவு (Correct Size) மற்றும் சரியான படிவத்தில் (Correct Format), புகைப்பட ஸ்டூடியோவில் (Photo Studio) எடுக்கப்பட்ட வண்ணப் புகைப்படத்தினை மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி தெரியுமாறு அச்சிடப்பட்டிருக்க வேண்டும். புகைப்படத்தின் 4.5 செ.மீ. (170 Pixels) மொத்த உயரத்தில், தேர்வரின் படம் 3.0 செ.மீ. (115 Pixels) ஆகவும், தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி ஆகிய தகவல் 1.5 செ.மீ. (55 Pixels) ஆகவும் இருக்க வேண்டும். புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்வதற்கு டிஜிட்டல் வடிவில் CD / DVD / pen drive / hard drive போன்ற ஏதேனும் ஒன்றில் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

3.4. டிஜிட்டல் வடிவிலான புகைப்படம் இல்லையெனில், புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய (Passport Size) புகைப்படத்தினை ஒரு வெள்ளைத்தாளில் ஒட்டி, அத்தாளினை 200 DPI ஒளிச்செறிவு என்ற அளவில் ஸ்கேன் செய்து புகைப்படத்தை மட்டும் CROP செய்து 20 KB – 50 KB என்ற அளவில் "Photograph.jpg" என சேமித்து, அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படம் ஒட்டப்பட்ட முழுத்தாளினையும் ஸ்கேன் / பதிவேற்றம் செய்யக்கூடாது. சுயமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (Selfie), கைப்பேசியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், நகலெடுக்கப்பட்ட (Xerox) புகைப்படங்கள், குடும்ப விழாக்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், மரம், செடி, கொடி, கட்டடங்கள் போன்ற பின்னணியைக் கொண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எவற்றையும் பதிவேற்றம் செய்யக்கூடாது. தேர்வரின் புகைப்படமின்றி வேறு இயற்கைக்காட்சிகள், விலங்குகள், கட்டடங்கள் போன்ற புகைப்படத்தினை பதிவேற்றம் செய்யக்கூடாது. இவ்வறிவுரைகளை மீறி, பொருத்தமற்ற புகைப்படங்களை பதிவேற்றம் செய்யும் தேர்வரின் இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.5. கையொப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு முன்பு, தேர்வர் ஒரு வெள்ளைத்தாளில் அகலம் 6.0 X உயரம் 2.0 செ.மீ. (230 Pixels X 75 Pixels) கொண்ட கட்டம் வரைந்து, அதில் நீலம் அல்லது கருப்பு நிற மை பேனாவைப் பயன்படுத்தி கையொப்பமிட வேண்டும். கையொப்பமிட்ட வெள்ளைத் தாளினை 200 DPI என்ற ஒளிச்செறிவில் ஸ்கேன் செய்து 10KB-20KB என்ற அளவில் "Signature.jpg" என சேமித்து அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3.6. தேர்வரின் தெளிவான புகைப்படம் மற்றும் கையொப்பம் உரிய அளவு மற்றும் வடிவத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். புகைப்படம் மற்றும் கையொப்பம் பதிவேற்றம் செய்யப்படாமலோ / பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படம் மற்றும் கையொப்பம் தெளிவாக இல்லாமலோ இருப்பின், இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.7 **தேர்வு மையங்கள்:**

3.7.1. தேர்வர் இணையவழியில் விண்ணப்பிக்கும் போது, எழுத்துத் தேர்விற்கு இரண்டு மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுத்த இரு மாவட்டங்களுள் ஏதேனும் ஒன்றில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒன்றில் அவர் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார். நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி தேர்வரைப் பொறுத்தவரையில், ஒரு மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட அதே மாவட்டத்தில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒரு தேர்வு மையத்தில் அவர் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார்.

3.7.2. தேர்வர்கள் அவர்களுக்கு (அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையங்களை மாற்றக் கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.7.3. தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ / குறைக்கவோ அல்லது தேர்வர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு. தேர்வர் தெரிவு செய்த தேர்வு மையங்களில் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில், அருகில் உள்ள தேர்வு மையத்தில் ஒதுக்கீடு செய்யவும் தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

3.7.4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும்.

வ.எண்	தேர்வு மையத்தின் பெயர்	மைய எண்.	வ.எண்	தேர்வு மையத்தின் பெயர்	மைய எண்.
1.	அரியலூர்	3001	21.	இராணிப்பேட்டை	3501
2.	செங்கல்பட்டு	3301	22.	சேலம்	1701
3.	சென்னை	0101	23.	காரைக்குடி	1805
4.	கோயம்புத்தூர்	0201	24.	தென்காசி	3601
5.	சிதம்பரம்	0303	25.	தஞ்சாவூர்	1901
6.	தர்மபுரி	0401	26.	நீலகிரி	1301
7.	திண்டுக்கல்	0501	27.	தேனி	2001
8.	ஈரோடு	0601	28.	திருவள்ளூர்	2101
9.	கள்ளக்குறிச்சி	3401	29.	திருவண்ணாமலை	2201
10.	காஞ்சிபுரம்	0701	30.	திருவாரூர்	2301
11.	நாகர்கோவில்	0801	31.	தூத்துக்குடி	2401
12.	கரூர்	0901	32.	திருச்சிராப்பள்ளி	2501
13.	கிருஷ்ணகிரி	3101	33.	திருநெல்வேலி	2601
14.	மதுரை	1001	34.	திருப்பத்தூர்	3701
15.	மயிலாடுதுறை	3801	35.	திருப்பூர்	3201
16.	நாகப்பட்டினம்	1101	36.	வேலூர்	2701
17.	நாமக்கல்	1201	37.	விழுப்புரம்	2801
18.	பெரம்பலூர்	1401	38.	விருதுநகர்	2901
19.	புதுக்கோட்டை	1501			
20.	இராமநாதபுரம்	1601			

3.8. **விண்ணப்பத்தை சரிபார்க்க வாய்ப்பு**:

3.8.1. தேர்வர் இணையவழி விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விவரங்களை அதற்குரிய இடங்களில் கவனமுடன் பூர்த்தி செய்த பின், விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "SAVE AND PROCEED" என்ற பொத்தானை அழுத்த வேண்டும். தேர்வர் "SAVE AND PROCEED" பொத்தானை அழுத்துவதற்கு முன், விண்ணப்பத்தின் ஒவ்வொரு குறிப்பிட்ட கலத்தையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

3.8.2. தேர்வர் தமது இணைய வழி விண்ணப்பத்தினை நிரப்பும் பொழுது விண்ணப்பத்தினை திருத்தவோ / தகவல்களை சேர்க்கவோ / நீக்கவோ முடியும். விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பத்தினை சரிபார்க்க வாய்ப்பு வழங்கப்படும். இதன்படி "PREVIEW" பொத்தானை அழுத்துகின்ற போது தேர்வரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு விண்ணப்பத்தின் PREVIEW அனுப்பப்படும். இத்தகவல் தேர்வரின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படும்.

3.8.3. இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, தேர்வர் மேற்குறிப்பிடப்பட்ட வரைவு விண்ணப்பத்தில் (Preview) உள்ள விவரங்களை கவனமாக சரிபார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை சரிசெய்து கொள்ள வேண்டும். இப்பணியினை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் நேரம் வரை மேற்கொள்ளலாம். விண்ணப்பம் இறுதியாக சமர்ப்பிக்கப்படாமலோ அல்லது ஏதேனும் விவரங்கள் விடுபட்டிருந்தாலோ அதற்கு தேர்வர் மட்டுமே முழு பொறுப்பாவார்.

3.8.4. தேர்வர் இறுதியாக சமர்ப்பி (Submit) என்ற பொத்தானை அழுத்துவதன் வாயிலாகவே அவர் ஒரு பதவிக்கு இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என கருதப்படும். தேர்வர் அவருக்கு கிடைக்கப்பெற்ற preview-ஐ மட்டும் கொண்டு எவ்வகையிலும் அவர் ஒரு குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார் எனக் கருத இயலாது.

3.9. **தேர்வுக் கட்டணம்:**

3.9.1. தேர்வுக் கட்டணச் சலுகை கோராத தேர்வர்கள் எழுத்துத் தேர்விற்கு தேர்வுக் கட்டணமாக ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது செலுத்த வேண்டும்.

3.9.2. தேர்வர்கள் இணையவழியில் விண்ணப்பிக்கும் போது கூடுதலாக தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு பாடத்தாளுக்கும் ரூ.100 கூடுதலாக கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும் தேர்வர்கள் ஒன்று (அ) அதற்கு மேற்பட்ட பாடத்தாள்களை திரும்ப பெறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டணம் திரும்ப வழங்கப்பட மாட்டாது.

3.9.3. சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த தேர்வர்கள் அப்பிரிவுகளின் அடிப்படையில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரலாம். மேலும் விவரங்களுக்கு அறிவிக்கையில் உள்ள பிற்சேர்க்கை – II ஐ பார்க்கவும்.

3.9.4. முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட உரிமைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக் கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். தேர்வர் பெறும் இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும். தேர்வர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டண விலக்கு தவறாகக் கோரும்பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படுவதுடன், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு விலக்கி வைக்கப்படுவார்.

3.9.5. தேர்வர் தேர்வுக் கட்டண விலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற விருப்பத்தினை கவனமாக தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார். விண்ணப்பம் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், தெரிவு செய்யப்பட்ட விருப்பங்களை மாற்றம் செய்யவோ, திருத்தம் செய்யவோ இயலாது. தேர்வர், தேர்வர்களின் தன்விவரப்பக்கத்தின் <Application History>-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக் கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் சொந்த நலன் கருதி கணக்கிட்டு வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

3.9.6. கட்டணச் சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது (விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளைப் பொருட்படுத்தாமல்) தேர்வருக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒரு வாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும். அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவச வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட தேர்வர் / தேர்வுக் கட்டணச் சலுகையைப் பெற விரும்பாத தேர்வர் / தேர்வுக் கட்டணச் சலுகைக்கு தகுதியற்ற தேர்வர் தேர்வுக் கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு எதிரே "இல்லை" என்ற விருப்பத்தினை தெரிவு செய்ய வேண்டும். அத்தேர்வர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை மூலம் தேவையான கட்டணத்தினை பின்னர் செலுத்தலாம்.

3.9.7. தேர்வர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.10. **தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை:**

3.10.1. இணையவழி விண்ணப்பத்தில் உரிய விவரங்களைப் பதிவு செய்த பின்னர், விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குள் தேர்வர் தேர்வுக் கட்டணத்தை இணைய வழியில் (அதாவது இணைய வங்கி / பற்று அட்டை / கடன் அட்டை/ ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்(UPI)) மூலம் ஏதேனும் ஒரு முறையினை தேர்வு செய்து செலுத்த வேண்டும். தேர்வர் உரிய சேவைக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும்.

3.10.2. இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை / அஞ்சலக காசோலை போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் அவை திரும்ப வழங்கப்படமாட்டாது.

3.10.3. தேர்வர் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையை தெரிவு செய்த பின், விண்ணப்பத்தில் அதற்குரிய கூடுதல் பக்கம் திரையில் தெரியவரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றி, தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம்

செலுத்த வேண்டும். இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறையில் பணப் பரிமாற்றம் தோல்வியடையும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்படும் நிலையில், தேர்வர் ஏற்கனவே செய்த பணப் பரிமாற்ற நிலவரத்தினை சரிபார்க்க முடியும். ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணப்பரிமாற்றம் தோல்வியடைந்திருப்பின், தேர்வர் மீண்டும் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையினைத் தேர்ந்தெடுத்து பணம் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்பட்டால் தேர்வர் கணக்கில் பிடித்தம் செய்யப்படும் தொகை தேர்வர் கணக்கிலேயே திருப்பி சேர்க்கப்படும். தேர்வர் மேற்கொண்ட பணப்பரிமாற்ற நிலவரத்தை அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்ட அனைத்துப் பணப் பரிமாற்றங்களிலும் தோல்வி ஏற்படும் நிலையில், தேர்வர் மீண்டும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் தடைகளுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. எனவே, கட்டணம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதை உறுதி செய்து கொள்வது தேர்வரின் பொறுப்பாகும்.

3.10.4. இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் போது கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர், அதற்கான தகவல் திரையில் வரும்வரை காத்திருக்கவும். இதற்கிடையில் "Back" அல்லது "Refresh" பொத்தான்களை அழுத்தாமல் காத்திருக்க வேண்டும். இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும் அல்லது இரண்டாம் முறையாகப் பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.

3.10.5. இணையவழிப் பணப் பரிமாற்றம் வெற்றிகரமாக நிறைவுற்றவுடன், ஒரு விண்ணப்ப எண் / தேர்வருக்கான அடையாளக் குறியீடு திரையில் தோன்றும். தேர்வர் அந்த விண்ணப்ப எண்/ தேர்வருக்கான அடையாளக் குறியீடு ஆகியவற்றை அந்தத் தேர்வின் எதிர்காலத் தேவைக்காக குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3.10.6. கட்டணம் செலுத்தும் முறையினை எந்நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உண்டு.

3.11. **இணையவழி விண்ணப்பத்தில் திருத்தம்**:

3.11.1. இணையவழி விண்ணப்பத்தில் அளித்துள்ள அனைத்து விவரங்களையும், தேர்வர் அவ்விணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி தேதி வரை திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

3.11.2. தேர்வர் தமது இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள புகைப்படம் மற்றும் / அல்லது கையொப்பத்தினை மாற்றம் செய்ய விரும்பினால், இணைய வழி விண்ணப்பத்தில் உள்ள EDIT ல் சென்று அவற்றை மறுபதிவேற்றம் செய்து இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும்.

3.11.3. இணையவழி விண்ணப்பத்தில் உள்ள தகவல்களில், சில தகவல்கள் தேர்வரின் ஒருமுறைப் பதிவில் இருந்து முன் கொணரப்பட்டவை. எனவே, அத்தகவல்களைத் திருத்தம் செய்வதற்கு தேர்வர், முதலில் தனது ஒருமுறைப் பதிவில் (OTR) ல் உள்ள Edit profile-ல் சென்று உரிய திருத்தங்களை செய்து, அவற்றை சேமிக்க வேண்டும். அதன் பின்னர், இணையவழி விண்ணப்பத்தில் உள்ள EDIT-ல் சென்று விண்ணப்பத்தில் திருத்தம் செய்ய விரும்பும் விவரங்களை திருத்தம் செய்து, இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும். தேவைப்படின், அதற்குரிய நகலினை அச்சுப்பிரதி (Print Out) எடுத்துக் கொள்ளலாம்.

3.11.4. விண்ணப்பத்தில் திருத்தம் செய்த பிறகு, திருத்தப்பட்ட விவரங்களை இறுதியாக சேமித்து சமர்ப்பிக்கவில்லையென்றால், தேர்வர் இதற்கு முன்பு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். திருத்தம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில், தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், உரிய தேர்வுக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்தவேண்டும். உரியத் தேர்வுக் கட்டணத்தை ஏற்கனவே செலுத்திய தேர்வர்கள் மீண்டும் செலுத்தத் தேவையில்லை.

3.12. **விண்ணப்பத் திருத்தச் சாளரம்**:

3.12.1. இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்குப் பின்னர், அறிவிக்கையின் பத்தி 1 ல் முக்கிய அறிவுரைகளில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பத் திருத்தச் சாளரம் (Application Correction Window), மூன்று நாட்களுக்கு செயல்படுத்தப்படும். அப்போது தேர்வர்கள் இணையவழி விண்ணப்பங்களில் உள்ள விவரங்களை திருத்தம் செய்து கொள்ள இயலும் . விண்ணப்பத் திருத்தச்

சாளர காலத்தின் கடைசி தேதிக்குப் பின்னர், தேர்வர்கள் விண்ணப்பங்களில் மாற்றம் செய்ய இயலாது.

3.12.2. தேர்வர்களால் இறுதியாக அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும், இணைய வழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தம் செய்ததன் விளைவாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமாயின், அதற்கு தேர்வரே பொறுப்பாவார், தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைகோரல்களை மாற்றம் செய்வது குறித்து எந்தவொரு தகவல் தொடர்பு முறையிலும் பெறப்படும் கோரிக்கைகள் / முறையீடுகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

3.13. கடைசி நாளில் அதிகப்படியான தேர்வர்கள் விண்ணப்பிக்கும் போது, இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது. எனவே, தேர்வர் தேர்வுக்கு விண்ணப்பிக்கக் குறிப்பிட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே, போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

3.14. மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்கு மீறிய வேறு காரணங்களால், தேர்வர் தமது இணையவழி விண்ணப்பத்தினை கடைசி கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

3.15. தேர்வாணையம் குறிப்பிட்டுக் கேட்டாலன்றி, தேர்வர் இணைய வழி விண்ணப்பத்தின் நகலினையோ அல்லது தொடர்புடைய ஆதாரச் சான்றிதழ்களையோ தேர்வாணையத்திற்கு அஞ்சல் வழியாக அனுப்பத் தேவையில்லை.

3.16. தேர்வர் ஒரு முறைப் பதிவில் / இணையவழி விண்ணப்பத்தில் தமது பெயர் மற்றும் தங்களது தந்தை அல்லது தாயார் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச் சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

3.17. இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இடையே வேறுபாடிருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.18. தேர்வர் தமது இணையவழி விண்ணப்பத்தில் தரும் தவறான அல்லது முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களால் ஏற்படும் விளைவுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

3.19. **ஆவணங்கள் பதிவேற்றம்**:

3.19.1. தேர்வர்கள் தமது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள உரிமை கோரல்களுக்கான சான்றுகளை இத்தேர்விற்கான இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் போது கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட கால நேரத்திற்குள் சான்றுகளை பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

3.19.2. பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்களை தேர்வர்கள் தங்களது ஒருமுறைப் பதிவின் மூலம் சரிபார்த்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. ஏதேனும் சான்றிதழ்கள் தவறாகப் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாமல் இருந்தாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலோ, விண்ணப்பதாரர் விண்ணப்பித்திருந்த பதவிக்கான தேர்வு அனுமதிச் சீட்டினை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் இரண்டு நாளுக்கு முன்னர் வரை (அதாவது தேர்வு நடைபெற உள்ள தேதிக்கு பன்னிரெண்டு நாட்கள் முன்னர் வரை) சான்றிதழ்களை திருத்தம் / பதிவேற்றம் / மறுபதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

3.19.3. தேர்வர், எந்தப் பதவிக்கு விண்ணப்பித்தாரோ அந்த அறிவிக்கையின் எண் மற்றும் விண்ணப்ப எண்ணுடன் தேர்வரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள், அத்தேர்வரது ஒருமுறைப் பதிவில் இணைக்கப்படும். எனவே, அவற்றை தேர்வர் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

3.19.4. தேர்வரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்களது ஒருமுறைப்பதிவுடன் இணைக்கப்பட்டு அவ்விவரங்கள் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு கணினி சர்வரில் (Server) சேமித்து வைக்கப்படும். அதன் பின்னர் தேர்வர் வேறு ஏதேனும் பதவிகளுக்கு (அதாவது அவர்கள் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்) விண்ணப்பிக்கும் பொழுது, அவர்களால் ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக திரையில் காண்பிக்கப்படும் மற்றும் அவர்கள் மீண்டும்

அந்த ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. தேர்வர் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர், ஏதேனும் பதவிகளுக்கு விண்ணப்பித்தால் அவர்களது அனைத்து ஆவணங்களையும் புதியதாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

4. **குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்**:

4.1. இணையவழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள தேர்வர், அதுதொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக்குறிப்பாணை / காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2. தேர்வர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத்தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும்பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.3. தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன்வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் தேர்வர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய கோரும் நிலையில், தேர்வர் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய தேர்வருடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் இரத்து செய்யப்பட்டு, ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

4.4. நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், தேர்வரின் தெரிவு வாய்ப்புகளை (Selection Prospects) எவ்வகையிலும் பாதிக்காது. எனினும், மேற்கண்ட தகவல்களை தேர்வர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கத் தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.5. குற்றவியல் வழக்கு / ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள தேர்வர்களின் தேர்வு, நிலுவையில் உள்ள குற்றவியல் / ஒழுங்கு வழக்கின் முடிவுக்கு உட்பட்டு நிறுத்தி வைக்கப்படும்.

5. **பணி விவரங்கள்**:

5.1. தேர்வர், இணைய வழியில் விண்ணப்பிக்கும் போது, இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக் கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் இருப்பின், தங்களது பணி குறித்த விவரத்தினை தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும். தேர்வர், பணி குறித்த உண்மையை மறைக்கும் பட்சத்தில், அவரது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.2. தேர்வர், தங்களுடைய விண்ணப்பங்களை துறைத்தலைவர் வாயிலாகவோ அல்லது தாம் வகித்து வரும் பதவிக்கு நியமனம் செய்வதற்கு தகுதி பெற்ற அலுவலர் மூலமாகவோ அனுப்பத் தேவையில்லை. மாறாக, தமது துறைத் தலைவருக்கு, தாம் தேர்வாணையத்தின் எந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து, தெரிவாகும் பட்சத்தில் கீழ்க்கண்ட நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

தடையின்மைச் சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி--- (பெயர்) இவ்வலுவலகத்தில் ------------------- (பதவி) ஆக -------------------- முதல் (பணிநியமனம் செய்யப்பட்ட தேதியைக் குறிப்பிடவும்) நிரந்தரமாக / தற்காலிகமாக பணிபுரியும் தகுதிகாண் பருவத்தினர் / ஒப்புதல் அளிக்கப் பட்ட தகுதிகாண் பருவத்தினர் / முழு உறுப்பினர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட --- பணிகளில் உள்ள ………………………………… பதவிக்கான நேரடி நியமனத்திற்கு விண்ணப்பத்திருந்தார் என்ற தகவல் தனியரால் இத்துறைக்கு / நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

தனியரால் அளிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை எனக் கண்டறியப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரது விண்ணப்பத்தினை தேர்வாணையம் பரிசீலனை செய்வதில் இத்துறை / நிறுவனத்திற்கு தடையேதும் இல்லை* எனத் தெரிவிக்கப் படுகிறது.

நியமனஅதிகாரி
(ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை)

*நியமன அதிகாரி தடையின்மைச் சான்றிதழ் வழங்கும் போது, அரசு அலுவலருக்கு எதிராக துறைசார்ந்த / குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படக்கூடிய நிலையில் இருந்தாலோ அல்லது நிலுவையிலிருந்தாலோ, அதனை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தடையின்மைச் சான்றிதழுடன் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர், அந்த அரசு அலுவலர் தற்போதுள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியில் நியமனம் செய்யப்படும் நாள் வரை ஏதேனும் துறை ரீதியான அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் அவர் மீது தொடரப்பட்டால் அத்தகவலையும் நியமன அதிகாரி தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

5.3. தேர்வர், இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர், அரசுப் பணியில் சேர்ந்திருந்தால், தடையின்மைச் சான்றிதழையோ அல்லது குறைந்தபட்சம் அரசுப் பணியில் சேர்ந்த தகவலைத் தெரிவித்து தடையின்மைச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற ஓர் உறுதி மொழியினையோ பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.4. தேர்வர் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டாலோ / பணியறவு செய்யப்பட்டாலோ / பணியிலிருந்து விலகியிருந்தாலோ அத்தகவலை தேர்வர் தனது ஒருமுறைப்பதிவு Dashboard வாயிலாக தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.5. தெரிவுப் பணிகள் முழுமையாக முடிவடைவதற்கு முன்னர், தெரிவுப் பணியின் எந்த நிலையிலும், அவரது பணி நிலையில் ஏதேனும் மாற்றம் நேரிடின், அதாவது பணி நியமனம் செய்யப்பட்டாலோ அல்லது பணியிலிருந்து விலகியிருந்தாலோ, பணி நீக்கம் / பணியறவு செய்யப்பட்டாலோ அது குறித்த தகவலை தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.6. பணியில் உள்ள தேர்வர்கள், "தடையின்மைச் சான்றிதழைப்" பதிவேற்றம் செய்ய தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

பிற்சேர்க்கை - II

1. முன்னாள் இராணுவத்தினர்

1.1. "முன்னாள் இராணுவத்தினர்" என்பவர்

1.1.1. இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ அல்லது களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்ட பின், தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாமல் பணிபுரிந்து, 01.07.1979 முதல் 30.06.1987 வரையிலான காலத்தில் (இரண்டு நாட்களும் உட்பட) கீழ்க்கண்டவாறு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

அ. சொந்த வேண்டுகோளைத் தவிர்த்து பிற காரணங்களுக்காக, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது; அல்லது

ஆ. ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்து சொந்த விருப்பத்தில் வெளிவந்தவர் அல்லது

1.1.2. இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ அல்லது களவீரரல்லதவராகவோ) பணிபுரிந்து 01.07.1987 அன்றோ அதற்குப் பிறகோ அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

அ. அவருடைய சொந்த விருப்பத்தில் ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது

ஆ. இராணுவப் பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி மருத்துவ அல்லது இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்; அல்லது

இ. சொந்த விருப்பத்தினாலன்றி, படைக் குறைப்புக் காரணமாக ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது

ஈ. குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் பணிக்கொடை பெற்று வெளிவந்தவர்.

1.1.3. 15.11.1986 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற பிராந்திய இராணுவப் படையைச் சேர்ந்த பிராந்திய இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் (embodied) தொடர்ச்சியான பணிக்காக ஓய்வூதியம் பெற்றவர், படைப்பணியின் காரணமாக ஊனமடைந்தவர், வீரவிருது பெற்றவர்; அல்லது

1.1.4. இராணுவ அஞ்சல் பிரிவினைச் சேர்ந்த பின்வரும் வகையினர் தபால்தந்தித் துறையிலிருந்து இராணுவ அஞ்சல் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் தபால்தந்தித்துறைக்கு திரும்ப அனுப்பப்படாமல், இராணுவ அஞ்சல் பணியிலேயே 19.07.1989 அன்றோ அல்லது அதற்குப்பிறகோ ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள் அல்லது இராணுவப்பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி, மருத்துவ அல்லது வேறு பிறஇயலாமை ஓய்வூதியத்துடன் 19.07.1989 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ மருத்துவக் காரணங்களினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்; அல்லது

1.1.5. 14.04.1987 ஆம் நாளுக்கு முன்னர் ஆறு மாதங்களுக்கு மேலாக இராணுவ அஞ்சல் துறையில் மாற்றுப்பணியில் பணியாற்றியவர்; அல்லது

1.1.6. மருத்துவக் காரணங்களினால் விடுவிக்கப்பட்டவர் மற்றும் மருத்துவம் / இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்; அல்லது

1.1.7. இராணுவ விதி 13(3)III(V)-ன்கீழ் அவரது பணி இனிமேலும் தேவைப்படாத காரணத்தினால் ஜூலைத்திங்கள் 1987 அன்றோ அல்லது அதற்குப்பிறகு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்; அல்லது அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படக்கூடிய பிற நபர்கள்.

1.2. இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்கள் முன்னாள் இராணுவத்தினராக கருதப்பட மாட்டார்கள்.

1.3. இராணுவ விதி 13 (3)III (V)-ன்கீழ் பணி தேவைப்படாத காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு ஜூலைத்திங்களுக்கு முன் பணியிலிருந்து விலக்கப்பட்டவர், முன்னாள்படைவீரராகக் கருதப்பட மாட்டார்.

1.4. முன்னாள் இராணுவத்தினர் ஏதேனும் ஒரு பதவிப் பணியில் சேர்ந்து விட்ட பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

1.5. அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவவீரர்கள் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1.6. **தேர்வுக் கட்டணச் சலுகை**: இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

1.7. **நியமன ஒதுக்கீடு**: இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு இந்நியமனத் தேர்விற்கு பொருந்தும். ஊதிய நிலை 12 வரையுள்ள இவ்வறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு மட்டும் பொருந்தும். இந்நியமனத்திற்கான இடஒதுக்கீடு ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த தகுதியான மற்றும் பொருத்தமான முன்னாள் இராணுவத்தினர் ஒதுக்கீடு செய்யப்பட்ட முறை (Turn) க்கு தேர்வாகவில்லை எனில், அதே வகுப்புப் பிரிவைச் சேர்ந்த முன்னாள் இராணுவத்தினர் அல்லாத வேறொரு தேர்வரைக் கொண்டு அம்முறை நிரப்பப்படும்.

1.8. **ஆதார ஆவணங்கள்** :

1.8.1. தேர்வர் இராணுவம் அல்லது கடற்படை அல்லது விமானப் படையில் இருந்து விடுவிக்கப்பட்டவர் என உரிமை கோரும் பொழுது, கோரிக்கைகளுக்கு ஆதாரமாக, முன்னாள் இராணுவத்தினர் நலவாரியத்தால் வழங்கப்பட்ட அவரது பணிவிடுவிப்புச் (Discharge Certificate) சான்றிதழில் இருந்து கீழ்க்கண்ட படிவத்தில் உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பினையோ (Bonafide Certificate) அல்லது ஓய்வூதிய கொடுப்பாணையையோ (Pension pay order) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

முன்னாள் இராணுவத்தினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் படிவம்

1. தேர்வரின் பெயர்
2. வகித்த நிலை (பதவி), படையின் பெயர் (ஆயுதப் படை / கடற்படை / விமானப்படை)
3. படையில் சேர்ந்த நாள்
4. விடுவிக்கப்பட்ட நாள்
5. விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள்
6. முன்னாள் இராணுவத்தினர் என்பது குறிப்பிடப்பட வேண்டும்
7. ஓய்வூதியம் பெற்று வருபவரா
8. ஓய்வூதிய கொடுப்பாணை எண்
9. இராணுவத்தில் பணிபுரிந்த போது நடத்தையும் ஒழுக்கமும்
10. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்
11. படை எண்.
12. தனியர் தமிழ்நாடு அரசின் கீழ் ஏதேனும் ஒரு பதவியில் பணிபுரிந்து கொண்டிருக்கிறாரா? ஆம் எனில், வகிக்கும் பதவியின் பெயர் மற்றும் பணியில் சேர்ந்த நாள்.

1.8.2. அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவவீரர்கள் கீழ்க்கண்ட படிவத்தின் படி ஓர் உறுதிமொழிப் படிவத்தையும் மற்றும் அவர்களது படைப்பிரிவின் தலைவரிடமிருந்து (**Commanding Officer**) பெறப்பட்ட சான்றிதழையும் இணையவழி விண்ணப்பிக்கும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தேர்வரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உறுதிமொழி

நான் இந்த விண்ணப்பம் மூலமாக நேரடி நியமனத்தின் / தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டால், இராணுவப்படையிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளேன் / ஓய்வு பெற்றுள்ளேன் என்பது தொடர்பான ஆவணச் சான்றினை பணிநியமன அலுவலருக்கு திருப்தி அளிக்கும் வகையில் தாக்கல் செய்வேன் என்றும், நான் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 63-ன்படி முன்னாள் இராணுவத்தினருக்கான சலுகைகளைத் துய்க்க தகுதி பெற்றுள்ளேன் என்றும் இதன்மூலம் ஏற்றுக்கொள்கிறேன்.

இடம் தேர்வரின் கையொப்பம்

பணியாற்றும் நபருக்கான சான்றிதழ்

நான், என்னிடம் உள்ள தகவலின்படி (எண்) ………………………. (பதவி) …………………… (பெயர்) ………………… ……………தேதியில் இராணுவப்பணியில் தமக்கு குறிப்பிடப்பட்ட பணிக்காலத்தை நிறைவு செய்வார் எனச் சான்றளிக்கிறேன்.

இடம்:

தேதி: இராணுவப் படைத்தலைவரின் கையொப்பம்

1.8.3. தேர்வர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சுய உறுதிமொழியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

Self Declaration

1) I am aware of the fact that, as per the proviso to Section 3 (j) and 3(y) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 (Tamil Nadu act 14 of 2016) and as per note II under para.4-A of the Commission's Instructions to Applicants, "In all cases, an ex-serviceman once recruited to a post in any class or service or category, cannot claim the concession of being called an ex-serviceman for his further recruitment".

2) I am also aware of the fact that as per para.14 (P)(V) of the Commission's Instructions to Applicants "Any change in the employment status of the candidate, whether appointment to, or resignation / removal / dismissal, from a post, at any stage of the recruitment process, until completion of the entire selection process, must be informed to the Commission. Any failure in this regard shall result in rejection of candidature after due process"

3) Knowing the above facts, I (Ex.No...) Ex.Rank.............................. Name ....of …………………………District hereby declare that I have never been employed in any post in any class or service or category classified under State service or Subordinate service of Tamil Nadu.

4) Knowing the above facts, I (Ex.No..) Ex.Rank............................. Name ....of…………………………District hereby declare that I have been employed in .... State service or Subordinate service of Tamil Nadu as ....from..................to..................after my retirement from the Armed Forces. I also enclose herewith the No Objection Certificate obtained from my employer.

5) Further, if the above declaration is found to be false, I may be subjected to any departmental / legal/ penal action as deemed fit and my candidature to the said examination will be cancelled by the Commission after due process.

(*Strikeout whichever is not applicable)

Date	:	Signature	:
Place	:	Name	:
		Register No.	:
		Ex. No.	:
		Rank	:
		Mobile No.	:

1.8.4. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்

2.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் என்பவர் குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட இயலாமையின்அளவு 40% அளவிற்கு குறைவில்லாத மாற்றுத்திறனாளியாகவோ மற்றும் குறிப்பிட்ட இயலாமை அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்பட்டிருந்தால், அவ்வகை இயலாமை கொண்ட மாற்றுத் திறனாளியாகவோ, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 57-ல் உட்பிரிவு (1)ன்படி, அரசால் நியமிக்கப்பட்டுள்ள சான்றளிக்கும் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நபர்கள்.

2.2. தேர்வுக் கட்டணச் சலுகை: கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

2.3. நியமன ஒதுக்கீடு: (நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இனம் காணப்பட்ட பதிவிகளுக்கு) பதவிகளுக்கான நேரடி நியமனங்களில், ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட -அருந்ததியினர்

(முன்னுரிமை அடிப்படையில்) / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் பொதுப்பிரிவு, ஆகிய ஒதுக்கீட்டுப் பிரிவுகளில், கீழ்க்காணும் (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 1 சதவீதமும், (ஈ) மற்றும் (உ) ஆகிய இரண்டு பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு சேர்த்து 1 சதவீதமும் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

(அ) பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத் திறனுடையவர்;
(ஆ) காது கேளாதோர் மற்றும் கேட்புத்திறனில் மந்தத்தன்மை;
(இ) கை, கால்களில் குறைபாடுடையவர், மூளை வாதம், தொழுநோயிலிருந்து மீண்டவர், வளர்ச்சிக் குறைபாடுடையோர், அமிலவீச்சில் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைநார் தேய்மானமுற்றோர்;
(ஈ) ஆட்டிசம், அறிவுசார் குறைபாடுடையோர், குறிப்பிடத்தக்க வகையிலான கற்கும் ஆற்றலில் குறைபாடு மற்றும் மனநலிவு நோய்;
(உ) மேற்கூறப்பட்ட (அ) முதல் (ஈ) வரை குறைபாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகளைப் பெற்றிருத்தல் மற்றும் காதுகேளாமையுடன் பார்வைத்திறன் குறைவு, உட்பட பலவகையான இயலாமை.

2.4. ஆதார ஆவணங்கள்:

2.4.1. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்கண்ட படிவத்தில், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

Form V

Certificate of Disability

(In cases of amputation or complete permanent paralysis of limbs or dwarfism and in case of blindness)

(Name and Address of the Medical Authority issuing the Certificate)

Recent passport size attested photograph (Showing face only) of the person with disability.

Certificate No.______________ Date:____

This is to certify that I have carefully examined Shri./ Smt./ Kum. ___________________________ son/ wife/ daughter of Shri __________________ Date of Birth (DD/ MM/ YY) ____________ Age _______ years, male/ female ______ Registration No. ______________ permanent resident of House No. _______________ Ward/ Village/ Street ________ Post Office _______________ District _______________ State ________________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of:

- locomotor disability
- dwarfism
- blindness

(Please tick as applicable)

(B) the diagnosis in his/ her case is __________________

(C) he / she has ________ % (in figure) __________________ percent (in words) permanent locomotor disability/ dwarfism/ blindness in relation to his/ her ______ (part of body) as per guidelines (............... number and date of issue of the guidelines to be specified).

2. The applicant has submitted the following document as proof of residence:-

Nature of Document	Date of Issue	Details of authority issuing certificate

Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued.

(Signature and Seal of Authorised Signatory of notified Medical Authority)

Form VI
Certificate of Disability
(In cases of multiple disabilities)
(Name and Address of the Medical Authority issuing the Certificate)

Recent passport size attested photograph (Showing face only) of the person with disability.

Certificate No.________________ Date:________

This is to certify that we have carefully examined Shri./ Smt./ Kum. ____son / wife / daughter of Shri ____Date of Birth (DD/ MM/ YY) _____________ Age _____ years, male/ female _________. Registration No. ________________ permanent resident of House No. _____________ Ward/ Village/ Street _________ Post Office ________ District _____________ State _____________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of Multiple Disability. His/ her extent of permanent physical impairment/ disability has been evaluated as per guidelines (....................... number and date of issue of the guidelines to be specified) for the disabilities ticked below, and is shown against the relevant disability in the table below:

Sl. No.	Disability	Affected part of body	Diagnosis	Permanent physical impairment/ mental disability (in %)
1.	Locomotor disability	@		
2.	Muscular Dystrophy			
3.	Leprosy cured			
4.	Dwarfism			
5.	Cerebral Palsy			
6.	Acid attack Victim			
7.	Low vision	#		
8.	Blindness	#		
9.	Deaf	£		
10.	Hard of Hearing	£		
11.	Speech and Language disability			
12.	Intellectual Disability			
13.	Specific Learning Disability			
14.	Autism Spectrum Disorder			
15.	Mental illness			
16.	Chronic Neurological Conditions			
17.	Multiple sclerosis			
18.	Parkinson's disease			
19.	Haemophilia			
20.	Thalassemia			

21.	Sickle Cell disease			

(B) In the light of the above, his/ her over all permanent physical impairment as per guidelines (.................. number and date of issue of the guidelines to be specified), is as follows : -
In figures :- ----------------- percent
In words :- -- percent

2. This condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.

3. Reassessment of disability is:
(i) not necessary, or
(ii) is recommended/ after ...... years ..... months, and therefore this certificate shall be valid till --- --- --- (DD) (MM) (YY)

@ e.g. Left/ right/ both arms/ legs
# e.g. Single eye
£ e.g. Left/ Right/ both ears

4. The applicant has submitted the following document as proof of residence:-

Nature of document	Date of issue	Details of authority issuing certificate

5. Signature and seal of the Medical Authority.

Name and Seal of Member	Name and Seal of Member	Name and Seal of the Chairperson

Signature / thumb impression of the person in whose favour certificate of disability is issued.

Form VII
Certificate of Disability
(In cases other than those mentioned in Forms V and VI)
(Name and Address of the Medical Authority issuing the Certificate)

Recent passport size attested photograph (Showing face only) of the person with disability.

Certificate No.______________ Date:_________

This is to certify that I have carefully examined Shri/ Smt/ Kum ___________________ son/ wife / daughter of Shri ______________ Date of Birth (DD/ MM/ YY)__________ Age ________ years, male/ female __________ Registration No. ___________________ permanent resident of House No. ____________ Ward/ Village/ Street ______________________ Post Office __________________ District _________________ State _____________________, whose photograph is affixed above, and am satisfied that he/ she is a case of _______________________________ disability. His/ her extent of percentage physical impairment/ disability has been evaluated as per guidelines (................ number and date of issue of the guidelines to be specified) and is shown against the relevant disability in the table below:-

Sl. No.	Disability	Affected part of body	Diagnosis	Permanent physical impairment/mental disability (in %)
1.	Locomotor disability	@		
2.	Muscular Dystrophy			
3.	Leprosy cured			
4.	Cerebral Palsy			
5.	Acid attack Victim			
6.	Low vision	#		
7.	Deaf	€		
8.	Hard of Hearing	€		
9.	Speech and Language disability			
10.	Intellectual Disability			
11.	Specific Learning Disability			
12.	Autism Spectrum Disorder			
13.	Mental illness			
14.	Chronic Neurological Conditions			
15.	Multiple sclerosis			
16.	Parkinson's disease			
17.	Haemophilia			
18.	Thalassemia			
19.	Sickle Cell disease			

(Please strike out the disabilities which are not applicable)

2. The above condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.

3. Reassessment of disability is:
(i) not necessary, or
(ii) is recommended/ after __ years __ months, and therefore this certificate shall be valid till (DD/ MM/ YY) ____ ____ ____

@ - eg. Left/ Right/ both arms/ legs
# - eg. Single eye/ both eyes
€ - eg. Left/ Right/ both ears

4.The applicant has submitted the following document as proof of residence:-

Nature of document	Date of issue	Details of authority issuing certificate

(Authorised Signatory of notified Medical Authority)
(Name and Seal)

Countersigned
{Countersignature and seal of the
Chief Medical Officer/ Medical Superintendent/
Head of Government Hospital, in case the
Certificate is issued by a medical authority who is
not a Government servant (with seal)}

Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued.

List of Certifying Authority for the issue of disability certificate

TABLE – I

S. No.	Specified disability	Medical Authority for the purpose of the issue of disability certificate	Certifying authority to issue certificate of disability
1	In case of amputation or complete permanent paralysis of limbs or dwarfism	Hospitals/ Institutions/ Primary Health Centres run by Central and State Government/ Statutory Local bodies	Any doctor/ medical practitioner working in the Hospitals/ Institutions/ Primary Health Centres run by Government/ Statutory Local bodies.
2	Multiple Disability	District Hospital/ Other hospitals/ Institutions run by Central and State Government /Statutory Local Bodies having relevant medical specialist and testing/assessment facilities	Medical Board consisting of three members of whom two will be specialist dealing with relevant disabilities
3	Specified Disabilities not mentioned in Serial numbers 1 & 2 above	Hospitals/ Primary Health Centers / Institutions run by Central and State Government/ Statutory Local bodies having relevant medical specialist and testing/ assessment facilities	A specialist dealing with the relevant disability as specified in the Table - II given below

TABLE – II

Sl. No.	Category	Specialist
1	Locomotor disability other than amputation or complete permanent paralysis of limbs and dwarfism	Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician.
2	Muscular Dystrophy	Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician.
3	Leprosy cured person	Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician.
4	Cerebral Palsy	Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician.
5	Acid Attack Victim	Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician.
6	Blindness	Specialist in the field of Ophthalmology.
7	Low Vision	Specialist in the field of Ophthalmology.
8	Deaf	Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T).
9	Hard of Hearing	Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T).
10	Speech and Language Disabilities	Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T) and Neurologist.
11	Intellectual Disability	Children with intellectual disability below the age of 18 years – Paediatrician or Paediatric Neurologist or Psychiatrist. Adults with intellectual disability above the age group of 18 years – Psychiatrist.
12	Specific Learning Disabilities	Medical board consisting of a) Paediatrician; and b) Psychiatrist and Trained Psychologist.

13	Autism Spectrum Disorder	Medical Board consisting of a) Psychiatrist and Trained psychologist; and b) Paediatrician or General Physician.
14	Mental Illness	Psychiatrist.
15	Chronic Neurological Conditions such as Multiple Sclerosis and Parkinson's Disease	Medical Board consisting of a) Psychiatrist and Trained Psychologist; and b) Neurologist; and c) Orthopaedician or Specialist in Physical Medicine and Rehabilitation.

2.4.2. அரசு அலுவலரல்லாத மருத்துவ அலுவலரால் மாற்றுத்திறனாளி சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின், அச்சான்றிதழ் இணைஇயக்குநர், மருத்துவப்பணிகள் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டிருந்தால் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.

2.4.3. இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாட்டின் வகை (type of disability) மாற்றுத்திறனாளி சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி சரியாக இருத்தல் வேண்டும். இதில் ஏதேனும் வேறுபாடு இருப்பின், உரிமைகோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2.4.4. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் உரிமைகோரலுக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், உரிமைகோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3. ஆதரவற்ற விதவை :

3.1. "ஆதரவற்ற விதவை" என்பவர் விதவை ஒருவர் அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/- திற்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாமல் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். தேர்வர் தேர்வு அறிவிக்கை நாளன்று ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.

3.2. தேர்வுக் கட்டணச் சலுகை: கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

3.3. நியமன ஒதுக்கீடு: பணி நியமன ஒதுக்கீடு விதியின்படி ஆதரவற்ற விதவைகளுக்கான இட ஒதுக்கீடு இந்நியமனத் தேர்விற்கு பொருந்தும். பெண்களுக்கென ஒதுக்கப்படும் 30 விழுக்காட்டில் பத்து விழுக்காட்டினை நேரடி நியமனத்திற்கான ஆதரவற்ற விதவைகளுக்கென ஒதுக்கப்பட வேண்டும். இவ்வறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊதிய நிலை – 10 க்கு மிகாமல் உள்ள பதவிகளுக்கு மட்டும் ஆதரவற்ற விதவைகள் தேர்வு செய்யப்படுவர். தகுதிவாய்ந்த பொருத்தமான ஆதரவற்ற விதவை இல்லாத நேர்வில், ஆதரவற்ற விதவைகளுக்காக ஒதுக்கப்பட்ட சுழற்சி முறையான குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த (ஆதரவற்ற விதவை அல்லாத) பெண்களுக்கு / திருநங்கை பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

3.4. ஆதார ஆவணங்கள்:

3.4.1. ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து கீழ்க்கண்ட படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். இச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய தவறினாலோ அல்லது விதவை அல்லது விவாகரத்து பெற்றதற்கான சான்றிதழை பதிவேற்றம் செய்தாலோ அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

ஆதரவற்ற விதவை சான்றிதழ் படிவம்

(1) தனியரின் பெயர்
(2) முழுமையான அஞ்சல் முகவரி
(3) பணி குறித்த விவரங்கள், ஏதேனுமிருப்பின்
(4) அவரது குழந்தைகளின் விவரம், ஏதேனுமிருப்பின்
(5) அவரது காலஞ்சென்ற கணவரின் பெயர் மற்றும் அவர் கடைசியாக பார்த்த தொழில்
(6) அவரது கணவரின் மறைவு தேதி
(7) அவரது கணவர் மறைந்த பின்னர் குடும்ப ஓய்வூதியம், காப்பீடு மற்றும் பிறவற்றின் வழியாக பெற்ற பணப்பயன்கள்

(8) அவரது கணவர் விட்டுச்சென்ற அசையும் மற்றும் அசையா சொத்து ஏதேனுமிருப்பின் அதன் விவரங்கள்

(9) தற்போதைய மாத வருமானம்
(அ) சம்பளம் / கூலி
(ஆ) குடும்ப ஓய்வூதியத்திலிருந்து
(இ) தனியார் சொத்துகளிலிருந்து
(ஈ) பெறப்பட்ட வாடகை
(உ) தனியார் தொழிலிலிருந்து
(ஊ) பிற ஆதாரங்கள் ஏதேனுமிருப்பின்
(எ) மொத்தம்

(10) தனியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறாரா அல்லது கணவரின் பெற்றோர்களுடன் அல்லது உறவுமுறைகளுடன் / பெற்றோர்கள் / சகோதரர்கள் உடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறாரா?

(11) தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 20(8) மற்றும் பிரிவு 26-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதரவற்ற விதவை என்கிற விளக்கத்தினை நிறைவு செய்கின்றாரா?

தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20-ன், உட்பிரிவு (8)ன்படி மற்றும் 26--ஆம் பிரிவின் படி ஆதரவற்ற விதவை என்ற பொருள் வரையறையின்படி அவருடைய கோருதலின் மெய்த்தன்மை குறித்து தனியரால் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் என்னால் சரிபார்க்கப்பட்டு, திருப்தி அடைந்துள்ளேன் என்று சான்றளிக்கப்படுகிறது.

சான்றிதழ் எண்:	கையெழுத்து :
இடம்:	பெயர் :
தேதி:	பதவியின் பெயர் :

வருவாய் கோட்டாட்சியர் / உதவி ஆட்சியர் /
சார் ஆட்சியர்

விளக்கம்:- மேற்கண்ட சான்றிதழ் வருவாய் கோட்டாட்சியர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

3.4.2. 'விதவை சான்றிதழ்' ஆதரவற்ற விதவை சான்றிதழிலிருந்து வேறுபட்டதாகும். விதவை சான்றிதழை பதிவேற்றம் செய்தாலோ / சமர்ப்பித்தாலோ தேர்வர்கள் ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார்கள்.

3.4.3. தேர்வரின் கணவரின் மறைவு தேர்வு அறிவிக்கை நாளன்றோ அதற்கு முன்போ இருந்தால் மட்டுமே ஆதரவற்ற விதவைக்கான உரிமைக்கோரல் அனுமதிக்கப்படும்.

3.4.4. ஆதரவற்ற விதவைச் சான்றிதழில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்திருத்தம் சான்றிதழ் வழங்கும் அலுவலரால் சான்றொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அதற்கு பதிலாக புதிய சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4. தமிழ் வழியில் கல்வி பயின்றோர்:

4.1. தமிழ் வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் படித்தவராவார்.

4.1.1. பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு (SSLC), மேல்நிலை வகுப்பு (HSC) மற்றும் பட்டப்படிப்பு (Degree) ஆகியவற்றை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.

PLC ப்ரோக்ராமிங் அடிப்படைகள் - PLC ப்ரோக்ராமிங் மொழிகளின் வகைகள் - உரை அடிப்படையிலான மொழிகள் - இன்ஸ்ட்ரக்ஷன் லிஸ்ட் - ஸ்ட்ரக்ச்சர்ட் டெக்ஸ்ட் (Structured text) - காட்சிப்படுத்தும் மொழிகள் (Graphical Language)- லேடர் வரைபடம் (LD) - செயல்பாட்டு தொகுதி வரைபடம்(Functional block diagram) (FBD) - தொடர் செயல்பாட்டு விளக்கம்(Sequential Function Chart) (SFC) - லேடர் லாஜிக் (ரிலே லாஜிக்) - அடிப்படை PLC ப்ரோக்ராமிங் கட்டளைகள் - XIC & XIO கட்டளைகள்.
PLC டைமர்கள் – ஆன் டிலே டைமர் (TON) - ஆஃப்-டிலே டைமர் (TOFF) - ரிட்டென்டிவ் டைமர் (RTO) - முன்பே தீர்மானிக்கப்பட்ட & சேர்க்கப்பட்ட மதிப்புகள்.
PLC கவுண்டர்கள் - அப் கவுன்டர் - டௌன் கவுன்டர் - அப் / டௌன் கவுன்டர் - கவுன்டர்களில் டிரிகர் இன்புட்கள் - PLC ப்ரோக்ராமிங்ல் டைமர்கள் மற்றும் கவுன்டர்களின் விளக்கம் – PLC யில் உள் கட்டளைகள் (Internal Instructions in PLC).

அலகு VIII: HMI நிறுவல், கட்டமைப்பு மற்றும் PLC இன்டெர்பேஸ் (15 கேள்விகள்)
PLC & HMI இன்டெர்பேஸ் அமைப்பு - PLC-க்கான தகவல் தொடர்பு கேபிள்களின் வகைகள் - HMI இணைப்பு - HMI பேனல் & டச்ஸ்கிரீன் இன்டெர்பேஸ் - தொழில்துறை தானியங்கத்தில் HMI பயன்பாடு - HMI ஸ்கிரீன்களின் வகைகள் - HMI-யில் ஸ்கிரீன்களை மாற்றுதல் மற்றும் செயல்முறையை காண்பது.

அலகு IX: SCADA செயல்பாடு, PLC இன்டெர்பேஸ் மற்றும் தகவல் தொடர்பு நெட்வொர்க்கள் (20 கேள்விகள்)
SCADA அறிமுகம் - SCADA அமைப்பு கட்டமைப்பு - SCADA-யின் செயல்பாடுகள் - PLCகளும் PID கண்ட்ரோலர்களும் SCADA-வுடன் தகவல் பரிமாற்றம் - மாஸ்டர் டெர்மினல் யூனிட் (MTU) SCADAவில் - ரிமோட் டெர்மினல் யூனிட் (RTU) மற்றும் அதன் செயல்பாடுகள்.
SCADA தகவல் தொடர்பு & நெட்வொர்க் நெறிமுறைகள் – SCADAவில் நேரடி தரவு சேகரிப்பு - SCADAவில் தகவல்/டேட்டா வழங்கல் – SCADA-வில் ஹுமன் மெஷின் இன்டெர்பேஸ் (HMI) - SCADA-வில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு.

அலகு X: SCADA கட்டமைப்பு, HMI vs SCADA மற்றும் சிமுலேஷன் (20 கேள்விகள்)
HMI vs SCADA: முக்கியமான வேறுபாடுகள் - தொலை கண்காணிப்பு முறையாக SCADA (SCADA as a Remote Monitoring System) - உள்ளமைவு கண்காணிப்பு இடைமுகமாக HMI (HMI as a Local Monitoring Interface) - PLC vs DCS: வேறுபாடுகளின் விளக்கம் - ஆட்டோமேஷன்ல் PLCகளின் பங்கு - கணினி அடிப்படையிலான இடைமுகமாக HMI (HMI as a PC Based Interface) - SCADA அமைப்பு வன்பொருள் கட்டமைப்பு - SCADAவில் கிளையன்ட் லேயர் மற்றும் டேட்டா சர்வர் லேயர் - SCADA மென்பொருள்(software) கட்டமைப்பு – SCADA-வில் நேரடி தரவுத்தள (Real-Time Database) - SCADA சர்வர்களின் செயல்பாடுகள் - SCADAவில் போக்குவழி மற்றும் கண்டறிதல் தரவுகள் (Trending and Diagnostic Data in SCADA) - பராமரிப்பு & லாஜிஸ்டிக்ஸ்க்கான SCADA - PLC இன்டெர்பேஸ் டன் SCADA சிமுலேஷன்.
SCADA திட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (CSV பைல்) (SCADA Project Import & Export (CSV File)) - SCADAவில் திறந்த தரவுத்தள இணைப்பு (ODBC) - SCADAவில் பல மொழி மாறுதல் - SCADAவில் திட்ட காப்பீடு மற்றும் மீட்டெடுப்பு (Project Archiving & Retrieval in SCADA) - SCADA சிமுலேஷன்: எளிய வெப்ப மாற்றி (Simple Heat Exchanger) - SCADA சிமுலேஷன்: வேதியியல் இயக்கி (Chemical Reactor).

29. தொழிற்பிரிவு: கம்மியர் தானியங்கி வாகன பழுது பார்த்தல்
(தொழிற் பயிற்சி தரம்)

குறியீடு: 541

அலகு 1: பொது பாதுகாப்பு முன்னெச்சரிக்கை முதலுதவி (10 கேள்விகள்)
பாதுகாப்பின் முக்கியத்துவம் - தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் (PPE) அடிப்படைத் தேவை - முதலுதவி - பயன்படுத்தப்பட்ட இயந்திர எண்ணெய்யை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் - ஆபத்து அடையாளம் - ஆபத்து

எச்சரிக்கைக்கான பாதுகாப்பு அறிகுறிகள் - தனிப்பட்ட பாதுகாப்பு - தீயை அணைக்கும் கருவிகள் - எரிபொருள் கசிவை பாதுகாப்பாக கையாளுதல் - நச்சு தூசியை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் - தூக்கும் உபகரணங்களை சோதித்தல் - ஆற்றல் சேமிப்பு குறிப்புகள் / ITI மின்சார பயன்பாட்டின் தணிக்கை.

அலகு II: அளவீட்டு அமைப்புகள் மற்றும் இணைப்பான்கள் மற்றும் வெட்டும் கருவிகள் கைக்கருவிகள் மற்றும் மின் கருவிகள் (20 கேள்விகள்)

அளவிடுதல் மற்றும் மார்க்கிங் கருவிகள் – கை கருவிகள் – சுத்தம் செய்யும் கருவிகள் – ஸ்கிராப்பர் – சர்ப்பேஸ் பிளேட்ஸ் – மூலைமட்டம் – இன்சைடுகாலிபர் அவுட்சைடுகாலிபர்கள் – டிவைடர்கள் – குறுக்கு வெட்டு - சுத்தியல் –லம்ப் – மேலட் - பல்வேறு வகையான பாடிசுத்தியல்கள் - டோலி பிளாக் – ஸ்பூன் பாடி பிக்ஸ் – பாடிபுல்லர்ஸ் மற்றும் புல் ராட்ஸ் - சக்ஷன் கப் - ஸ்க்ராட்ச் அவ்ல் – மல்டி கிரிப் - டின்ஸ்னிப்ஸ் ஷீட் மெட்டல் கட்டிங் பிளையர்ஸ் - (ஏவியேஷன் ஸ்னிப்ஸ்) – பேனல் கட்டர்கள் - டிரிம் மற்றும் அப்ஹோல்ஸ்டரி கருவிகள் - கதவு கைப்பிடி கருவி (கிளிப் புல்லர்கள்) - வெவ்வேறு வகையான – ப்பைல்ஸ் –சாண்டிங் போர்டு சாண்டிங் பிளாக் - ஸ்ப்ரெடர்கள் மற்றும் ஸிக்கொயின்ஸஸ்–ஏர் பவர் டூல்ஸை விட மின்சாரத்தில் இயங்கும் கருவிகளின் மேன்மையானது– ஸ்ப்ரே (GUN) - டிஸ்க் வகை மற்றும் இரட்டை நடவடிக்கை (பினிஷிங்) சாண்டர் - ஏர் கிரைண்டர்கள் - ஏர் சா - ஏர் ஸ்கிராப்பர் - ஏர் இம்பாக்ட் ரெஞ்ச் - ஏர் ராட்செட் - ஏர் ட்ரில் - ஸ்பாட் வெல்டர் மூவர் ஏர் ட்ரில் - ஸ்பாட் வெல்ட் கட்டர் டிரில் வகை மற்றும் துளை சா வகை - ஏர் உளி – ஏர் ப்ளோ(GUN) - ஸ்ப்ரே (GUN)- ரெஞ்ச்கள் - டார்க் ரெஞ்ச்கள் ஜாக் வகைகள் - பிரேம் ரேக் - ஹைட்ராலிக் கருவிகளின் பராமரிப்பு - ஹைட்ராலிக் லிஃப்ட்கள் - என்ஜின் கிரேன் - லாக் ரிங்க்ஸ் - சாவிகள் Keys SplitPens – அரம்–கிரைண்டிங் - உளி - ஸ்டட் மற்றும் போல்ட்டை அகற்றுதல் - அளவிடும் பயிற்சி - வெட்டுவதில் பயிற்சி.

அலகு III: துளையிடும் இயந்திரம் மற்றும் கை ரீமர்கள் மற்றும் Sheet metal operations (10 கேள்விகள்)

பெஞ்ச் வகை துளையிடும் இயந்திரம் - கையடக்க மின்சார துளையிடும் இயந்திரம் –Hand taps - டை மற்றும் டை ஸ்டாக் - கை ரீமர்கள் - Sheet metal இணைப்புகள்- வெட்டுதல் - வளைத்தல் - Drawing - ரிவெட்டிங் - சாலிடரிங் - பிரேசிங் - கம்பி அளவீடுகள் (Wire gauges) - ஊதுகுழல் விளக்கு (Blow lamp)–க்ளியர் மற்றும் பிளைன்ட் துளைகளைக் குறித்தல் மற்றும் துளையிடுதல்.

அலகு IV: மின் மற்றும் மின்னணுக் கூறுகள் (10 கேள்விகள்)

கொள்கைகள் - ஓம் விதி மின்னழுத்தம் - மின்னோட்டம் –ரிசிஸ்டன்ஸ் - சக்தி - ஆற்றல் - வோல்ட்மீட்டர் - அம்மீட்டர், ஓம்மீட்டர் - மல்டிமீட்டர் - கடத்திகள் மற்றும் மின்கடத்திகள் - கம்பிகள் - ஹைட்ராலிக்ஸ் மற்றும் நியூமேடிக்ஸ் கூறுகள் அறிமுகம் - பாஸ்கல் விதியின் வரையறை - அழுத்தம் - விசை –விஸ்கோஸிட்டி - நியூமேடிக் ஸிம்பல்ஸ்.

அலகு V: வாகன விவரக்குறிப்பு (20 கேள்விகள்)

பல்வேறு வகையான வாகனங்களை அடையாளம் காணுதல் - சர்வீஸ் நிலைய உபகரணங்கள் - வாகன ஏற்றிகள் – பாடி வகைகள் - யூனிபாடி வடிவமைப்பு வாகனத்தின் பாகங்கள் - பாடியின் முன் மற்றும் பின் பகுதியின் கீழ் கட்டமைப்பு கூறுகள் –ஸ்போர்ட்ஸ் அன்டு யுடிலிட்டி வாகனம் - சேவை கையேடுகள் - மோதல் பழுதுபார்க்கும் வழிகாட்டிகள் - வாகன கட்டுமான தொழில்நுட்பம் - பழுதுபார்க்கும் வரிசை - வாகன பாடி மற்றும் சேஸின் விளக்கம் - வாகன சட்டகம் - ஐசி இயந்திரங்களின் வகைப்பாடு - முன் இயந்திர முன் சக்கர இயக்கி - பின்புற இயந்திர பின்புற சக்கர இயக்கி – நடுஇயந்திர இயக்கி - யூனிபாடி வடிவமைப்பு காரணிகள்.

அலகு VI: காற்று அமுக்கி பராமரிப்பு (20 கேள்விகள்)

காற்று அமுக்கி பழுதுபார்த்தல் - சர்வீஸ்FRL அலகு - எண்ணெய் அளவு - தளர்வான மோட்டார் கப்பியை சரிபார்த்து சீரமைத்தல் – அமுக்கிகளின் வகைகள் - அமுக்கி பாகங்கள் - இரண்டு நிலை சுழலும் திருகு காற்று அமுக்கி - காற்று மற்றும் எரிபொருள் கன்ட்ரோல் உபகரணங்கள் – ஏர் மற்றும் எரிபொருள் கன்ட்ரோல் உபகரணங்கள் – வாட்டர் லைன் மற்றும் எரிபொருள் இணைப்புகளின் வண்ண குறியீடு.

அலகு VII: வெல்டிங் மற்றும் வெட்டும் உபகரணங்கள் ஷீட் மெட்டல் பழுது பார்த்தல் (20 கேள்விகள்)

காற்று அமைப்பு பராமரிப்பு ஆக்ஸிஅசிட்டிலீன் வெல்டிங் – சாம்ப்பிள் பேனலின் கிளாம்பிங் மற்றும் MIG வெல்டிங் - பிளக் வெல்டிங் - ஸ்டிச் வெல்டிங் - ஸ்பாட் வெல்டிங் - TIG வெல்டிங் - பிரேசிங் - MIG வெல்டிங் உபகரணங்கள் - வெல்டிங் நுட்பங்கள் - வெல்டிங் குறைபாடுகள் - ரெசிஸ்டன்ஸ் ஸ்பாட் வெல்டிங் - ஒரு ஸ்க்யூஸை இயக்குதல் - டேக் வெல்ட் - ஸ்டிச் வெல்ட் - லேப் வெல்ட் - பட் வெல்ட்ஸ் சேதமடைந்த காரின் சிறிய பழுதுபார்ப்பில் பயிற்சி - HSS வகை - ஏற்றும் வகை –பாடி சேதத்தை வகைப்படுத்துதல் - உலோக நேராக்க நுட்பம் - வண்ணப்பூச்சு அகற்றும் முறை - சுத்தியலால் அலுமினியத்தை நேராக்குதல் - அலுமினியத்தை நிரப்புதல் மற்றும் கிரைண்டிங் - டென்ட்டை அகற்றுதல் பாடி பழுதுபார்ப்பை உறுதி செய்ய பாடி நிரப்பு பயன்பாடு மற்றும் சிங்கிள் ஆக்சன் சேன்டர் - சிங்கிள் ஆக்சன் சேண்டரைப் பராமரித்தல் - சுத்தி மற்றும் டோலியைக் கொண்டு கதவுகளை நேராக்குதல் மற்றும் சரி செய்தல் - வாகனத்தின் சிறிய சேதத்தை அடையாளம் காணுதல் .

அலகு VIII: சேதமடைந்த பிளாஸ்டிக் பாகங்கள் & கண்ணாடிகள் மற்றும் கதவு பொருத்துதல் பழுதுபார்க்கும் செயல்முறையை மதிப்பீடு செய்து சரிசெய்தல் (35 கேள்விகள்)

தெர்மோபிளாஸ்டிக்ஸை அடையாளம் காணுதல் - பொதுவான வாகன பிளாஸ்டிக்குகள் - ரசாயன பிசின் பயன்படுத்துதல் - பிளாஸ்டிக்கை மறுவடிவமைக்க வெப்பத்தைப் பயன்படுத்துதல் - பழுதுபார்த்தல் பொதுவான வாகன பிளாஸ்டிக்குகள் - சிங்கிள் ஆக்சன் சேன்டர்ஏர்லெஸ் பிளாஸ்டிக் வெல்டிங் - மியொலி பிளாஸ்டிக் வெல்டிங் - பிளாஸ்டிக் வெல்டிங் நுட்பங்கள் - பிளாஸ்டிக் தையல் வெல்டிங் - வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக் பழுது - ஹூட் அகற்றுதல் - ஹூட் சரிசெய்தல் - பம்பர் மாற்றீடுகள் - ஃபெண்டர் அகற்றுதல், நிறுவுதல் - டிரங்க் மூடி சரிசெய்தல் - விண்ட்ஷீல்டை அகற்றுதல் - கதவு அகற்றும் பயிற்சி - கதவு கண்ணாடி சரிசெய்தல் - பயணிகள் பெட்டிகளை அடையாளம் காணுதல் - இருக்கை சேவைகள் - காற்று மற்றும் நீர் கசிவு சோதனை - கண்ணாடிகளின் வகை - விண்ட்ஷீல்ட் ரப்பர் கேஸ்கெட் சர்வீஸ் - டோர் சர்வீஸ் - கதவு கட்டுமானம் - ஜன்னல் சீராக்கி சர்வீஸ் - கதவு கண்ணாடி சரிசெய்தல் - ஸ்டேஷன் வேகன் - டெயில்கேட் சரிசெய்தல் - கூரை பேனல் சர்வீஸ் - தரைவிரிப்பு சர்வீஸ் - உட்புற டிரிம் சர்வீஸ் - டேஷ் பேனல் சர்வீஸ் - நீர் கசிவு சரிபார்ப்பு.

அலகு IX: கட்டமைப்பு மோதல் சேதம் மற்றும் மெசரிங் சிஸ்டம்ஸ் (35 கேள்விகள்)

டிரேம் அளவீட்டின் பயன்பாடு - உடல் சேதங்களை அளவிடுதல் - அளவீட்டு அமைப்பு –பாசஞ்சர்ஸ் மற்றும் லக்கேஜ் சேதத்தை ஆய்வு செய்தல் - கணினிமயமாக்கப்பட்ட அளவீட்டு அமைப்பு - மோதல் பழுதுபார்க்கும் செயல்முறை - மேஷ் சேதம் - பயணிகள் மற்றும் லக்கேஜ் டைமன்சன்ஸ் பரிமாணங்கள் - இம்பேக்ட் டேமேஜ் அளவை பார்வைக்கு தீர்மானித்தல் - அளவிடும் அமைப்பு - டிராம் அளவீடுகள் - டிஜிட்டல் டிராம் அளவீடுகள் - மைய அளவீடுகள் - யூனிபாடி வாகனங்கள் - முதன்மை சேதம் - இரண்டாம் நிலை சேதம் - மோதல் சேதம் - ஒரு வாகனத்தின் மீதான தாக்கம் மற்றும் அதன் விளைவு –பாடி பக்க பேனலின் அளவீடு பின்புற உடலின் அளவீடு - டிஜிட்டல் டிராம் அளவீடுகள் - சேதத்தைக் கண்டறிதல் - மத்திய பேனல் - பூஜ்ஜிய விமானங்கள்.

அலகு X: பிரேம் நேராக்க உபகரணங்கள் மற்றும் மறுசீரமைப்பு நடைமுறைகள் மற்றும் வாகனம் மற்றும் பயணி பாதுகாப்பு (20 கேள்விகள்)

சேதத்தை பகுப்பாய்வு செய்தல் - நீள சேதம் - அகல சேதம் - பக்க சேதம் - திருப்ப சேதம் - டைமண்ட் சேதம் - ஸ்ட்ரட் சேதம் - யூனிபாடி / பிரேம் சீரமைப்பு - ரோல்ஓவர் சேதம் - முன் மற்றும் மோதல்களைக் விசுவலைசிங் பெஞ்ச் நேராக்க அமைப்பு - கட்டமைப்பு சீரமைப்பு நடைமுறை - யூனிபாடி பிரேம் மறுசீரமைப்பு - இருக்கை அசெம்பிளிகள் - ஸ்டீயரிங் நெடுவரிசை அசெம்பிளி – கார்பெட் வெதர் ஸ்டிரிப்பிங் - கண்ணாடி டிரிம் பேனல்கள் - கிளஸ்டர் சர்வீஸ் - ஹெட்லைனர் சர்வீஸ்– கன்சோல் சர்வீஸ்.

30. தொழிற்பிரிவு: கம்மியர் மின்சார வாகனம்
(தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு: 542

அலகு I: பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் மற்றும் முதலுதவி கை கருவிகள், பணிமனை கருவிகள் மற்றும் உபகரணங்கள் (15 கேள்விகள்)

பாதுகாப்பு - தொழிற்சாலை / ஷாப்ஃப்ளோர் கடைபிடிக்கப்படும் பொதுவான முன்னெச்சரிக்கைகள் - முதலுதவி - மின்சாரக் மெயின்ஸ் செயல்பாடு மற்றும் மின் பாதுகாப்பு - PPEகள் - அவசரநிலைகளுக்கான ரெஸ்பான்ஸ் எ.கா. - மின் செயலிழப்பு - தீ - அமைப்பு செயலிழப்பு – House Keeping மற்றும் நல்ல ஷாப்ஃப்ளோர் நடைமுறைகள் - 5S கருத்து மற்றும் அதன் பயன்பாடு - தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்: சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் – Hot Work, Confined Space Work மற்றும் பொருள் கையாளுதல் உபகரணங்கள் பற்றிய அடிப்படை புரிதல் – வாகன Hoists - இரண்டு Post மற்றும் நான்கு Post Hoists – Engine Hoists - இயந்திர Hoists - ஹைட்ராலிக் ஜாக்குகள் - ஸ்டாண்டுகள்.

அலகு II: ஆட்டோமொபைல் வாகன வகைகள் மற்றும் அவற்றின் விவரக்குறிப்புகள் (10 கேள்விகள்)

ஆட்டோமொபைலின் வரலாறு - பரிணாமம் மற்றும் வளர்ச்சி - முக்கிய ஆட்டோமொபைல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புகள் - காம்போனண்ட்ஸ் மற்றும் அவற்றின் இருப்பிடங்கள் பற்றிய சுருக்கமான விளக்கம் - பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் ஆட்டோமொபைல்களின் வகைப்பாடு மற்றும் காரணத்தை தீர்மானித்தல் (வணிகம், பயணிகள்), தயாரிப்பு பிரிவுகள் (வாகன வகைகள், மாறுபாடுகள் மற்றும் பதிப்புகளுக்கான அளவுகோல்கள், Markets: இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா).

அலகு III: மின்சுற்றுகள் மற்றும் மின் அளவீட்டு கருவிகளைப் பயன்படுத்தி அவற்றின் அளவுருக்களைச் சோதிக்கவும் (15 கேள்விகள்)

அடிப்படை மின்சாரம் - மின்சாரக் கோட்பாடுகள் - Ground இணைப்புகள் - ஓம் விதி - சக்தி - ஆற்றல் - வோல்ட்மீட்டர், அம்மீட்டர், ஓம்மீட்டர், மல்டிமீட்டர், கடத்திகள் மற்றும் மின்கடத்தாத பொருள் - கம்பிகள், கவசம், நீளம் vs எதிர்ப்பு, மின்தடை மதிப்பீடுகள் - மின்தேக்கிகள் மற்றும் சுருள்கள் Fuses மற்றும் சுற்று பிரேக்கர்கள், பேலஸ்ட் மின்தடை, கம்பி காப்பு அகற்றுதல் - கேபிள் வண்ண குறியீடுகள் மற்றும் அளவுகள் - தொடர் சுற்றுகளில் மின்தடையங்கள் - இணை சுற்றுகள் மற்றும் தொடர்-இணை சுற்றுகள் – Electro Static Effects -

மின்தேக்கிகள் மற்றும் அதன் பயன்பாடுகள் - தொடர் மற்றும் இணையாக மின்தேக்கிகள், தொடர் மற்றும் இணையாக செல்கள், காந்த விளைவுகள் - வெப்ப விளைவுகள் - வெப்ப-மின்சார ஆற்றல் - தெர்மிஸ்டர்கள் - தெர்மோ கப்பில்ஸ் - மின்வேதியியல் ஆற்றல் - ஒளிமின்னழுத்த ஆற்றல் - பைசோ மின்சார ஆற்றல் - மின்காந்த தூண்டல் - ரிலேக்கள், சோலனாய்டுகள் - டிரான்ஸ்ஃபார்மர்களில் ப்ரைமரி மற்றும் செகண்டரி நிலை வைண்டிங்ஸ், மோட்டாரில் ஸ்டேட்டர் மற்றும் ரோட்டார் காயில்கள் - ஏசி & டிசியின் அடிப்படைகள் - பல்வேறு +ve Cycle, -ve Cycle – அதிர்வெண் - கால அளவு – RMS – Peak – Instantaneous மதிப்பு – Single Face மற்றும் Three Face மற்றும் Phase மின்னழுத்தம் / மின்னோட்டம் போன்ற சொற்கள் – மின்கடத்திகள் – கடத்திகள் மற்றும் குறைக்கடத்தி பண்புகள் – பல்வேறு வகையான மின் கேபிள்கள்.

அலகு IV: மின்னணு சுற்றுகள் மற்றும் அவற்றின் சுற்று செயல்பாட்டை பகுப்பாய்வு செய்தல் (15 கேள்விகள்)
அடிப்படை மின்னணுவியல் - மின் மற்றும் மின்னணு காம்போனண்ட்ஸ் - சுவிட்சுகள் – Normally Closed, Normally Opened – Single Pole Singly Throw (SPST) - ஆட்டோமொபைல் சுற்றுகளில் பயன்படுத்தப்படும் கேங்கட் மற்றும் மெர்குரி சுவிட்சுகள் - ரிலே, ISO ரிலேக்கள், சோலனாய்டுகள், பஸர்கள் - மின்தடைகள் - வெவ்வேறு வகையான மின்தடைகள் மற்றும் அவற்றின் வண்ண குறியீடுகள் – Fixed, Stepped மற்றும் Variable மின்தடைகள், ரியோஸ்டாட், பொட்டென்டோமீட்டர் - டையோடுகள் - டையோட் அடையாளம் மற்றும் மதிப்பீடுகள் - ஜீனர் டையோடுகள் – Avalanche டையோடுகள் - ஒளி உமிழும் டையோடுகள் - Photo டையோடுகள் மற்றும் கிளாம்பிங் டையோடுகள் - டிரான்சிஸ்டர்கள் - NPN, PNP, Field Effect டிரான்சிஸ்டர் (FET), IGBT, ஃபோட்டோட்ரான்சிஸ்டர்கள் - ஒருங்கிணைந்த சுற்றுகள் - சுற்று பாதுகாப்பு சாதனங்கள் - வெவ்வேறு வகையான ஃபியூஸ்கள் - கண்ணாடி அல்லது பீங்கான் - பிளேடு மற்றும் புல்லட் அல்லது கார்ட்ரிட்ஜ் ஃபியூஸ்கள் - ஃபியூசிபிள் லிங்ஸ், மேக்ஸி ஃபியூஸ்கள், சர்க்யூட் பிரேக்கர், Positive வெப்பநிலை குணகம் (PTC) மின்தடை, சாதனம், லாஜிக் கேட்ஸ்-OR, மற்றும் & NOT மற்றும் சுவிட்சுகளைப் பயன்படுத்தி லாஜிக் கேட்ஸ் - Input மற்றும் Output Interfacing - PWM Generation.

அலகு V: மின்சார வாகன காம்போனண்ட்ஸ் மற்றும் செயல்திறன் அடிப்படையில் EV மற்றும் IC எஞ்சின் வாகனங்களின் ஒப்பீடு (25 கேள்விகள்)
மின்சார வாகன தொழில்நுட்பம் - EV Terminology Comparison, Range, எரிபொருள் வகை ஆகியவற்றின் அடிப்படையில் மின்சார வாகனத்தையும் IC எஞ்சின் வாகனத்தையும் ஒப்பிடுதல் - மின்சார வாகன வகைகள், (பேட்டரி மின்சார வாகனம்) BEV, (ஹைப்ரிட் மின்சார வாகனம்) HEV, (பிளக்-இன் ஹைப்ரிட் மின்சார வாகனம்) PHEV மற்றும் (எரிபொருள் செல் மின்சார வாகனம்) FCEV - லக்ஸ் மீட்டர்கள் – Performance Parameter, மோட்டார்களின் அடிப்படைகள், மோட்டாரின் தேர்வு, அளவு மற்றும் Characteristic - மோட்டார் effort கணக்கீடு, மின்சார Transmission – Propulsion System – ப்ரின்ஷிபல், வொர்க்கிங் மற்றும் ஆப்பரேஷன் - DC மோட்டார் - ட்ரைவ்ஸ் ஆர்மேச்சர் மின்னழுத்தம், சாப்பர் சர்க்யூட், Step Up, Step Down சாப்பர், கட்டுப்பாட்டு Strategy, சாப்பர் ஆம்ப்லிஃபையர் – Brushless DC மோட்டார் ப்ரின்ஷிபல், வொர்க்கிங் மற்றும் Features, Brushless DC மோட்டாரின் வேகக் கட்டுப்பாட்டு அமைப்பு, செயல்திறன், கணக்கீடு.

அலகு VI: ஆட்டோமொபைல் அமைப்புகள் மற்றும் துணை அமைப்புகள் (20 கேள்விகள்)
பல்வேறு ஆட்டோமொடிவ் அமைப்புகள் மற்றும் துணை அமைப்புகள் - பவர் Train - என்ஜின்கள் மற்றும் அதன் வகைகள் - டிரான்ஸ்மிஷன் மற்றும் டிரைவ்லைன் அமைப்புகள் - சேஸ் சிஸ்டம்: சேஸ் மற்றும் மோனோகோக் பாடி, ஸ்டீயரிங் சிஸ்டம்ஸ், சஸ்பென்ஷன் சிஸ்டம் (அதன் செயல்பாடுகள் மற்றும் வெவ்வேறு காம்போனண்ட்ஸ், டபுள் விஷ்போன் போன்ற பல்வேறு வகைகள் - டிரெயிலிங் ட்விஸ்ட் ஆக்சில் சஸ்பென்ஷன், மேக்பெர்சன்ஸ் ரட் சஸ்பென்ஷன், மல்டி-லிங்க் போன்றவை) - டயர்கள் மற்றும் வீல்கள் - JATMA/ATMA/ETRTO தரநிலைகள் - டயர்கள் மற்றும் வீல்ஸ் குறிகள் - ஆட்டோமொபைலுக்கான டயர் தேர்வு பரிசீலனைகள், டயர் வடிவமைப்புகள் Diagonal vs Radial பிளை, டியூப் vs டியூப்லெஸ், Wheal Alignment - தானியங்கி டிரான்ஸ்மிஷன் அமைப்பின் வேலை மற்றும் கட்டுமானம் (சிங்கிள் ஸ்பீட் ரிடக்ஷன் கியர்) Body Engineering: ஸ்டைலிங், எக்ஸ்டீரியர், இன்டீரியர், டிரிம்கள் போன்றவை. வாகன ஒருங்கிணைப்பு - (டீசல் மல்டிபிள் யூனிட்) DMU, எர்கோனாமிக்ஸ், லேஅவுட் மற்றும் பேக்கேஜிங் Studies.

அலகு VII: பேட்டரி பேக் காம்போனண்ட்ஸ், உயர் மின்னழுத்த ரீசார்ஜ் செய்யக்கூடிய ஆற்றல் சேமிப்பு அமைப்பு மற்றும் பேட்டரி மேலாண்மை அமைப்பின் செயல்திறனை கண்காணித்தல் மற்றும் சரிபார்த்தல் (20 கேள்விகள்)
செல்கள் - செல் வகைகள் லெட் ஆசிட்/லித்தியம்-அயன் பாலிமர்/திரவ குளிரூட்டப்பட்ட லித்தியம்-அயன் Heating அமைப்பு/லி-அயன்/NiMH, NiCad போன்றவை, வேதியியல் மற்றும் Geometric, செல் தேர்வு மற்றும் அளவு, செல்களைக் கையாளுதல், செல் சார்ஜிங் மற்றும் டிஸ்சார்ஜிங் Curves புரிந்துகொள்வது, செல் மீதான வெப்பநிலை தாக்கத்தைப் புரிந்துகொள்வது, Internal Resistance, செல் கட்டுமானம் மற்றும் உற்பத்தி, பல்வேறு வகையான பேட்டரிகளின் வாழ்க்கைச் சுழற்சி பேட்டரி Module மற்றும் பேக் Development - பேட்டரி பேக் Configuration, பேக் மற்றும் Module Construction, Configuration, வகைகள் மற்றும் Energy Concepts, மின்னழுத்தம் மற்றும் வெப்பநிலை அளவீடு, மின்னோட்ட அளவீடு, வெப்ப மேலாண்மை, BMS பேட்டரி திறன் மற்றும் மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் பேக் சீலிங் சென்சார்கள் பேட்டரி சார்ஜிங் மற்றும் டிஸ்சார்ஜிங் கணக்கீடு. பேட்டரி மேலாண்மை அமைப்பு (BMS)/ஆற்றல் மேலாண்மை அமைப்பு (EMS) – BMS-ன் தேவை,

மின்னழுத்தம், மின்னோட்டம் மற்றும் வெப்பநிலை கண்காணிப்பு, செல் Balancing - வகைகள், Active, Passive, SoC தீர்மானித்தல், SoC வழிமுறைகள், பேட்டரி குளிரூட்டும் அமைப்பு.

அலகு VIII: துணைக்கருவிகள் மற்றும் துணை காம்போனண்ட்ஸ் சோதித்து சரிசெய்தல் - பவர் ஸ்டீயரிங், பிரேக்கிங் மற்றும் HVAC கம்ஃபர்ட் சிஸ்டம் (30 கேள்விகள்)

மின்சார வெப்ப மேலாண்மை பேட்டரி பேக்கின் குளிர்ச்சி - மோட்டார் மற்றும் இன்வெர்ட்டர், ஆக்டிவ் மற்றும் பாசிவ் கூலிங் - ஃப்ளூயிட் அடிப்படையிலான கூலிங் - எத்திலீன் கிளைக்கால் - ஃபோர்ஸ்டு ஏர் கூலிங் - கேபின் ஏர் பேஸ்டு கூலிங் Electric Power Assisted ஸ்டீயரிங் - அடிப்படை மின்சார பவர் ஸ்டீயரிங் ஆப்ரேஷன் - எலக்ட்ரானிக் Adjustable - ரேட் ஷாக் அப்சார்பர்கள், பிரேக்குகள் - மெக்கானிக்கல், ஹைட்ராலிக்ஸ் மற்றும் ஏர் பிரேக் சிஸ்டம் - டிரம் வீல் பிரேக் - டிஸ்க் வீல் பிரேக் சிஸ்டம் - எலக்ட்ரிக் பிரேக்குகள், எலக்ட்ரோ ஹைட்ராலிக் பிரேக்கிங் (EHB), ABS பிரேக் சிஸ்டம், ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் செயல்பாடு, ABS பிரேக்கிங்கின் Principle, ABS மாஸ்டர் சிலிண்டர், ஹைட்ராலிக் கண்ட்ரோல் யூனிட், வீல் ஸ்பீட் சென்சார்கள் - எலக்ட்ரானிக் பிரேக் ஃபோர்ஸ் டிஸ்ட்ரிபியூஷன் (EBD) Control Unit கூடிய ABS – Heating Ventilation Air Conditioning (HVAC) legislation - வாகன வெப்பமாக்கல், காற்றோட்டம் மற்றும் குளிரூட்டும் அமைப்புகள் - அடிப்படை ஏர் கண்டிஷனிங் Principles - ஏர் கண்டிஷனிங் திறன் - ஏர் கண்டிஷனிங் Refrigerant - ஈரப்பதம் - நிலையான Orifice - கட்டுப்பாட்டு சாதனங்கள் - வெப்ப நிலை விரிவாக்க வால்வு - வெப்ப விரிவாக்க வால்வுகள் - ஏர்-கண்டிஷனிங் கம்ப்ரசர்கள், கண்டன்சர்கள் மற்றும் Evaporators, ரிசீவர் ட்ரையர், லைன்கள் மற்றும் ஹோஸ்கள், Txvalve Construction - வெப்பநிலை - கண்காணிப்பு தெர்மோஸ்டாட், Refrigerants – Pressure சுவிட்சுகள், வெப்பமூட்டும் elements - ஏர்-கண்டிஷனிங் ECU, Ambient Air Temperature சென்சார், சர்வோமோட்டர்கள் - மின்சார சர்வோமோட்டர்கள், தானியங்கி காலநிலை கட்டுப்பாட்டு சென்சார்கள், Evaporator வெப்பநிலை சென்சார் - Blower வேகக் கட்டுப்பாடு - காற்றோட்ட அமைப்புகள் மின்சார இன்வெர்ட்டர் கம்ப்ரசர்.

அலகு IX: வயரிங் சுற்றுகளை சரிபார்த்தல் மற்றும் சரிசெய்தல் - HV மற்றும் LV மற்றும் மின்சார வாகனத்தில் உள்ள மின் காம்போனண்ட்ஸ் (20 கேள்விகள்)

வயரிங் மற்றும் Circuit Diagrams தானியங்கி வயரிங் - முதன்மை வயரிங் மற்றும் இரண்டாம் நிலை வயரிங் - திட மற்றும் தனித்த முதன்மை வயர்களுக்கு இடையிலான ஒப்பீடு - கம்பி அளவு - மெட்ரிக் மற்றும் அமெரிக்க வயர் கேஜ் (AWG), வாகன வயரிங்கில் பயன்படுத்தப்படும் Ground Strapes முக்கியத்துவம் - பல்வேறு வகையான டெர்மினல்கள் மற்றும் இணைப்பிகள் Molded - பல-வயர் Hard ஷெல் - பல்க்ஹெட் – Weather பேக், மெட்ரி-பேக், வெப்ப Shrink Covered Butt Connectors – Printed சர்க்யூட் போர்டுகள் - வயரிங் ஹார்னஸ்கள், வயரிங் வரைபடங்கள் மற்றும் வண்ண குறியீடுகள் மற்றும் சர்க்யூட் எண்கள் - பொதுவான மின் மற்றும் மின்னணு Symbols - ஹார்ன் சர்க்யூட், வைப்பர் சர்க்யூட் - பவர் விண்டோ காம்போனண்ட்ஸ் மற்றும் சர்க்யூட் - பவர் டோர் லாக் சர்க்யூட், தானியங்கி டோர் லாக் சர்க்யூட் - ரிமோட் கீலெஸ் என்ட்ரி சிஸ்டம் சர்க்யூட் - ஆன்டிதெஃப்ட் சிஸ்டம் - இம்மொபைலைசர் சிஸ்டம் - நேவிகேஷன் சிஸ்டம் - கார் இன்ஃபோடெயின்மென்ட் சிஸ்டம் - ஏர்பேக்குகள் - சீட்பெல்ட் - வாகன-பாதுகாப்பு அமைப்புகள் - கிராஷ் சென்சார்கள் - சீட் பெல்ட் Pre Tensioners - டயர் அழுத்த கண்காணிப்பு அமைப்புகள் – Integrated Communications – Proximity Sensors – Reflective Display – Global Positioning செயற்கைக்கோள்கள் – Triangulation / Trilateration - டெலிமேடிக்ஸ் – Application of Automotive Bus System - CAN (Control Area Network) - LIN (Local Interconnected Network) - MOST (Media Oriented Systems Transport) - உயர் மின்னழுத்த elements - PDU, மின்னழுத்த மாற்றிகள் – Switching Devices - HV – Diagnostics and Troubleshooting - HV கேபிளிங் - Repair - பாதுகாப்பு சான்றிதழ், HVIL, Isolation சோதனை பவர் எலக்ட்ரானிக்ஸ் இன்வெர்ட்டர் மற்றும் மின்னழுத்த மாற்றிகள், ஸ்கேன் கருவி மற்றும் Reading Vehicle Diagnostics.

அலகு X: பேட்டரி சோதனை, சார்ஜிங் மற்றும் Cycling Operations - மின்சார வாகன சார்ஜிங் சுற்றுச்சூழல் அமைப்பைத் தேர்ந்தெடுப்பது, இயக்குதல் மற்றும் சரிசெய்தல் (30 கேள்விகள்)

சார்ஜ் மற்றும் டிஜ்சார்ஜ் சைக்கிள் – Understanding State of Charge and State of Health (SoH) - பேட்டரி ஆயுள் – Cycles of Operations - State of Energy (SoE) மற்றும் State of Power (SoP) Battery Handling at Swapping Stations - சார்ஜிங் அமைப்பு- சார்ஜிங் அமைப்பின் நோக்கம் - சார்ஜிங் அமைப்பு காம்போனண்ட்ஸ் - சார்ஜிங் அமைப்பு Circuit - AC சார்ஜர், DC சார்ஜர் - சூரிய ஒருங்கிணைந்த (MPPT Based) சார்ஜர் உயர் மின்னழுத்த சார்ஜிங் அமைப்புகள் - சார்ஜர் கூலிங் - நிலையான மின்னோட்டம் (CC) & நிலையான மின்னழுத்தம் (CV) சார்ஜிங் Standard -Chademo, GB/T, DC001, CCS – Protocols - Connectors மின்சார வாகனங்கள் சார்ஜிங் நிலையம் - சார்ஜிங் நிலையத்தின் வகை - சார்ஜிங் நிலையத்தின் தேர்வு மற்றும் அளவு - சார்ஜிங் நிலையத்தின் காம்போனண்ட்ஸ் - EV சார்ஜிங் நிலையத்துடன் தொடர்புடைய விதிமுறைகள் Charging Station Indicators - சார்ஜிங் நிலைய நிறுவல் - மாற்றக்கூடிய பேட்டரி பேக்குகளுக்கான சார்ஜிங் நிலையம் DC/DC மாற்றி – Working Principle - வகை - கணக்கீடு - ரிலே, செயல்பாடு, வகைகள் மற்றும் பயன்பாடு Rule Based and Optimization Based Control - மென்பொருள் அடிப்படையிலான கட்டுப்பாடு - வெப்ப மேலாண்மை அமைப்பு - செல் load distribution - SOC மற்றும் SOH தீர்மானித்தல் - மின்சார வாகன அமைப்பின் பழுது மற்றும் பராமரிப்பு - DC மோட்டாரின் சாப்பர் சர்க்யூட் – Using Second Life Batteries - தேர்வு, மறுபயன்பாடு, புதுப்பித்தல், பேட்டரி அகற்றல், பேட்டரிகளை சேமித்தல்.

31. தொழிற்பிரிவு: கம்மியர் மோட்டார் வாகனம்

(தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு: 437

அலகு I: (10 வினாக்கள்)

பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் மற்றும் முதலுதவி: பணிமனையில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு மற்றும் பொது முன்னெச்சரிக்கைகளின் முக்கியத்துவம். அடிப்படை முதலுதவி, பாதுகாப்பு அறிகுறிகள். எரிபொருள் கசிவு, தீயை அணைக்கும் கருவிகள் மற்றும் அதன் வகைகளை பாதுகாப்பாக கையாளுதல். பல்வேறு வகையான தீ. நச்சு தூசியை பாதுகாப்பாக அகற்றுதல், பாதுகாப்பான கையாளுதல் மற்றும் பளுதூக்கும் கருவிகளை அவ்வப்போது சோதனை செய்தல், அங்கீகரிக்கப்பட்ட நகரும் மற்றும் வாகனங்களுக்கான சாலை சோதனை ஓட்டம் வாகனங்களுக்கு அங்கீகாரம், மின் பாதுகாப்பு குறிப்புகள்.

அலகு II: (20 வினாக்கள்)

கை கருவிகள் மற்றும் அளவிடும் கருவிகள், பிரேம் மற்றும் பாடி: அளவிடும் பொருட்கள், சுத்தம் செய்யும் கருவிகள், பணிமனை கருவிகள், பொதுவான மற்றும் சிறப்பு கைகருவிகள், மைக்ரோமீட்டர்கள், வெர்னியர் காலிப்பர்கள், டெலஸ்கோப் கேஜ்கள், டயல் போர் கேஜ்கள், டயல் இண்டிகேட்டர்கள், சமதளத்தை பரிசோதிக்கும் கருவிகள், ஃபீலர் கேஜ், த்ரெட் பிட்ச் கேஜ், வெற்றிடத்தின் அளவு (வேக்யூம் கேஜ்), டயர் அழுத்த அளவு, துளையிடும் கருவிகள் (டிரில்), துளை போடும் இயந்திரங்கள் மற்றும் துளையிடப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், உள்புற, வெளிப்புற மறையிடும் கருவிகள், மெட்ரிக் மற்றும் இன்ச் அளவுகளின் படி மறையிடுதல், துளையின் அளவை அகலப்படுத்துதலுக்கான கருவிகளின் அளவை கண்டறிதல், கணக்கிடுதல். ஸ்க்ரூ எக்ஸ்ட்ராக்டர்கள், ஹேண்ட் ரீமர்கள் மற்றும் அதன் வகைகள். சமதள பரப்பை உருவாக்குதல் மற்றும் உராய்வு பாகங்களை உருவாக்க தேவையான பொருட்களின் வகைகள்,இணைப்பிற்கான பொருட்களின் வகைகள் (போல்ட், நட்)வகைகள்.

பிரேம்மின் பயன்பாடு, பிரேம்மின் வகைகள், சேஸ் பழுது மற்றும் சீரமைப்பு, அலைன்மெண்ட் சோதித்தல், ஃபிரேம் பராமரிப்பு, கார்களுக்கான பாதுகாப்பு தரநிலைகள் (ஸ்டான்டர்ட்ஸ்).

அலகு III: (80 வினாக்கள்)

எஞ்சின், டிரான்ஸ்மிஷன் சிஸ்டம், எரிபொருள் விநியோக அமைப்பு, கூலிங் சிஸ்டம் மற்றும் லூப்ரிகேஷன் சிஸ்டம்: உள் மற்றும் வெளிப்புற எரிப்பு எஞ்சின்கள், IC எஞ்சின்களின் வகைப்பாடு, IC இன்ஜின்களின் இயக்கம் மற்றும் வேலை. 2-ஸ்ட்ரோக் மற்றும் 4 ஸ்ட்ரோக், C.I எஞ்சின் மற்றும் S.I இன்ஜின், நேரடி எரிபொருள் தெளிப்பு மற்றும் மறைமுக எரிபொருள் தெளிப்பு, எஞ்சின் தொழில்நுட்ப விதிமுறைகள், எஞ்சின் விவரக்குறிப்பு, டேஷ் போர்டு பெட்ரோல் எஞ்சினில் உள்ள பல்வேறு அளவீடு கருவிகள் / சிக்னல்கருவி ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு. எஞ்சின் பாகங்கள் மற்றும் உலோகங்கள்: சிலிண்டர் ஹெட், எரி அறைகள், ஹெட் கேஸ்கட்கள், என்ஜின் வால்வுகள் & வால்வு கைடு, வால்வு இயங்கும் முறையின் வகை, வால்வ்-டைமிங் வரைபடம், கேம்ஷாப்ட் & இயக்க பாகங்கள், டைமிங் பெல்ட்கள் & செயின்கள், டைமிங் பெல்ட்கள் டென்ஷனர்கள். பிஸ்டன்கள், பிஸ்டன் ரிங்குகள் மற்றும் பிஸ்டன் பின்கள். கம்ப்ரஷன் ரேஷியோ, கனெக்டிங் ராட், கிராங்க் ஷாஃப்ட், எஞ்சின் பேரிங்க்ஸ், ஃப்ளை வீல் மற்றும் வைப்ரேஷன் டேம்பர். கிராங்க் கேஸ் & ஆயில் பம்ப், கியர்ஸ் டைமிங் மார்க், செயின் ஸ்ப்ராக்கெட்டுகள், செயின் டென்ஷனர் போன்றவை. ஃப்ளைவீலில் இணைக்கப்பட்ட கிளட்ச் & கப்ளிங் யூனிட்களின் செயல்பாடு. சிலிண்டர் பிளாக், லைனர். எரிபொருள் உறிஞ்சுதல் மற்றும் வெளியேற்றும் அமைப்பு (இன்டேக் & எக்ஸாஸ்ட் சிஸ்டம்ஸ்) மற்றும் உதிரிபாகங்கள், எஞ்சினில் எரிபொருள் எரிக்க வைக்கும் முறைகள் (firing order) மற்றும் அதன் வகைகள்.

கிளட்ச், பற்சக்கரங்களின் விகிதாச்சாரம், தானாக சக்தியை கடத்தும் கியர் பாக்ஸின் அமைப்பு (AMT) - கியர்பாக்ஸ் வரைபடம் மற்றும் வேலை செய்யும் விதம், சிங்கொரோமெஷ் கியர் பாக்ஸ் அமைப்பில் உள்ள ரிங் கியர்களின் தொகுப்பு, சக்தி கடத்தும் முறை, நான்கு வீல் சுழற்சி மற்றும் அனைத்து வீல்களும் சுழல தேவையான சக்தி கடத்தும் அமைப்பு சாதனம் (டிரான்ஸ்ஃபர் கேஸ்), ஆல்-வீல் டிரைவ் டிரான்ஸ்பர் கேஸ், டிரான்ஸ்ஃபர் கேஸ் டிப்பெரன்ஷியல் தானியங்கி டிரான்ஸ்மிஷன்கள் இயக்க முறைகள் – உந்த சக்தியை கடத்தும் சாதனம் (டார்க் கன்வெர்ட்டர்கள்), பிளானட்டரி கியர்கள், எலக்ட்ரானிக் கண்ட்ரோல் டிரான்ஸ்மிஷன், ப்ரொப்பல்லர் ஷாஃப்ட், யுனிவர்சல் ஜாயின்ட், ஃபைனல் டிரைவ், டிப்பெரன்ஷியல் யூனிட், முன்பக்க வீல் ஆக்ஸில் பின்பக்கவீல் ஆக்ஸில் - அச்சுவகைகள், முன்சக்கரத்தை இயக்கும் வகைகள்.

எரிபொருள் பண்புகள், டீசலை உயர் தொழிற்நுட்பத்தில் எரிக்க வைக்கும் முறைகள் / டீசலை தூய்மைபடுத்த கையாளும் முறை தொழில்நுட்பம். டீசல் எரிபொருள் அமைப்பு பாகங்கள்- டீசல் டேங்க் மற்றும் பைப்லைனை பயன்படுத்தும் முறைகள், டீசல் எரிபொருள் வடிகட்டிகள், நீர் பிரிப்பான், லிஃப்ட் பம்ப், பிளஞ்சர் பம்ப், ப்ரைமிங் பம்ப், எலக்ட்ரானிக் டீசல் கட்டுப்பாடு மின்னணு எரிபொருள் கட்டுப்பாட்டு அமைப்புகள், காமன் ரெயில் டீசல் தெளிப்பான் (CRDI) அமைப்பு, சென்சார்கள், ஆக்டிவேட்டர் மற்றும் ECU (எலக்ட்ரானிக் கண்ட்ரோல் யூனிட்) அமைப்பு கொண்ட டீசல் என்ஜின்கள், பெட்ரோல் எரிபொருள் அமைப்புகள், எரிபொருள் கலவை விகிதாச்சாரம், காற்று அடர்த்தி, சிஎன்ஜி - கேஸ் சர்க்யூட் பாகங்களில் பயன்படுத்தப்படுகிறது.

பல்வேறு வகையான குளிரூட்டும் அமைப்புகள், பாகங்கள்- ரேடியேட்டர், கூலண்ட் ஹோஸ்கள், வாட்டர் பம்ப், கூலிங் சிஸ்டம் தெர்மோஸ்டாட், கூலிங் ஃபேன்கள், வெப்பநிலை மீட்டர்கள், ரேடியேட்டர் பிரஷர் கேப், ரெக்கவரி சிஸ்டம், தெர்மோ ஸ்விட்ச். SAE இன் படி ஆயில், பாகுத்தன்மை மற்றும் அதன் தரத்தின் செயல்பாடுகள், ஆயிலில் சேர்க்கப்படும் மூலப் பொருட்கள், செயற்கை ஆயில், லூப்ரிகேஷன் சிஸ்டம், ஸ்பிளாஸ் சிஸ்டம், பிரஷர் சிஸ்டம், லூப்ரிகேஷன் சிஸ்டத்தில் துரு பிடித்தல், சத்தம் குறைப்பு. லூப்ரிகேஷன் சிஸ்டம் பாகங்கள் –ஆயில்தொட்டி (sump), ஆயில் சேகரிக்கும் தொட்டி, ஆயில் டேங்க், பிக்கப் டியூப், பல்வேறு வகையான ஆயில் பம்ப் & ஆயில் ஃபில்டர்கள் ஆயில் பிரஷர் ரிலீஃப் வால்வு, ஸ்பர்ட் ஹோல்ஸ் & அறைகள், ஆயில் இண்டிகேட்டர்கள், ஆயில் கூலர் ஆகியவற்றின் விளக்கம் மற்றும் செயல்பாடு.

அலகு IV: (20 வினாக்கள்)
சக்கரங்களின் வகைகள், டயர்களின் வகைகள், ஸ்டீயரிங் சிஸ்டம்ஸ், சஸ்பென்ஷன் சிஸ்டம்ஸ், பிரேக்கிங் சிஸ்டம்கள்:காற்று நிரப்புவதை பொறுத்து, பிளேரேட்டிங்கை பொறுத்து–டயரினுடைய குறுக்கு வெட்டு தோற்றத்தின் பாகங்கள், டிஸ்க் & ரிம்மின் வகைகள் மேற்கண்ட அனைத்து பொருட்களின் தயாரிப்பு மூலப் பொருட்கள் (மெட்டீரியல்கள்) - கட்டுமானம், பண்புகள். டயர் அளவுகள் மற்றும் டயர் தயாரிப்பாளர்களுடைய பெயர்கள், டயர் பற்றிய குறிப்பு தகவல்கள், டயர் பாதுகாப்பு வடிவமைப்புகள், டயரின் வெப்பநிலை மற்றும் இணக்கமான டயர் மதிப்பீடுகள். விளக்கங்கள் மற்றும் டயர் ட்ரெட் வடிவங்கள் பொறுத்து டயர்களில் நைட்ரஜன் காற்று நிரப்பும் டயர்கள் மற்றும் வளிமண்டல காற்று (சாதாரணமான காற்று) டயர்கள் இரண்டிற்கும் ஒப்பீடு செய்தல்.

ஸ்டீயரிங், ரேக்-அண்ட் - பினியன் டைப் வகைகள் ஸ்டீயரிங் சிஸ்டம், ரீசர்குலேட்டிங் பால்ஸ் வித் நட் வகைகள், சுழலும் பால்ஸ் மற்றும் நட் ஸ்டீயரிங் சிஸ்டம், நான்கு சக்கர திசைமாற்றி அமைப்புகள், ஒன்றோடு ஒன்று இணைப்புடன் இயங்கும் ஸ்டீயரிங் அமைப்பு ஆகியவற்றின் இயக்கங்கள். ஸ்டீயரிங் பாக்ஸ்கள் & குழாய் இணைப்பு, பவர் அசிஸ்டட் ஸ்டீயரிங், எலக்ட்ரிக் பவர் அசிஸ்டட் ஸ்டீயரிங். சக்கர சீரமைப்பு:- அடிப்படைக் கோட்பாடுகள், வீல் பேஸ், வீல் டிராக், கிங் பின் சாய்வுகோணம், கேஸ்டர், கேம்பர், தொகுப்பு சாய்வு கோணம் - ஸ்க்ரப் ஆரம், டோ-இன் & டோ அவுட், டோ - அவுட் ஆன் டர்ன்கள், டர்னிங் ஆரம், த்ரஸ்ட் ஆங்கிள் & மையக் கோடுகள்.

சஸ்பென்ஷன் சிஸ்டத்தின் தத்துவமும்கோட்பாடுகளும் – வகைகள், தன்னிச்சை இயக்க (independent system) சஸ்பென்ஷன் சிஸ்டம் – கன்வென்ஷனல் அல்லது ரிஜிட்டைப், பின் சுயஇயக்க சஸ்பென்ஷன் சிஸ்டம், மின் அணுமுறையில் கட்டுப்படுத்தப்படும் சஸ்பென்ஷன் சிஸ்டம், காற்றின் கட்டுப்பாடு சஸ்பென்ஷன் சிஸ்டம், திரவ மற்றும் காற்றழுத்த சஸ்பென்ஷன் சிஸ்டம் – ஸ்பிரிங்னுடைய வகைகள் – காயில்ஸ் பிரிங்ஸ், லீஃப் ஸ்பிரிங்ஸ், டார்ஷன் பார்கள், ரப்பர் ஸ்பிரிங்ஸ் ஆகியவற்றின் விளக்கம் மற்றும் செயல்பாடு. ஷாக் அப்சார்பர் வகைகள்- ஹைட்ராலிக் ஷாக் அப்சார்பர்கள், கேஸ்-பிரஷரைஸ்டு ஷாக் அப்சார்பர்கள், லோட் அட்ஜஸ்ட்பிள் ஷாக் அப்சார்பர்கள், மேனுவல் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய-ரேட் ஷாக் அப்சார்பர்கள், எலக்ட்ரானிக் சமிக்கை-ரேட் ஷாக் அப்சார்பர்கள், ஆட்டோமேட்டிக் லோட் அட்ஜெஸ்ட் ஷாக் அப்சார்பர்கள், டெலஸ்கோப்பிக்ஷாக் அப்சார்பர்களுடைய பாகங்களும், அது வேலை செய்யும் விதமும் - ஃப்ரண்ட் சஸ்பென்ஷன் வகைகள் & பாகங்கள்-மேக் ஃபர்சன்ஸ் ட்ரூட் சஸ்பென்சன். குறுகிய/நீண்ட கை சஸ்பென்ஷன், லீஃப் ஸ்பிரிங்ஸ் சஸ்பென்ஷன் பின்புற சஸ்பென்ஷன் வகைகள் & பாகங்கள்-ரிஜிட் ஆக்சில் லீஃப் ஸ்பிரிங் சஸ்பென்ஷன், ரிஜிட் ஆக்சில் காயில் ஸ்பிரிங் சஸ்பென்ஷன், இன்டிபென்டன்ட் டைப் சஸ்பென்ஷன், ரிஜிட்-நன் டிரைவ் சஸ்பென்ஷன்.

பிரேக் வகை -தத்துவம், ஏர் பிரேக்குகள், எக்ஸாஸ்ட் பிரேக்குகள், எலக்ட்ரிக் பிரேக்குகள், பார்க்கிங் பிரேக்குகள், என்ஜின் பிரேக்குகள், ரீஜென்ரேட்டிங் பிரேக்கிங், பிரேக்கிங் சிஸ்டம். பாகங்கள் பிரேக் அமைப்பு. பிரேக் உராய்வு பொருட்கள். ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் செயல்பாடு, ஏபிஎஸ் (ABS) பிரேக்கிங்கின் கோட்பாடுகள், ஏபிஎஸ் மாஸ்டர் சிலிண்டர், ஹைட்ராலிக்கண்ட்ரோல் யூனிட், வீல் ஸ்பீட் சென்சார்கள், ஏபிஎஸ்யுடன் இணைந்த ஈபிடி எலக்ட்ரானிக் கண்ட்ரோல் யூனிட்டுடன் கூடிய ஏபிஎஸ் அதன் அமைப்பு மற்றும் செயல்பாடு. பிரேக்கிங் சிஸ்டம் பாகங்கள்.

அலகு V: (10 வினாக்கள்)
குறைபாடு கண்டறியும் குறியீடு (DTC):- ஸ்கேன் கருவியின் மூலம் குறியீடுகளை மீட்டெடுப்பது மற்றும் பயன்பாடு. EFI சென்சார்கள்- உள்வெப்பநிலை சென்சார், மாஸ் ஏர்ஃப்ளோ சென்சார், மெனிஃபோல்ட் அழுத்தம் சென்சார் (எம்.ஏ.பிசென்சார்), காற்று சுழல் சென்சார், எரிபொருள் அமைப்பு சென்சார், த்ரோட்டில் பொசிஷன் சென்சார், வெளியேற்ற வாயு ஆக்ஸிஜன் சென்சார், கிராங்க் ஆங்கிள் சென்சார், ஹால் எஃபெக்ட் வோல்டேஜ் சென்சார், ஆப்டிகல் வகை சென்சார்கள்.

அலகு VI: (10 வினாக்கள்)
வெளியேறும் வாயுநிலை கட்டுப்பாடு:- வாகன வாயுதர நிலைகள்- யூரோ மற்றும் பாரத் (Euro & Bharath) II, III, IV, V-ன்படி வெளியேற்றும் வாயுக்களின் நச்சுத்தன்மை கட்டுப்பாட்டு உயர்வு நிலை, சைலன்சர் வடிவமைப்பு. வெளியேறும் வாயு வகைகள்: ஹைட்ரோகார்பன்களின் சிறப்பியல்புகள் மற்றும் விளைவு, வெளியேற்ற

வாயுக்களில் உள்ள ஹைட்ரோகார்பன்கள், நைட்ரஜனின் ஆக்சைடுகள், துகள்கள், கார்பன் மோனாக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, எரிபொருளில் உள்ள கந்தக உள்ளடக்கம், ஆவியாதல் வெளியேறும் வாயுகள் கட்டுப்பாடு, வினையூக்கி மாற்றம், மூடிய வாயு வெளியேற்றம், மூடிய வாயு வெளியேற்றம் (EGR) வால்வு, காற்று எரிபொருள் விகிதங்களைக் கட்டுப்படுத்துதல், கார்பன் துகள்கள் அகற்றும் சாதனங்கள், டீசல் எரிவாயு மாசுத் துகள் வடிகட்டி (DPF). செலக்டிவ் கேட்டலிக் (கன்வெர்ட்டர்), ரிடக்ஷன் (SCR) நச்சுத் தன்மை குறைக்கும் அமைப்புகள் மற்றும் EGR ஒப்பீடு SCR.

அலகு VII: (15 வினாக்கள்)
பேட்டரி - மின்காந்த விளைவுகள், வெப்பமூட்டும் விளைவுகள், தெர்மோ எலக்ட்ரிக் ஆற்றல், தெர்மிஸ்டர்கள், தெர்மோ கப்பிள்ஸ், மின்வேதியியல் ஆற்றல், ஒளிமின்னழுத்த ஆற்றல், ப்பீஸோ எலக்ட்ரிக் ஆற்றல், மின்காந்த தூண்டல், ரிலேக்கள், சொலினாய்டுகள், முதன்மை மற்றும் இரண்டாம் நிலைகாயில் வைண்டிங்கள், டிரான்ஸ்பார்மர்கள், ஸ்டேட்டர் மற்றும் ரோட்டார் காயில்.

அடிப்படை எலக்ட்ரானிக்ஸ்: செமி கண்டக்டர்களின் விளக்கம், திட நிலை சாதனங்கள்- டையோடுகள், டிரான்சிஸ்டர், பற்றவைப்பு அமைப்புகள் - டிஸ்டிரிஃபூட்டர் குறைவான பற்றவைப்பு அமைப்புகள், தனிமைப்படுத்தப்பட்ட இன்சுலட்டர் காயில்கள், டிஸ்டிரிஃபூட்டரில் ஏற்படும் எரியும் குறைபாடு நேரம் (டிஸ்டிரிஃபூட்டர்லெஸ் இக்னிசன் சிஸ்டம்), ஹார்ன், வைப்பர், பவர் வின்டோபவர் டோர் லாக், ஆட்டோமேட்டிக் டோர் லாக், ரிமோட் கீலெஸ் என்ட்ரி சிஸ்டம், ஆண்டி தெஃப்ட் சிஸ்டம், இம்மொபைலைசர் சிஸ்டம் சர்க்யூட்கள் மற்றும் அதன் பாகங்கள். ஏர்பேக்குகள், சீட் பெல்ட், வாகன பாதுகாப்பு அமைப்புகள், கிராஷ் சென்சார்கள், சீட் பெல்ட் ப்ரீ டென்ஷனர்கள், டயர் பிரஷர் கண்காணிப்பு அமைப்புகள் ஒருங்கிணைந்த தகவல் தொடர்புகள், ப்ராக்ஸிமிட்டி சென்சார்கள் ஆகியவற்றின் விளக்கம் மற்றும் செயல்பாடு.

அலகு VIII: (10 வினாக்கள்)
ஹீட்டிங் வென்டிலேஷன் ஏர் கண்டிஷனிங் (HVAC) :- கோட்பாடுகள், ஏர் கண்டிஷனிங் திறன், ஏர் கண்டிஷனிங் ரெஃப்ரிஜெரண்ட், ஈரப்பதம் விவரம் மற்றும் நிலையான துளையின் செயல்பாடு, கட்டுப்பாட்டு சாதனங்கள், தெர்மோஸ்டேடிக் விரிவாக்க வால்வு அமைப்பு, வெப்ப விரிவாக்க வால்வுகள், காற்றழுத்தம் மின்தேக்கிகள் மற்றும் ஆவியாக்கிகள், ரிசீவர் உலர்த்தி, கோடுகள் மற்றும் பைப்லைன்களை, TX வால்வு அமைப்பு, வெப்பநிலை கண்காணிப்பு தெர்மோஸ்டாட், குளிர்பதனப் பொருட்கள், அழுத்தம் சுவிட்சுகள், வெப்பமூட்டும் கூறுகள் ஏர்-கண்டிஷனிங் ECU, சுற்றுப்புற காற்று வெப்பநிலை சென்சார், சர்வோ மோட்டார்கள், மின்சார சர்வோ மோட்டார்கள், தானியங்கி காலநிலை கட்டுப்பாட்டு வெப்பநிலை சென்சார்கள், Evaporator வெப்பநிலை சென்சார்கள், சென்சார், ப்ளோவர் வேகக் கட்டுப்பாடு, காற்றோட்ட அமைப்புகள்.

அலகு IX: (10 வினாக்கள்)
அடிப்படை மின் மற்றும் மின்சார வாகனத் தொழில்நுட்பம்:- மின்சாரக் கோட்பாடுகள், அடிப்படை மின் இணைப்புகள், ஓம் விதி, மின்னழுத்தம், மின்னோட்டம், எதிர்ப்பு, சக்தி, ஆற்றல். வோல்ட்மீட்டர், அம்மீட்டர், ஓம்மீட்டர், மல்டிமீட்டர், கண்டக்டர்கள் & இன்சுலேட்டர்கள், மின்மாற்றி, வையர்ஸ், ஷீல்டிங், கடத்தி நீளம், மின்தடை ஒப்பீடு மதிப்பீடுகள். ஃபியூஸ்கள் & சர்க்யூட் பிரேக்கர்கள், பேலாஸ்ட் ரெசிஸ்டர், ஸ்ட்ரிப்பிங் வயர் இன்சுலேஷன், கேபிள் வண்ணக் குறியீடுகள் மற்றும் அளவுகள், தொடர் சுற்றுகளில் மின்தடைகள் , இணையான சுற்றுகள் மற்றும் தொடர்-இணை சுற்றுகள், எலக்ட்ரோ நிலையான விளைவுகள், மின்தேக்கிகள் மற்றும் அதன் பயன்பாடுகள், தொடர் மற்றும் இணையான மின்தேக்கிகள். மின்மாற்றிகளின் சார்ஜிங் சர்க்யூட் செயல்பாட்டின் விளக்கம், ரெகுலேட்டர் யூனிட், பற்றவைப்பு எச்சரிக்கை விளக்கு பிரச்சனைகள் மற்றும் சார்ஜிங் அமைப்பில் தீர்வு. ஸ்டார்டர் மோட்டார் சர்க்யூட்டின் விளக்கம், ஸ்டார்டர் மோட்டார் சொலினாய்டு சுவிட்சுகளின் கட்டுமான விவரங்கள், ஸ்டார்டர் சர்க்யூட்டில் பொதுவான பிரச்சனைகள் மற்றும் தீர்வு.

ஹைப்ரிட் & எலக்ட்ரானிக் வாகனம், ஹைட்ரஜன் எரிபொருள் வாகனம், (EV) எலக்டிரிக் வாகனம் டெக்னாலஜி, எலெக்ட்ரிக் வாகனத்தை IC இன்ஜின் வாகனத்துடன், ஒப்பிட்டு வெளியேறும் வாயுக்களின் அடிப்படையில் வரம்பு நிர்ணயம் செய்தல், எரிபொருள் வகை ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பிடுதல். மின்சார வாகனத்தின் வகைகள், BEV, HEV, PHEV மற்றும் FCEV. மின்சார வாகனத்தின் அமைப்பு, முழு மின்சார வாகனத்தின் வேலை தத்துவம், முக்கிய பாகங்கள், எலக்ட்ரிக் மோட்டார்களின் அடிப்படை தத்துவம் மற்றும் தேர்வு, அளவு மோட்டாரின் சிறப்பியல்பு, மோட்டார் தேர்வுக்கான கணக்கீடு, மின்சார பரிமாற்றம். உந்துவிசை அமைப்பின் கொள்கை, வேலை மற்றும் செயல்பாடு, டிசி மோட்டார் - டிரைவ்கள் ஆர்மேச்சர் மின்னழுத்தம், சோப்பர் சர்க்யூட், ஸ்டெப் அப், ஸ்டெப் டவுன் சோப்பர், கண்ட்ரோல் ஸ்ட்ராடஜி, சோப்பர் பெருக்கி. பிரஷ்லெஸ் டிசி மோட்டார் அதன் வேலை செய்யும் தத்துவம், பிரஷ் இல்லாத டிசி மோட்டாரின் வேகக் கட்டுப்பாட்டு அமைப்பு, செயல்திறன், கணக்கீடு. பேட்டரி மேலாண்மை அமைப்பு.

அலகு X: (5 வினாக்கள்)
போக்குவரத்து விதிகள்:- சிக்னல்கள் மற்றும் கட்டுப்பாடுகள். வாகனத் தகவலைக் கண்டறிதல், ஸ்கேன் கருவி தரவைப் பெறுதல் மற்றும் விளக்குதல்.

32. தொழிற்பிரிவு: கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனம் (தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு:553

அலகு I: பொதுவான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை மற்றும் முதலுதவி (10 கேள்விகள்)
சுற்றுச்சூழல் ஒழுங்கு – வீட்டுப் பணிகள் – தொழிற்சாலை பாதுகாப்பு – தீ அணைக்கும் சாதனங்கள் – மின்சார பாதுகாப்பு குறிப்பு – சக்தி சேமிப்பு குறிப்பு – உயர்த்தும் கருவிகளின் காலாவதியான பரிசோதனை – போக்குவரத்து மற்றும் சாலை சோதனை வாகனங்களுக்கான அங்கீகாரம் – விஷவாயு தூள்களின் பாதுகாப்பான அகழ்வு.

அலகு II: தொழில்நுட்ப கருவிகள் மற்றும் உதவிக்கருவிகள் முத்திரை மற்றும் அமைப்பு (20 கேள்விகள்)
அளவீட்டு கருவிகள் – எந்திரக் கருவிகள் – கலிப்பர்கள் – பரப்புத் திரிபுகள், தள்ளூ – சிடியல் – கமர்கள், ஸ்கிரூ டிரைவர், ஆலன் விசைகள், ஸ்பானர்கள் – சாக்கெட் மற்றும் உதவிக்கருவிகள் – பிளையர்ஸ் ஏர் இம்பாக்ட் ரெஞ்ச் – டார்க் ரெஞ்ச்கள். கார் ஜெட் வாஷர்கள் – குழாய் துலக்கல் மற்றும் வெட்டுதல் – கருவிகள், புல்லர்கள் – வெர்னியர் காலிப்பர், மைக்ரோ மீட்டர்கள் (வெளிப்புறம் மற்றும் ஆழம்) – டயல் போர் கேஜ்கள், டயல் இன்டிகேட்டர், ஃபீலர் கேஜ்கள், தொலைநோக்கு கேஜ்கள், திரைத் தழுவல் கேஜ்கள் – வாக்யூம் கேஜ்கள் – டயர் அழுத்த கேஜ்கள். ஸ்க்ரூவுகள், கட்டுகள், ஸ்டட்ஸ் மற்றும் போல்டுகள் வகைகள், பூட்டு சாதனங்கள், ஸ்பிளிட் பின்கள், சர்கிளிப், பூட்டு ரிங்குகள். கேஸ்கெட்டின் செயல்பாடு, எண்ணெய் சீல்கள் – வெட்டும் கருவிகள் – துளைக்கும் இயந்திரங்கள் – டேப்கள் மற்றும் டைஸ் – ரீமர்ஸ் – ஸ்க்ரூ எக்ஸ்டிராக்டர்கள் – எரிவாயு வெல்டிங்.

அலகு III: மின்சார சுற்று, பேட்டரிகள், அளவீட்டு கருவிகள் மற்றும் பேட்டரி (20 கேள்விகள்)
மின்சார சுற்று – மின்சார அளவீட்டு கருவிகள் – வோல்ட் மீட்டர்கள், ஆம்மீட்டர் – வரிசை, பாரலல், வரிசை பாரலல் ஓமின் சட்டம் பயன்படுத்தி – கலர் கோடிங் ரெஜிஸ்டர் – ரெஜிஸ்டர் இன்சீரியஸ் சுற்றில் – வரிசை மற்றும் பாரலல் கண்டிவேட்டர் – கண்டிவேட்டர் மற்றும் அதன் பயன்பாடு – மல்டிமீட்டர் பயன்படுத்தி வோல்டேஜ் குறைவு – மல்டிமீட்டரின் மூலம் மின் ஓட்ட அளவிடுதல் – கம்பி நீக்குதல் – பாலஸ்ட் எதிர்ப்பு – ஃப்யூசுகள் மற்றும் சர்கியூட் பிரேக்கர் – பேட்டரிகள் மற்றும் செல்கள், lead ஆஸிட் பேட்டரிகள், ஸ்டே மெயின்டனன்ஸ் ஃப்ரீ (SMF) பேட்டரிகள் – ஹைட்ரோமீட்டர் கொண்டு பேட்டரி சோதனை – பேட்டரியின் சோதனை – ரிலே மற்றும் சொலெனாயிட் சோதனை – அதிக பேட்டரி கால்வரை drain காரணங்கள் – முதன்மை மற்றும் இரண்டாவது செல்கள் – ரிலே – இரண்டு மற்றும் மூன்று வீல்களின் மின்சார சோதனை – பேட்டரி சோதனை, சார்ஜுகள் – தெர்மிஸ்டர் – தெர்மோகப்பிள்கள்.

அலகு IV: வாகன விவரக்குறிப்புகள் மற்றும் பொது சேவை (20 கேள்விகள்)
ஆட்டோ தொழிற்சாலை – வாகனங்களின் வகைகள் – முன்னணி தயாரிப்பாளர்கள் – புதுமை, புதிய தயாரிப்பு – இந்திய ஆட்டோமொபைல் ஆராய்ச்சி அமைப்பு – மத்திய வாகன விதி படி சுமை அடிப்படையில் வகைப்படுத்தல் – சக்கரங்கள், இறுதி இயக்கம் மற்றும் பயன்படுத்தப்படும் எரிபொருள், ஆட்செல்கள் – இயந்திரத்தின் நிலை – ஸ்டீரிங் – பரிமாற்றம், உடல் சுமை – வாகனங்கள் தூக்கி வைக்கும் கருவிகள் – வாகன விவரக்குறிப்புகள் தரவு, வாகன தகவல் எண்ணை அடையாளம் காண்க இரண்டு மற்றும் மூன்று வீலரின் பாகங்கள் மற்றும் பொது சேவை – கழுவுதல், எண்ணெய் பூசுதல், சுத்தம் செய்தல் மற்றும் லுப்ரிகேட்டிங் – காசசாலை மற்றும் சேவை நிலைய உபகரணங்கள் – இயந்திர பருமன், பிஸ்டன் ரிங், இணைப்புக் கம்பி, தாங்கி கிராங்க்ஷாப்ட் சரிபார்க்குதல் – சண்டை உறுதிப்படுத்துதல் – மின்சார அமைப்பை சரிபார்க்குதல் – உள்நோக்கு மற்றும் வெளிநோக்கு எரிவாயு இயந்திரம் – இரண்டு மற்றும் நான்கு ஸ்ட்ரோக் இயந்திரம் – கம்பிரஷன் இக்னீசியன் ஸ்பார்க் இக்னீசியன் (C.I.S.I) இயந்திரம் – பல்வேறு கேஜ்கள் – கருவிகள் – ஸ்பீடோமீட்டர், டாகோமீட்டர், ஓடோமீட்டர் மற்றும் எரிபொருள் கேஜ் மற்றும் காட்டிகள்.

அலகு V: இன்ஜின் மீண்டும் சீரமைத்தல், சிலிண்டர் ஹெடின் புகை சோதனை, இன்ஜின் அதிக வெப்பம், அரிதான சத்தம் (30 கேள்விகள்)
மூல இன்ஜின் கூறுகள் – கேம்கள் – பிஸ்டன் மற்றும் பிஸ்டன் ரிங்குகள் – பரிந்துரைக்கப்பட்ட இடைவெளிகள் மற்றும் அவற்றின் அவசியம், பொதுவான சிக்கல்கள் மற்றும் பிஸ்டன் சரிசெய்தல். இணைப்புக் கம்பி – பிஸ்டன் பின் மற்றும் ரிங்குகளுக்கான பொருட்கள் மற்றும் இடைவெளிகள் – கிராங்க்ஷாப்ட் – இன்ஜின் பேரிங்குகள் – குறைந்த அழுத்தம், அதிக அழுத்தம், அதிக சத்தம் மற்றும் மோசமான ஐட்லிங் சிக்கல்கள் மற்றும் தீர்வுகள்.

இன்ஜின் ஹெட் அசம்ப்ளி: இன்ஜின் வால்வுகள் – பொருட்கள். வால்வு மெக்கானிசம் – வால்வு இருக்கைகள் – வால்வு நேரம் – கேம் ஷாப்ட் – நேரத்தினை கட்டுப்படுத்தும் பெல்டுகள் மற்றும் சங்கிலிகள் – அதிக புகை – அதிக வெப்பம் – நாக்கிங் – கேம் சங்கிலி சத்தம் மற்றும் அதன் தளர்ச்சி சிக்கல்கள் மற்றும் தீர்வுகள். **இன்டேக் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட்** – கார்புரெட்டர் – வகை – செயல்பாடு – வடிகட்டி டீசல் எரிபொருள் ஊட்டம் – கிண்ணங்கள் மற்றும் கோணங்கள். ஐடல் வேகம் – மெதுவான வேகம், உயர்ந்த வேகம், ஏர் கிளீனர் – இன்டேக் மானிஃபோல்ட் – குளிரூட்டல் மற்றும் லுப்ரிகேஷன் சிஸ்டம் இன்ஜின் எண்ணெய் தரங்கள் – லுப்ரிகேஷன் புள்ளிகள் – சிக்கல் தீர்வுகள்.

அலகு VI: எரிபொருள் தொட்டி, திரவப்பேட்டையாக்கப்பட்ட பெட்ரோலிய வாய் (LPG)/சுருக்கப்பட்ட இயற்கை வாயு (CNG) எரிபொருள்(15 கேள்விகள்)
பெட்ரோல் எரிபொருள் – எரிபொருள் எரிவிப்பை கட்டுப்படுத்துதல் – எரிபொருள் விகிதம் (காற்று-எரிபொருள்) எரிபொருள் விநியோக அமைப்பு – சிக்கல் தீர்வுகள் – மூன்று வீலரின் பவர்இன்ஜின் – எரிவாயு அலகை பாதுகாப்பாக கையாளுதல் – புகை கட்டுப்பாடு. எக்ஸ்ஹாஸ்ட் மூலம் ஹைட்ரோகார்பன்கள் – கார்பன் மோனோக்ஸைடு. எரிபொருளில் sulphur உள்ளடக்கம் – கிராங்க் கேஸ் புகை கட்டுப்பாடு – வாயு அதிக புகை கட்டுப்பாடு – கேட்டலிடிக் கன்வெர்டர்.

அலகு VII: ஸ்டியரிங் சஸ்பென்ஷன் சிஸ்டம், முன் மற்றும் பின்புற சக்கரங்களில் பிரேக் (25 கேள்விகள்)
ஸ்டியரிங் – வகைகள் – ஸ்டியரிங் சிஸ்டத்தின் செயல்பாடு – சஸ்பென்ஷன் சிஸ்டம் கூறுகள் – கொள்கைகள், சஸ்பென்ஷன் அமைப்பு, பாகங்கள், டெலிஸ்கோபிக் சஸ்பென்ஷன் வகைகள், சஸ்பென்ஷன் எண்ணெய் – ஷாக் அப்சோர்பர் வகைகள் – ஹைட்ராலிக்ஸ், வாயு – அழுத்தப்பட்ட, சுமை, கைமுறையில் சரிசெய்யக்கூடிய, தானியங்கி சுமை சரிசெய்யக்கூடியது.

தானியங்கி / கை இயக்க பரிமாற்ற சக்கரக் கட்டமைப்பு – சக்கர வகை – அளவு ரேடியல் பிளை டயர்கள் – டூப்லெஸ் டயர் – டயர் அழுத்தம் மற்றும் லைப் – டூப் அளவு, கிழித்தல் செயல்முறை – டயர் கட்டமைப்பு – டயர் பொருள், அளவு, டயர் தகவல், டயர் த்ரெடு வடிவமைப்புகள்.

பிரேக்கிங் சிஸ்டம் – அடிப்படை, கொள்கைகள், கூறுகள் – ட்ரம் மற்றும் டிஸ்க் பிரேக்குகள் – நன்மைகள், மாஸ்டர் சிலிண்டர், ஹைட்ராலிக்ஸ் அழுத்த பிரேக் பதம் – பிரேக் பேடல், பிரேக் திரவத் குழாய் – பிளீடிங், பிரேக் சக்தி பயன்படுத்துதல் – பிரேக் லைட் பேடு – பொருள்கள் – ABS டிரம் பிரேக்குகள் – அனைத்து பிரேக்கிங் சிஸ்டமையும் ஆய்வு செய்து சேவை செய்தல்.

ஈரமான மற்றும் உலர் கிளட்ச்கள் – கிளட்ச் வகைகள், ஜெயின் இயந்திரம் – கியர் ஷிப்ட் இயந்திரம் – கியர் விகிதம் – கியர் இயக்க நிலை – சிக்கல் தீர்வு – கிளட்ச் ஸ்லிப், கிளட்ச் வெளியேற்றப்படாதது – கியர் மாற்றும்போது கடினம், பேடல் திரும்பாதது, கியரின் தவறான நிலை – தானியங்கி பரிமாற்றம் – கியர் ஷிப்ட் இணைப்புகளின் சேதமடைவது, ஆய்வு மற்றும் கியர் ஷிப்ட் இணைப்புகளின் சீரமைப்பு.

அலகு VIII: மின்னணு சுழற்சி மற்றும் சோதனை A/C ஜெனரேட்டர் (20 கேள்விகள்)
அடிப்படை மின்னணு – செமிகண்டக்டர்கள் – டயோட்கள் – டயோட்களின் வகைகள் – டிரான்சிஸ்டர்கள் – PNP மற்றும் NPN டிரான்சிஸ்டர்கள் சோதனை – ரெகுலேட்டர் / ரெக்டிஃபையர் சோதனை மற்றும் அமைப்பு – தைரிஸ்டர்கள் – யூனிட் ஜங்க்ஷன் டிரான்சிஸ்டர்கள் (UJT), மெட்டல் ஆக்சைடு ஃபீல்டு எஃபெக்ட் டிரான்சிஸ்டர்கள் (MOSFETS) ஸ்விட்சுகள் – லாஜிக் கேட்ஸ் (OR, AND, NOT) – ஸ்விட்சுகளைக் கொண்டு லாஜிக் கேட்ஸ் – கண்டினியூட்டி டெஸ்டர்.

தெர்மிஸ்டர் – இக்னிஷன் ஸ்விட்ச். ஆல்டர்நேட்டர் – ரெகுலேட்டர் / ரெக்டிஃபையர் பேட்டரி பவர்சோர்ஸ் – இக்னிஷன் காயில், கான்டாக்ட் பிரேக்கர் – கப்பாசிட்டர் – கான்டென்சர் – உயர் அழுத்த கம்பிகள். ஸ்பார்க் பிளக் – பிளக் பகுதிகள் – மின்னணு இக்னிஷன் – ஸ்டார்டர் மோட்டார் – ஃப்யூஸ் – த்ராட்டில் பொசிஷன் ஸ்விட்ச் – சார்ஜிங் சிஸ்டம் – ஸ்டார்டிங் சிஸ்டம் – லைட்டிங் சிஸ்டம் – சுற்று வரைபடம் – வயரிங் ஹார்னஸ் – விளக்கு – வகைகள் – விவரக்குறிப்பு.

அலகு IX: இக்னிஷன் சுற்றுகளின் சோதனை (20 கேள்விகள்)
ஸ்பார்க் பிளக் இடைவெளி மற்றும் சரிசெய்தல் – இக்னிஷன் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கோயில் – A/C ஜெனரேட்டர், C.D.I யூனிட்டின் அகற்றலின் பயிற்சி (கேபாசிட்டிவ் டிஸ்சார்ஜ் இக்னிஷன்), C.D.I யூனிட்டின் ஆய்வு மற்றும் அமைப்பு – மின்னணு இக்னிஷன் சிஸ்டத்தின் சேவை – இக்னிஷன் நேரத்தை ஆய்வு செய்து சரிசெய்தல் – இக்னிஷன் ஸ்விட்ச், ஹேண்டில் ஸ்விட்சுகள், முன்னணி பிரேக் மற்றும் பின்புற பிரேக் ஸ்டாப் லைட் ஸ்விட்சின் ஆய்வு.

சிக்கல் தீர்வு

i) ஸ்பார்க் பிளக்கில் மின்பொறி வரவில்லை இன்ஜின் ஸ்டார் ஆன பின்பு சரிவர இயங்குவதில்லை.
ii) இக்னிசியன் ஸ்விட்ஜ் ஆன் செய்தும் லைட் எரிவதில்லை. ஹெட் லைட் பீம்ஸ்களில் HI-low சரிவர வேலை செய்வதில்லை.
iii) மிஸ் பயரிங் FI அமைப்பில் ஏற்படுகிறது. IAP, MAO, OXYGEN, TA-வின் வகைகள் பழுதுகள் மற்றும் நீக்குதல் – எரிபொருள் இன்சக்சன்.

அலகு X: மின்சார இரண்டு மற்றும் மூன்று வீலர்களின் சேவைகள் மற்றும் பராமரிப்பு (20 கேள்விகள்)
மின்சார வாகன கட்டமைப்பு வடிவமைப்பு மின்சார இயக்கம் மற்றும் கட்டுப்பாட்டாளர் – மின்சார இயக்கம் மற்றும் கட்டுப்பாட்டாளர் – சக்தி சேமிப்பு தீர்வுகள் (ESS) – பேட்டரி மேலாண்மை சிஸ்டம் (BMS) – சக்தி

மேலாண்மை சிஸ்டம் (EMS) – கட்டுப்பாட்டு அலகு (CU) – கருவிகள், சோதனை உபகரணங்கள் மற்றும் EV சேவை முறைகள் – பலவீன அலகு மின்னனு சுற்று, கட்டுப்பாட்டு மின்னனு ஹார்ட்வேர் சோதனை மற்றும் சீரமைப்பு – பேட்டரியின் பாதுகாப்பான சேமிப்பு.

33. தொழிற்பிரிவு: மேம்பட்ட கருவிகளை இயக்குபவர்
(தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு:544

அலகு I: பாதுகாப்பு (5 வினாக்கள்)
தொழிற்சாலை/பணிமனைகளில் பாதுகாப்பு மற்றும் பொதுவான முன்னெச்சரிக்கைகள் - தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) - முதலுதவி - மின்சார மெயின்களின் செயல்பாடுகள் மற்றும் மின் பாதுகாப்பு - தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாதுகாப்பு - பாதுகாப்பு அறிகுறிகள் - அவசரநிலைகளுக்கு பதிலளித்தல் – பணிமனை பராமரிப்பின் முக்கியத்துவம் - 5S கருத்துக்கள் - பொருள் கையாளுதல் - சுமைகளைத் தூக்குதல் மற்றும் கையாளுதல் - கனரக உபகரணங்களை நகர்த்துதல்.

அலகு II: அடிப்படை பொருத்துதல்கள் மற்றும் பராமரிப்பு (20 வினாக்கள்)
நோக்கம், வகைகள், மற்றும் விளக்கம் - வைஸ் - டிவைடர் - ஸ்க்ரைபர் - மார்க்கிங் பிளாக் - மைக்ரோமீட்டர் - வெர்னியர் காலிபர் - வெர்னியர் உயர அளவி - சர்ஃபேஸ் பிளேட் மற்றும் ஆங்கிள் பிளேட் - சேர்க்கை தொகுப்பு - வெர்னியர் பெவல் ப்ராட்ராக்டர் - பெஞ்ச் கிரைண்டர் - ஹேக் ரம்பம் மற்றும் ஹேக் ரம்பம் பிளேடு - சுத்தி - பயிற்சிகள் - துளையிடும் இயந்திரம் மற்றும் அதன் செயல்பாடுகள் - டேப்கள் மற்றும் டேப்பிங் - திருகு இயக்கிகள் - ஸ்பேனர்கள் - சாக்கெட் - குழாய் - ஹூக் ஸ்பேனர் - ரெஞ்ச்கள் - டி-சாக்கெட் - ராட்செட் - பைப் ரெஞ்ச்கள் - தாள் உலோக வகைகள் மற்றும் பயன்பாடு ஸ்னிப் மற்றும் ஸ்டேக் - டாலி மற்றும் ஸ்னாப்பைப் பயன்படுத்தி லேப் மற்றும் பட் இணைப்பு முறை - பைப் கட்டர்கள் - ஃபிக்சர்களைப் பயன்படுத்தி சூடான மற்றும் குளிர்ந்த நிலையில் வளைக்கும் முறை - ரிவெட்டுகள் மற்றும் ரிவெட்டிங் வகைகள் - கவனிக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் மற்றும் டிரிஃப்ட், புல்லர்கள் மற்றும் எக்ஸ்ட்ராக்டர்களைப் பயன்படுத்தும் முறை.

அலகு III: கடைசல் (Turning) (25 வினாக்கள்)
கடைசல் - வகைகள் - கட்டுமான அம்சங்கள் செயல்பாட்டுக் கொள்கைகள் - செயல்பாடுகள் - லேத் இயந்திரத்தின் துணைக்கருவிகள் மற்றும் இணைப்புகளைப் பயன்படுத்துதல் – இயக்க முறைமை (Driving Mechanism) - கூம்பு புல்லி - அனைத்து கியர் ஹெட்ஸ்டாக் - விரைவான மாற்ற கியர்பாக்ஸ் மற்றும் ஏப்ரான் இயக்க முறைமை - வகைகள் - லேத் வெட்டும் கருவிகளின் பொருட்கள் மற்றும் கோணங்கள் - பல்வேறு லேத் செயல்பாடுகளைச் செய்வதற்கான நோக்கம் மற்றும் முறை - துணைக்கருவிகள் மற்றும் இணைப்புகளைப் பயன்படுத்துதல் - வெட்டும் வேகத்தை தீர்மானித்தல் மற்றும் பயன்படுத்துதல் - ஊட்டம் - கூலண்ட் மற்றும் அதன் பயன்பாடுகள் - உயவு அமைப்பு - டேப்பர் டர்னிங் முறைகள் மற்றும் இணைப்பு - போரிங் - ஒரு பிளைண்ட் ஹோலில் Step போரிங் மற்றும் டேப்பர் போரிங் – எக்சென்ட்ரிக் டர்னிங் - மறைகள் (Threds)- பல்வேறு உள் மற்றும் வெளிப்புற திருகு மறைகள் (Threds) வெட்டுவதற்கான செயல்முறை.

அலகு IV: அரைத்தல் (Grinding) (15 வினாக்கள்)
அரைத்தல் - வகைகள் - கட்டுமானம் - அம்சங்கள் - செயல்பாட்டுக் கொள்கை - மேற்பரப்பு மற்றும் உருளை அரைக்கும் இயந்திரத்தின் செயல்பாடுகள் மற்றும் பயன்பாடு - அரைக்கும் சக்கரங்கள் மற்றும் அவற்றின் விவரக்குறிப்புகள் - சமநிலைப்படுத்துதல் மற்றும் சரிசெய்தலுக்கான அரைக்கும் சக்கரங்கள் - வேலை மற்றும் அரைக்கும் சக்கரத்தை வைத்திருக்கும் முறை - பல்வேறு அரைக்கும் செயல்பாடு சரியான வேகத்தைத் தேர்ந்தெடுப்பது - ஊட்டம் - குளிரூட்டி - தவறுகள் - அரைக்கும் இயந்திரத்தின் அவற்றின் சரிசெய்தல் மற்றும் தடுப்பு பராமரிப்பு - ஹைட்ராலிக் அமைப்பின் ஆய்வு.

அலகு V: துருவல் (Milling) (25 வினாக்கள்)
துருவல் – வகைகள் – துணைக்கருவிகள் – இணைப்புகள் – வேலை வைத்திருக்கும் சாதனங்கள் – வெட்டிகளின் வகைகள் – துருவல் செயல்பாடுகள் – எளிய துருவல் – Step Milling – Angle Milling – ஸ்லாட் Milling மற்றும் Groove Cutting – கியர்கள் – கியர் பெயரிடல் – கியர் வெட்டுதல் – கியர் வெட்டும் கணக்கீடுகள் - குறியீட்டு முறை – பல்வேறு கியர்களுக்கான செயல்முறை – ஹெலிகல் கியர்கள் – பெவல் கியர்கள் – ரேக் – Worm மற்றும் Worm Wheel.

அலகு VI: பரிமாற்றக்கூடிய அமைப்பு மற்றும் அளவீடுகள் (30 வினாக்கள்)
பரிமாற்றக்கூடிய அமைப்பு அடிப்படையின் கூறுகள் அளவு - வரம்புகள் - டாலரன்ஸ் - அளவன்ஸ் - வரம்புகளின் அமைப்பு - பொருத்தம் மற்றும் சகிப்புத்தன்மை பொருத்தத்தின் வகைகள் - துளை அடிப்படை மற்றும் தண்டு அடிப்படை - அளவீடுகள் மற்றும் வார்ப்புரு - நோக்கம் - வகைகள் - வரம்பு அளவீடுகள் - நோக்கம் - வகைகள் - வரையறை - தொழிலாளியின் ஆய்வு மற்றும் மாஸ்டர் அளவீட்டின் விளக்கம் மற்றும் பயன்பாடு - கொள்கை - சைன் பார் மற்றும் சைன் மையத்தின் கட்டுமானம் மற்றும் பயன்பாடு - ஸ்லிப் அளவீடுகளின் வகைகள் மற்றும் விளக்கம் - நோக்கம் - கட்டுமானம் மற்றும் பயன்படுத்துவதற்கான முறை கருவி தயாரிப்பாளர்கள் - நுண்ணோக்கி மற்றும் சுயவிவர ப்ரொஜெக்டர் - திருப்புவதற்கான குறைபாடுகள் மற்றும் தீர்வுகள் – துருவுதல்

மற்றும் அரைத்தல் - போன்ற குறைபாடுகள்: டேப்பர் - Chattring – Poor Surface Finish - இணையான தன்மை - Surface Finish முதன்மை மற்றும் இரண்டாம் நிலை - Surface Roughness கடினத்தன்மை தொடர்பான BIS சின்னங்கள்.

அலகு VII: CNC அடிப்படைகள் (20 வினாக்கள்)
CNC பணிநிலையம் - CNC இயந்திர அறிமுகம் - உள்ளீட்டு சாதனங்கள் - வெளியீட்டு சாதனங்கள் - CPU - நினைவகம் - CNC மற்றும் கணினிக்கு இடையேயான தொடர்பு - வகைகள் - கட்டுமானம் - CNC இயந்திரத்தின் வெவ்வேறு கூறுகள் - வழக்கமான இயந்திரங்கள் மற்றும் CNC இயந்திரங்களுக்கு இடையிலான ஒப்பீடு - CNC இயந்திரங்களின் நன்மைகள் மற்றும் தீமைகள் - அச்சு பதவி - ஒருங்கிணைப்பு அமைப்பு மற்றும் அவற்றின் பயன்பாடுகள் - CNC பகுதி நிரலாக்கத்தில் பயன்படுத்தப்படும் G குறியீடுகள் மற்றும் M குறியீடுகளின் வெவ்வேறு வகைகள்/செயல்பாடுகள் - இடைக்கணிப்பின் பல்வேறு வகைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் - கட்டர் ஆரம் காம்ப் Tool Wear Comp – Tool Nose Radius Comp – Tool Normenclature – Tool Change Comment – வேலை மற்றும் டூல் ஆஃப்செட் - ஊட்டம் போன்ற வடிவியல் தகவல் மற்றும் தொழில்நுட்ப தகவல்களை (G & M குறியீடுகள்) பயன்படுத்தி கடைசல் மற்றும் துருவுதல் இரண்டிற்கும் பகுதி நிரலாக்கம் - வேகம் - வெட்டு ஆழம்.

அலகு VIII: CNC Turning Centre (20 வினாக்கள்)
JOG, MPG, REF, MDI/MDA போன்ற செயல்பாட்டு முறைகள் - Auto SBL மற்றும் Auto தொடர் முறை போன்ற வெவ்வேறு முறைகளில் நிரல் செயல்படுத்தல் - CNC வெட்டும் கருவிகள் பற்றிய அறிவு - Geometry - பொருள் - வெட்டு வேகம் - வெட்டும் ஊட்டம் மற்றும் ஆழம் - கருவி ஆஃப்-செட்டிங் மற்றும் கருவி அமைப்பின் நுட்பங்கள் - வரைபடத்தின்படி பல்வேறு நிரல்களைத் தயாரித்தல் - வெவ்வேறு சுயவிவரங்களுக்கான விளிம்பு நிரலாக்கத்தின் கருத்து - ஸ்டாக் அகற்றுதல் போன்ற வெவ்வேறு சுழற்சிகளுக்கான நிரல் – Grooving – Threading - அண்டர்கட் மற்றும் Canned/ Fixed Cycle - கருவி வகை விளக்கப்படம் – Tool Nose Radius Compensation (TNRC) (G41 மற்றும் G42).

அலகு IX: CNC செங்குத்து இயந்திர மையம் (25 வினாக்கள்)
வெட்டும் கருவிகள் :வெட்டுளி – ஹாக்சா - ஹாக்சா பிளேடு வகைகள் – பிட்ச் – பன்ச்சின் வகைகள் – பைல் (அரம்) வகைகள் மற்றும் பயன்கள் அதனுடைய தரம் மற்றும் அமைப்பு – டிரில் அதனுடைய பாகங்களும் வகைகளும் மற்றும் அலகுகள் – டேப் மற்றும் டை - டேப் எக்ஸ்டராக்ஷன் – டை மற்றும் டைஸ்டாக் – உடைந்து போன டேப் மற்றும் ஸ்டட்களை வெளியே எடுக்கும் முறைகள் – லேத்கட்டிங் கருவிகள் – பலவகை ரீமர் – நர்லிங் கருவிகள்.

பிடிக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் : வைஸ் – வைஸின் வகைகள் – வீ பிளாக் – டிரில் செக் - லேத் செக் – 3 ஜா செக் - 4 ஜா செக் - செல்ப் செக் – காலட் செக் – பேஸ் பிளேட் – கேட்ச் பிளேட் – லேத் சென்டர் வகைகள் – லேத் கேரியர்ஸ் – லேத் மேன்டிரில்ஸ் வகைகள் – ட்ரேவலிங் ஸ்டெடி – பிக்ஸடுஸ்டெடி – ஜிக்ஸ் மற்றும் ஃபிக்சர்ஸ்.

அலகு III: லேத்தை இயக்குதல் (35 கேள்விகள்)

முக்கிய பாகங்கள் – லிவர் நிலைகள் – லூப்ரிகேஷன் பாயிண்ட் – லேத்தின் பாகங்கள் – லேத்தை வகைப்படுத்துதல் – செயல்பாடு மற்றும் அமைப்புகள் லேத்தின் விவரக்குறிப்பு – லேத் டிரைவின் வகைகள் – நன்மைகள் மற்றும் தீமைகள் – ஹெட்ஸ்டாக் – டூல் போஸ்ட்ன் வகைகள் மற்றும் டூல் செட்டிங் – கோன் புல்லி - வகைகள் – ஆல் கியர்டு ஹெட் ஸ்டாக்கின் வகைகள் – டம்ளர் கியர் யூனிட்டின் செயல்பாடுகள் மற்றும் கட்டுமான அமைப்புகள் – வேகத்தை குறைப்பதன் அவசியம் மற்றும் பேக் கியர் யூனிட்டின் அமைப்பு அதன் பயன்பாடுகள் – நர்லிங் என்பதன் பொருள் – நர்லிங்ன் அவசியம் அதன் வகைகள் – கிரேடுகள் மற்றும் நர்லிங் டூலின் வெட்டும் வேகங்கள் – லேத் கட்டிங் டூலின் வகைகள் – வடிவங்கள் – லேத் டூலின் விவரக்குறிப்புகள் – லேத்தில் செய்யப்படுகின்ற பல்வேறு வேலைகள் – ஃபேஸிங் – பிளைன் டர்னிங் – ஸ்டெப் டர்னிங் – டேப்பர் டர்னிங் – கான்டூர் டர்னிங் –கட் ஆஃப் - ஃபார்ம் டர்னிங் – ஷேம்ஃபரிங் திரட் – போரிங் – டிரில்ங் – நர்லிங் – எக்சென்ட்ரிக் டர்னிங்- எக்சென்ட்ரிக் போரிங் – டெம்பிளேட்டின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் – டூல் மேக்கர்ஸ் பட்டன் மற்றும் அதன் பாகங்கள் – கவுண்டர் போரிங் – கவுண்டர் சிங்கிங் – ஸ்பாட்ஃபேஸிங் – ஸ்பிலிட் போரிங் – பிக்சர்ஸ் கையாளும் போது கவனிக்க வேண்டியவை – லேத் கட்டிங் டூலில் உள்ள பலவித கோணங்கள் – காம்பினேஷன் டிரில் – சரியான அளவை அட்டவணையில் தேர்வு செய்தல் – டிரில் செக் –லேத் உபகரணங்கள்.

அலகு IV: டேப்பர் டர்னிங் மற்றும் பார்ம் டர்னிங் (10 கேள்விகள்)

டேப்பர் – டேப்பர் வெளிப்படுத்தும் வெவ்வேறு முறைகள் – பல்வேறு ஸ்டாண்டர்டு டேப்பர் அதன் பயன்கள் – டேப்பரின் முக்கிய அளவுகள் – காம்பவுண்ட் ஸ்லைடு ஸ்விவல் கோணத்தை கணக்கீடுதல் – டேப்பர் கோணத்தை அளவீடுமுறைகள் – பார்ம் டூல்ஸ் செயல்பாடு – அதன் வகைகள் மற்றும் பயன்கள் – டெம்பிளேட்டின் நோக்கம் மற்றும் பயன்கள்– ஜிக் மற்றும் பிக்சரின் வகைகள் – அதன் பயன்கள் – ஷிப் பிரேக்கரின் நோக்கம் – அதன் பயன்கள் – சைன் பார் மற்றும் ரோலர் மூலம் டேப்பரை சரிபார்த்தல் – கட்டிங்ஸ்பீடு மற்றும் ஃபீடு – டர்னிங் நேரம் மற்றும் டெப்த் ஆப் கட்டை கணக்கீடுதல்.

அலகு V: அலாய்டு ஆப்ரேஷன் மற்றும் ஹீட் ட்ரீட்மெண்ட் (10 கேள்விகள்)

சால்டரிங் அடிப்படை செயல் முறைகள் – வெல்டிங் மற்றும் பிரேசிங் – வெல்டிங் அடிப்படை செயல்முறைகள் – கேஸ் வெல்டிகிங்ல் கேஸ்சின் பயன்கள் – வெல்டிங் நாசில்ஸ்.

ஹீட் ட்ரீட்மெண்ட் – பொருள் மற்றும் செயல்முறை – ஹார்டனிங் மற்றும் டெம்பரிங் – ஸ்டீலிற்கான அனீலிங் – கார்பௌரைஸிங் ஸ்டீல் – ஹீட் ட்ரீட்மெண்ட் அதன் நோக்கம் – நார்மலைஸிங் – மேற்பரப்பு கடினப்படுத்துதலில் உள்ள முக்கியமான லோயர் மற்றும் அப்பர்.

அலகு VI: எக்ஸ் சென்ரிக் டர்னிங் மற்றும் போரிங் (10 கேள்விகள்)

வெர்னியர் ஹைட் கேஜல் எக்ஸ் சென்ரிக் மார்கிங் – எக்ஸ் சென்ரிக் போரிங் – டெம்பிளேட்டிங் அமைப்பு மற்றும் இயக்கம் – டூல் மேக்கர் பட்டன் மற்றும் பாகங்கள் – போரிங்வீல் - ஸ்பிலிட் போரிங் கவுண்டர் போரிங் – ஃபிக்சரை பயன்படுத்தி ஸ்பிலிட் போரிங் கைடர்னிங் செய்தல்.

அலகு VII: திரட் கட்டிங் மற்றும் திரட்டின் பிற வடிவங்கள் (35 கேள்விகள்)

ஸ்குரு திரட்டிடுகளின் வடிவங்கள் – பாகங்கள் மற்றும் பயன்பாடுகள் – பார்ம் த்ரெட்டை உருவாக்கும் பல்வேறு முறைகள் – டிரைவ் டிரெய்ன் சேஞ்ச் கியர் பார்முலா அதன் கால்குலேஷன்– ஸ்குரு திரட் கேஜ் மற்றும் பிளக் கேஜ்யை பயன்படுத்தி திரட்டை சரிபார்த்தல் முறை.

திரட்டை உருவாக்கும் வேறுபாடுமுறைகள் – கால்குலேஷன் இன்வால்வுடு கோர் டையா – சிம்புள் கியரிங் – டிரைவர் மற்றும் டிரைவன் – லீடு ஸ்குரு – பிச் திரட் கட்டிங் – திரட் சேசிங் டையல் – இயக்கம் – அமைப்பு மற்றும் பயன்கள்.

மெட்ரிக் திரட்டின் வேறுபாடு – BA திரட் மற்றும் பைப் திரட்டின் விவரங்கள் கியர் விகிதம் மற்றும் கியர் தொடர்பான கணக்கீடு – ஸ்குரு திரட் மைக்ரோமீட்டர் அதன் பயன்கள்.

மல்ட்டிபிள் திரட் செயல்பாடுகள் அதன் பயன்கள் – மல்ட்டிபிள் திரட் மற்றும் வெட்டும் முறைகள் – அக்மீ திரட் மற்றும் பட்ரஸ் திரட்டின் டெப்த், கோர் டயா, பிச், விகிதம், கணக்கிடுதல்.

இன்ச் லீடு ஸ்குரு லேத்தில் மெட்ரிக் திரட் வெட்டுவதற்கு கியர் ரேஷியோ கணக்கிடுதல்.

மல்ட்டிபிள் திரட்டின் டூல் ஷேப்பின் வேறுபாடு முறைகள் – சதுர மரையின் உள்ளடக்கிய கட்டிங் டூலின் வடிவங்களை கணக்கீடுதல்.

ஹெலிஸ் ஆங்கிள் மற்றும் திரெட்டிங் டூலிங் கிளியரன்ஸ் ஆங்கிள் கோணங்களில் ஏற்படுத்தும் அதன் பாதிப்புகள் – டூல் லைஃப் நெகட்டிங் டாப் ரேக் ஆங்கிள் பயன்பாடு மற்றும் செயல்திறன் – பாஸ்ட்டியூ டாப் ரேக் ஆங்கிள் – டேப்பரின் மேல் பரப்பில் திரட் செய்யும் முறை.

அலகு VIII: அட்வான்ஸ் டர்னிங் மற்றும் CNC டர்னிங் (35 கேள்விகள்)

அடிப்படை CNC டெக்னாலஜி – கண்ட்ரோல் சிஸ்டம் மற்றும் ஸ்பெசிபிகேஷன் – CNC மெஷினின் ஆக்ஸில் கன்வெர்ஷன் – ஃபீட்பேக் கண்ட்ரோல் சிஸ்டம் மற்றும் இன்டர்பொலோசன்ஸ் – கோ – ஆர்டிநேட் ஜாமென்டிரின் கருத்துகள் – டூல் ஆப்செட் மற்றும் ஜாப் ஆப்செட் – புரோகிராம் வரிசை, ஐ.எஸ்.ஓ G குறியீடுகள் மற்றும் M குறியீடுகள் – மெஷின் ஆப்ரேஷன் மோட்ஸ் – ஜாக் – MPG எடிட் மெமரி பனுக் – கேனுடு சைக்கிள்ல் (Canned Cycles) - வெட்டும் வேகம் மற்றும் ஊட்டம் – செயல்முறை திட்டமிடல், வரிசைப்படுத்துதல் டூல் அமைப்பு மற்றும் மெஷினின் ஆப்ரேசன் மற்றும் டூல்பாதை – டூல் நோஸ் ரேடியஸ் காம்பென்ஷன் – CNC மெஷினிங் செய்ய கட்டிங் டூலின் பொருள் (Cutting tool material) – CNC மெஷின்களுக்கான பழுதுநீக்கம் – டேட்டா இன்ட்புட் மற்றும் அவுட்புட் – CNC சிஸ்டம் - CAM – புரோகிராமின் பயன்பாடுகள்.

அலகு IX: ஸ்பெசல் ஆப்ரேஷன் ஆஃப் லேத் மற்றும் ஸ்பெஷல் ஜாப் மற்றும் மெயின்டனன்ஸ் (25 கேள்விகள்)

பிரிவென்டியூ பராமரிப்பு – லூப்ரிகேஷன் செயல்பாடு மற்றும் அதன் வகைகள் – லூப்ரிகேஷன் செய்யுமுறை – கிரைண்டிங் வீல் – அப்ரேசிவ் – கிரிட் – கிரோடு மற்றும் பாண்ட் பரிமாற்றத்தின் பொருள் (interchangeability meaning) – குவாலிட்டி கண்ட்ரோல் செயல்முறை மற்றும் உற்பத்தி – சிம்புலின் வகைபாடு.

மாஸ் புரேடக்சன் – லிமிட்ன் அமைப்பு – டாலரன்ஸ் – ஃபிட்ன் வகைகள் – ஹோல் மற்றும் ஷாப்டிற்கான குறியீடுகள் ஹோல் பேசிஸ் சிஸ்டம் மற்றும் வரைபடத்தின் டாலரன்ஸ் – BIS 919 படி யூனிலேட்டரல் மற்றும் பைலேட்ரலின் அமைப்பு – பகுதி வரைபடம் மற்றும் கோள வடிவத்தினை ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் – ஆட்டோமேட்டிக் லேத்தின் பாகங்கள் – அதன் வகைகள் – டூல்ஹோல்டர் அதன் பயன்கள்.

அலகு X: உலோகம் மற்றும் உலோகமற்ற பண்புகள் (10 கேள்விகள்)
உலோகங்களின் தேர்வு – லேத் வெட்டும் கருவிகளின் பண்புகள் – MS – HCS - HSS - சிமெண்ட் கார்பைட் – வகைகள் மற்றும் பயன்கள் – வெட்டும் கருவிகள் நற்பண்புகள் – பல்வேறு வகையான கருவிகளின் மெட்டீரியல் –ஸ்டெர்லைட் – கார்பைடு பூசப்பட்ட உலோகங்கள் – செராமிக் – வைரம் – ஒருமுனையில் வெட்டும் கருவிகள் – எல் ஹெச் டூல் – ஆர் ஹச் டூல் – ட்ரில் பிட்டில் பல்வேறு வகையான உலோகங்கள் மற்றும் கோணங்கள் – லேத் டூல்லில் பல்வேறு வகையான உலோகங்கள்.

44. தொழிற்பிரிவு: பற்றவைப்பவர் [எரிவாயு மற்றும் மின்சாரம்]

(தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு: 440

அலகு I: வெல்டிங்கின் அறிமுகம் மற்றும் வரையறைகள் (10 வினாக்கள்)
பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் SHEILDED METAL ARC WELDING (SMAW) & OXY ACCETYLENE WELDING (OAW) ஆர்க் மற்றும் கேஸ் வெல்டிங் உபகரணங்கள், கருவிகள் மற்றும் பாகங்கள் - பல்வேறு வெல்டிங் செயல்முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் - ஆர்க் மற்றும் கேஸ் வெல்டிங் விதிமுறைகள் மற்றும் வரையறைகள்.

அலகு II: உலோகத்தை இணைக்கும் பல்வேறு செயல்முறைகள் (20 வினாக்கள்)
போல்டிங், ரிவெட்டிங், சால்டரிங், பிரேசிங், சீமிங் போன்றவை தற்காலிக இணைப்பு வகைகளை சார்ந்தது - வெல்டிங் மட்டும் நிரந்தர இணைப்பு ஆகும் மற்றும் அதன் பயன்பாடுகள் - நிரந்தர மற்றும் தற்காலிக இணைப்புகள் - விளிம்பு (ஓரங்கள்) தயாரித்தல் மற்றும் வெவ்வேறு கனமான உலோகங்களை பொருத்துதல் - மேற்பரப்பு சுத்தம் - அடிப்படை மின்சாரம் பயன்பாடு ஆர்க் வெல்டிங் மற்றும் தொடர்புடைய மின்சார விதிமுறைகள் & வரையறைகள் – வெப்பம், வெப்பநிலை மற்றும் வெல்டிங் தொடர்பான அதன் விதிமுறைகள் - ஆர்க் வெல்டிங்கின் கொள்கை மற்றும் குணாதிசயங்கள்.

அலகு III: ஆக்ஸி - அசிட்டிலீன் கட்டிங் பிளாண்ட் [OXY ACETYLENE GAS CUTTING (OAGC)] மற்றும் ஆக்ஸி - அசிட்டிலீன் வெல்டிங் [OXY ACETYLENE WELDING (OAW)] (10 வினாக்கள்)
வெல்டிங் & கட்டிங், ஃப்ளேம் வெப்பநிலை மற்றும் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் பொதுவான வாயுக்கள். – ஆக்சிஜன், அசிட்டிலீன் வெப்பநிலை தீப்பிழம்புகள் மற்றும் பயன்பாடுகள் - ஆக்ஸி-அசிட்டிலீன் வெட்டும் கருவியின் கொள்கை, அளவுருக்கள் (Parameter) மற்றும் பயன்பாடு.

அலகு IV: ஆர்க் வெல்டிங் மின்சக்தி ஆதாரங்கள் (20 வினாக்கள்)
டிரான்ஸ்பார்மர், மோட்டார் ஜெனரேட்டர் செட், ரெக்டிஃபையர் மற்றும் இன்வெர்ட்டர் வெவ்வேறு வகைகள் வெல்டிங் இயந்திரங்கள் மற்றும் அதன் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு - ஏ.சி மற்றும் டி.சி வெல்டிங் இயந்திரங்களின் நன்மைகள் மற்றும் தீமைகள்.

அலகு V: ஆர்க் வெல்டிங் நிலைகள் (30 வினாக்கள்)
EN & ASME இன் படி பிளாட், கிடைமட்டம், செங்குத்து மற்றும் தலைக்கு மேல் பற்றவைப்பு நிலை - வெல்டிங் சாய்வு மற்றும் சுழற்சி - BIS & AWS இன் படி வெல்டிங் குறியீடுகள் (Symbol) - ஆர்க் நீளம் மற்றும் அதன் வகைகள் - ஆர்க் நீளத்தின் விளைவுகள் – மின்முனை மாற்றம் மற்றும் பயன்பாடுகள்: வகைகள் - வெல்டின் தர சோதனை மற்றும் ஆய்வு, பொதுவான வெல்டிங் குறைபாடுகள் நல்ல மற்றும் குறைபாடுள்ள வெல்டுகளின் தோற்றம் - வெல்ட் கேஜ்கள் மற்றும் அதன் பயன்பாடுகள்.

அலகு VI: கேஸ் சிலிண்டர்கள் மற்றும் ரெகுலேட்டர்கள் (20 வினாக்கள்)
கால்சியம் கார்பைடு ஒரு அபாயத்தை உண்டாக்குகிறது - அசிட்டிலீன் வாயு பண்புகள் மற்றும் ஃபிளாஷ் பேக் அரெஸ்டர் - ஆக்ஸிஜன் வாயு மற்றும் அதன் பண்புகள், வெல்டிங்கில் பயன்படுத்துகிறது. ஆக்ஸிஜன் மற்றும் அசிட்டிலீன் வாயுக்களின் நிரப்புதல் செயல்முறை - வெவ்வேறு எரிவாயு சிலிண்டர்களுக்கான வண்ணக் குறியீட்டு முறை - ரெகுலேட்டர் – ஒருநிலை (Single Stage) மற்றும் இரண்டு நிலை (Double Stage) - ஆக்ஸி மற்றும் அசிட்டிலீன் எரிவாயு வெல்டிங் அமைப்பு (குறைந்த மற்றும் அதிக அழுத்தம்) - எரிவாயு வெல்டிங் நுட்பங்கள் - வலதுபுறம் மற்றும் இடதுபுறம் தொழில்நுட்பம் – நிரப்பு கம்பி, ஃபிளக்ஸ் ரோட் விவரக்குறிப்பு மற்றும் பயன்பாடுகள்.

அலகு VII: SMAW குறைபாடுகள் (20 வினாக்கள்)
ஆர்க் ப்ளோ - கட்டுப்படுத்துவதற்கான காரணங்கள் மற்றும் தீர்வு முறைகள் - ஆர்க் & கேஸ் வெல்டிங்கில் உருவமாற்றம் - குழாய் வெல்டிங் - குழாய் இணைப்புகளின் வகைகள் - நிலைகள் - குழாய் மற்றும் பிளேட் வெல்டிங்கிற்கு இடையிலான வேறுபாடு – விரிவாக்க படம் (எல்போ,), பட் ஜாயின்ட் 'T' ,'Y' மற்றும் கிளை இணைப்பு.

அலகு VIII: ஆர்க் வெல்டிங் எலக்ட்ராடு (20 வினாக்கள்)
வகைகள், ஃப்ளக்ஸின் செயல்பாடுகள், பூச்சு குறியீட்டு காரணி, BIS, AWS இன் படி மின்முனை குறியீட்டு அளவுகள் - ஈரப்பதத்தின் விளைவுகள். எலக்ட்ராடுகளின் சேமிப்பு மற்றும் பேக்கிங் - சிறப்பு நோக்க மின்முனைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள். உலோகங்களின் வெல்ட் திறன், முன் வெப்பப்படுத்துதலின் முக்கியத்துவம், வெப்பத்திற்குப் பின் வெப்பம் மற்றும் இடைப்பட்ட வெப்பநிலையை பராமரித்தல்.

அலகு IX: வெவ்வேறு சோதனை முறை மூலம் வெல்டு இணைப்புகளை சோதனை செய்தல் (10 வினாக்கள்)
அழித்து சோதனை - நிக் பிரேக் – வளைத்து சோதித்தல் - இழுவிசை - **அழிவில்லாத சோதனை** - சாயம் ஊடுருவல் - காந்த துகள்கள் - எக்ஸ் கதிர் - காமா கதிர்.

அலகு X: Gas Tungsten Arc Welding (Gtaw) & Gas Metal Arc Welding (GMAW) (CO_2) வெல்டிங் செயல்முறை (40 வினாக்கள்)
சுருக்கமான விளக்கம் - AC மற்றும் DC வெல்டிங், உபகரணங்கள், முனைமாற்றம் மற்றும் பயன்பாடுகள். பல்வேறு வெல்டிங் செயல்முறை (**GTAW மற்றும் GMAW (CO_2)**) - **GTAW** – AC [Alternative Current] & DC [Direct Current]- டங்ஸ்டன் எலக்ட்ராடின் வகைகள் & அளவுகள் - GTAW மற்றும் GMAW டார்ச்சுகள் - வகைகள், பாகங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் - GTAW நிரப்பு கம்பிகள் மற்றும் தேர்வு செய்தல் - GMAW - கம்பி ஃபீட் சிஸ்டம் – ஷீல்டிங் வாயுக்கள் (ஆர்கான், CO_2) Advanced Welding Process - மூழ்கிய வெல்டிங் -தெர்மிட் வெல்டிங் – மின்தடை பற்றவைப்பு (ஸ்பாட், சீம், ப்ராஜெக்ஷன்) - உராய்வு வெல்டிங் (ஃப்ளாஷ் பட்) - பிளாஸ்மா ஆர்க் வெல்டிங் மற்றும் கட்டிங் - பிளாஸ்டிக் வெல்டிங் பாலிப்ரோப்பிலீன் (PP), பாலிஎதிலீன் (PE), பாலிவினைல்சிலோரைடு (PVC) - மின்தூண்டல் வெல்டிங்.
பணிமனை கணிதம் மற்றும் அறிவியல் (Workshop Calculation and Science) : அலகு, பின்னம் – ஸ்கொயர் ரூட், விகிதாச்சாரங்கள், சதவீதம் - பொருள் அறிவியல் - நிறை, எடை, அளவு மற்றும் அடர்த்தி - வெப்பம் மற்றும் வெப்பநிலை மற்றும் அழுத்தம் - அடிப்படை மின்சாரம் – மின் அளவீடு - முக்கோணவியல்.
பொறியியல் வரைபடம் (Engineering Drawing) : அறிமுகம் - வரைதல் கருவி – ஃப்ரி ஹேண்ட் ஸ்கெட்ச் - வடிவியல் - கை கருவிகள், அளவிடும் கருவிகள் - ஃபேப்ரிகேஷன் வரைதல், பல்வேறு வகையான வெல்டிங் இணைப்புகள் மற்றும் குழாய் இணைப்புகளின் பிரிவு பார்வை - தொடர்புடைய வர்த்தகங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் - தொடர்புடைய வர்த்தகங்களின் வேலை வரைபடத்தைப் படித்தல்.

45. தொழிற்பிரிவு – கம்பியாள் (Wireman)
(தொழிற்பயிற்சி தரம்)

குறியீடு: 550

அலகு I: பாதுகாப்பு மற்றும் கருவிகள் கையாளுதல் (Safety and Tools Handling) (10 கேள்விகள்)
பாதுகாப்பு விதிகள் மற்றும் அடையாளங்கள்(signs) – விபத்துகளைத் தடுப்பது – அபாயங்களை கண்டறிதல் – எச்சரிக்கை அடையாள லேபிள்கள். தீ வகைகள் மற்றும் அணைப்பான்கள் – மின் தீ, மீட்பு நடவடிக்கைகள் மற்றும் முதலுதவி - பணிமனை கழிவுப் பொருட்கள் நீக்கம் – சுற்றுச்சூழல் அபாயங்களைத் தடுப்பது - தொழிற்சாலை பாதுகாப்பு – தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்(PPE) பயன்பாடு - மின்சார அதிர்ச்சிக்கு காரணங்கள் – மின் செயலிழப்பு – தீ மற்றும் சிஸ்டம் பழுது செயலிழப்பு - மின்சார சாதனங்களுக்கான BIS/ISI குறியீடு. 5S கோட்ப்பாடு. தொழில்கருவிகள் மற்றும் உபகரணங்கள் – விவரக்குறிப்பு – பயன்பாடு – பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு.

அலகு II: மின்கம்பி இணைப்புகள் மற்றும் கேபிள்கள் (Electrical Wire Joints and Cables) (20 கேள்விகள்)
மின்கம்பிகள் – கேபிள்கள், வகைகள், விவரக்குறிப்பு – மின்னழுத்த தரநிலை – முன்னெச்சரிக்கை – பயன்பாடு. பல்வேறு மின்கம்பி இணைப்பு முறைகள் – மின் கம்பியின் மின் காப்பு அகற்றுதல் (stripping) – தோலிழைத்தல்(skinning), Standard Wire Gauge (SWG) மற்றும் மைக்ரோமீட்டர். வீட்டு, வணிக மற்றும் தொழில்துறை வயரிங் அமைப்புகள். வயர்கள் மற்றும் கேபிள்கள் – மின்க்காப்பு – மின்னழுத்த தரநிலை – வெப்பநிலை உயர்வு. மின்க்காப்பு, செமிகண்டக்டர் மற்றும் மின்தடை. சால்டரிங் செய்யும் முறைகள் – சால்டர், ஃபிளக்ஸ், கேபிள் பிரேசிங் முறைகள் (Brazing), கிரிம்ப்பிங் முறைகள் (crimping) கருவிகள் மற்றும் திம்பிள்ஸ் (thimbles), லெக்ஸ். கோ - அக்ஸியல் பிளக் மற்றும் சாக்கெட்டுகள் (Co-axial plug and socket) கேபிள்கள் – நன்மைகள் மற்றும் தீமைகள், பல்வேறு வகைகள் (PVC, XLPE, PILC, எண்ணெய் நிரப்பிய கேபிள்) - மின் காப்பு & மின்னழுத்த தரநிலைகள். இணைப்புகள் மற்றும் டெர்மினேஷன் – கேபிள் வடிவமைக்க காரணிகள், ஹீட் ஸ்ட்ரிங்க் (shrinkable), எக்ஸ்ட்ரூஷன் மோல்டட் ஸ்லிப் ஆன் இணைப்புகள், கோல்ட் ஸ்ட்ரிங்க் டெர்மினேஷன் (cold shrink terminations). இணைப்புப் பொருட்கள் வகைகள் – கேபிள், மின்பாதை (current path) வடிவமைப்பு – கம்பி இணைப்பு முறைகள் - காண்டாக்ட் ரெசிஸ்டன்ஸ். கல்வானிக் அரிப்பு மற்றும் பை-மெட்டல் கடத்திகள் பயன்பாடு – ஸ்கிரீன் மற்றும் ஆர்மர், மெக்கானிக்கல் பாதுகாப்பு. மின் கேபிள் இணைப்பு கிட் (Kits) மற்றும் டெர்மினேஷன் – கேபிள் டெர்மினேஷன் - இக்யூப்ப்மென்ட், ஸ்டாண்டர்ட்ஸ் மற்றும் டெஸ்டிங் - வகைகள், ரூட்டிங், ஃபீல்ட் மற்றும் ஸ்டிரஸ் கண்ட்ரோல் டெஸ்ட்

அலகு III: எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் சர்க்யூட்ஸ் (Electrical and Electronics Circuits) (25 கேள்விகள்)

மின்சாரத்தின் அடிப்படைகள் – தேசிய மின்சார குறியீடு 2011 - குறிப்புகள் மற்றும் வரையறைகள், ரெசிஸ்டன்ஸ் அளவிடுதல் – மின்னழுத்த வீழ்ச்சி(drop) முறை, வீட்ஸ்டோன் பிரிட்ஜ் முறை அடிப்படை விதிகள் – ஓம் விதி (Ohm's Law) மற்றும் கிர்சாஃப் விதிகள் (Kirchhoff's Laws) மின்சுற்றுகள் மற்றும் நெட்வொர்க்குகள் – ரெசிஸ்டன்ஸ் விதி – ரெசிஸ்டன்சின் வகைகள் – தொடர் மற்றும் பக்க இணைப்புகள் மற்றும் அவற்றின் பண்புகள், காந்தத்தன்மை – விதிமுறைகள், மெட்டிரியல் மற்றும் பண்புகள், மின்காந்த விதிகள் – சொலினாயிடு – மின்னோட்டத்தின் விளைவுகள் – EMF (செல்ப் & மீயூச்சிவலி இன்டியூஸ்டு EMF-கள்) கெபாசிட்டர்கள் – வகைகள், செயல்பாடுகள் – குழுவாக்கம்(Grouping) மற்றும் பயன்பாடுகள் - AC சர்க்யூட் – RL, RC மற்றும் RLC – தொடர் மற்றும் பக்க இணைப்புகள் - வெக்டர் கோட்ப்பாடு, இண்டக்ட்டிவ் மற்றும் கெப்பாசிட்டிவ் ரீ-யாக்டான்ஸ் விளைவுகள். DC மற்றும் AC சிஸ்ட்டம் – பயன்கள், தொடர்புடைய வரையறைகள் – பிரிக்குன்சி, இன்ஸ்டன்டனெவ்ஸ் மதிப்பு, Root Means Square (RMS) மதிப்பு, ஆவெரேஜ் மதிப்பு, பீக் ஃபேக்டர், ஃபார்ம் ஃபேக்டர் மற்றும் இம்பெடன்ஸ். பவர் - ஆக்டிவ் மற்றும் ரீ-ஆக்டிவ் பவர் – ஒற்றை ஃபேஸ் மற்றும் மூன்று ஃபேஸ் மின்சார அமைப்பு – பாலி ஃபேஸ் சிஸ்ட்டம் பயன்கள் – ஸ்டார் மற்றும் டெல்ட்டா இணைப்பு – சமநிலை(balanced) மற்றும் சமநிலை இல்லாத(unbalanced) அமைப்புகள் – கணக்கீட்டு பிரச்சினைகள். PN- ஜங்ஷன் டையோடு, ரெக்டிஃபையர் – (அரை) Half, முழு (Full) மற்றும் பிரிட்ஜ் (Bridge). ரெசிஸ்டன்ஸ் – கலர் கோடிங், வகைகள் மற்றும் பண்புகள். மின்னனு கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுதல்.

அலகு IV: மின்சார இயந்திரங்கள் மற்றும் எர்த்திங் (Electrical Machines and Earthing) (25 கேள்விகள்)

DC இயந்திரம் – கோட்பாடு, பாகங்கள் மற்றும் பயன்பாடுகள் - EMF சமன்பாடு – ஜெனரேட்டர்களின் எக்ஸிடேஷன் (செல்ஃப் மற்றும் செபரெட்டைலி). ஆர்மேச்சர் எதிர்வினை, காமுட்டேஷன், இன்ட்டர்போல்கள் மற்றும் இன்ட்டர்போல்களை இணைக்கும் முறை. DC ஜெனரேட்டர்களின் இணைந்த (பேரலல்) - செயல்பாடு, பயன்பாடுகள், இழப்புகள் & வினைத்திறன், DC மோட்டார்களின் கோட்பாடு மற்றும் வகைகள். சுழற்சி திசையை மாற்றுதல், DC – மோட்டார் தொடக்க(ஸ்டாட்டர்) சாதனங்கள், DC மோட்டார்களின் வேக கட்டுப்பாட்டு முறைகள் – டிரான்ஸ்ஃபார்மர்கள் – ஒற்றை மற்றும் மூன்று ஃபேஸ் - கோட்பாடு, கட்டமைப்பு மற்றும் வகைப்பாடு, பரிசோதனை (OC மற்றும் SC பரிசோதனை).

AC இயந்திரங்கள் – மோட்டார் மற்றும் அல்டர்நேட்டர் - கோட்பாடு, கட்டமைப்பு மற்றும் வகைப்பாடு, AC மோட்டார் தொடக்க (ஸ்டாட்டர்) சாதனங்கள் மற்றும் மென்மையான தொடக்கி (சாஃப்ட் ஸ்டாட்டர், சர்வீஸ்), ட்ரபில்ஷூட்டிங் மற்றும் பராமரிப்பு - எர்திங் இணைப்பு – IE விதிகள் – பிளேட் மற்றும் பைப் எர்திங், எர்த் டெஸ்டர் / மெக்கர், எர்த் - ரெசிஸ்டன்ஸ், கசியும் (லீகேஜ்) மின்சாரம், கிரவுண்டிங் மற்றும் எர்திங்கின் வித்தியாசம் – மின்சுற்றின் முதன்மை எர்த் மற்றும் போர்ட்டபிள் எர்த்.

அலகு V: மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் (Power Generation and Distribution) (20 கேள்விகள்)

மின் உற்பத்தி அமைப்பு - மின் உற்பத்தி, பரிமாற்றம் (transmission மற்றும் விநியோகம் (Distribution) (LV, MV மற்றும் HV) – நீர்மின் (Hydro), வெப்ப மின் (Thermal) , அணு மின் (Nuclear) நிலையம் போன்றவை. விநியோக அமைப்பின் வகைகள் – உபநிலையம்(Substation) (இன்டோர் மற்றும் அவுட்டோர் , போல் மௌன்டெடு) – லைன் பாதுகாப்பு சாதனங்கள், உபகரணங்கள் – ஸ்விட்ச்கியர்கள், சர்க்யூட் பிரேக்கர் மற்றும் ஸ்விட்ச்கள், பாதுகாப்பு திட்டம் – மின்னோட்ட மற்றும் மின்னழுத்த மின் மாற்றிகள் – பாதுகாப்பு ரிலே மற்றும் லைட்னிங் அர்ரெஸ்ட்ர்

அலகு VI: அளவீட்டு கருவிகள் மற்றும் பரிசோதனை (Measuring Instruments and Testing) (25 கேள்விகள்)

மின்சார அளவுகோல்களின்(பெராமீட்டர்) அளவீடு - சிஸ்டம் பராமரிப்பு. கருவிகள் வகைப்பாடு - அனலாக் மற்றும் டிஜிட்டல் மீட்டர்கள் - மின்னழுத்தம், மின்னோட்டம் மற்றும் ரெசிஸ்டன்சின் மதிப்புகள் அளவிடுதல். MC மற்றும் MI மீட்டர்கள் மூலம் DC மற்றும் AC மின்னோட்டம் அளவீடு - வாட் மீட்டர்கள் மற்றும் எனர்ஜி மீட்டர்கள் - மின்சார நுகர்வு (பவர் கன்ஸ்சம்சன்). ஃபேஸ் சீகுவன்ஸி மற்றும் அதிர்வெண்(ஃபிரிக்குன்சி) மீட்டர்கள் நிலைத்தன்மை (stability), டாங் டெஸ்டர்கள் (கிளாம்ப் மீட்டர்கள்). Meter Reading Instrument (MRI) மீட்டர்கள், வீட்டு மின் இணைப்பில் பரிசோதனை - பழுது கண்டறிதல், எர்த் லீக்கேஜ் பரிசோதனை, மின்காப்பு ரெசிஸ்டன்ஸ் சோதனைகள் & பாதுகாப்பு.

அலகு VII: வெளிச்சம் மற்றும் ஒளி அமைப்புகள் (Illumination And Lighting Systems) (20 கேள்விகள்)

வெளிச்சத்தின்(Illumination) விதிகள் – வகைகள் – காரணிகள்(factors) – இன்டென்சிட்டி, நன்மைகள்/குறைகள் – பயன்பாடுகள், லூமேன் கணக்கீடு மற்றும் வினைத்திறன். முறையான லைட்டிங் (proper lighting) - வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள். LED, CFL, ஸ்பாட் லைட், டவுன் லைட் மற்றும் ஸ்ட்ரிப் லைட், HPMV விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு மற்றும் ஃப்ளூரசென்ட் விளக்குகள். அலங்கார மற்றும் கேபினட் விளக்குகள் - பணியிடத்தில் தெளிவான ஒளி வசதியின் அவசியம் (workspace visibility). DMX கண்ட்ரோலர்கள் - PAR lights - மேடை விளக்குகள் - LED வீடியோ சுவர்கள் வணிக காட்சிகள்.

மோஷன் சென்சார் விளக்குகள், ஆற்றலை சேமிக்கும் திறன், மேலும் ரிமோட் கண்ட்ரோல் - விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் ஆட்டோமேஷன்.

அலகு VIII: புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைப்புகள் மற்றும் மின்சார வாகனங்கள் (Renewable Energy Systems and Electric Vehicles) (20 கேள்விகள்)

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் - மின் உற்பத்தி, சோலார் ஆற்றல் – ஃபோட்டோ வோல்ட்டாயிக் (photovoltaic) செல்கள், சார்ஜ் கண்ட்ரோலர்கள், மற்றும் மின்கல சேமிப்பு. சோலார் பே ட்டரி அமைப்புகள் - சூரிய ஒளியின் அதிக வினைத்திறனை பெற சோலார் பேனல்களை சாய்வு கோணமாக அளவிடும் முறைகள். சோலார் நீர்பம்புகள் மற்றும் DC பயன்பாடுகள் – ON/OFF கிரிட் (Grid) – கிரிட் (Grid) தீர்வுகள், சோலார் இன்வெர்டர்கள் - DC to AC. மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் மின்சார இயக்கத்திற்கு ஆதரவு(Support), மின்கல பராமரிப்பு - பொது மற்றும் விட்டு மின் நிறுவலுக்கான சரியான மின் சக்தி பகிர்மான முறை. (Proper power distribution)

அலகு-IX: கண்ட்ரோல் பேனல்ஸ் மற்றும் வயரிங் நிறுவல் (Control Panels and Wiring Installation) (20 கேள்விகள்)

மின்சார சர்க்யூட் வரைதல் – கண்ட்ரோல் எலெமென்ட், உபகரணங்கள் மற்றும் சிம்பல்ஸ். கண்ட்ரோல் பேனல்ஸ் - ரிலே, லாடர் லாஜிக் மற்றும் வயரிங் காண்டாக்டர்(Contactor), மற்றும் ஓவர்லோடு ரிலே வயரிங். மின்விநியோக வரைபடம் - கண்ட்ரோல் பேனல்ஸ் காம்போனென்ட்ஸ் - DIN ரெயில்கள், டிரங்கிங், கனெக்டர் ப்ளாக்ஸ், ஸ்க்ரூ டெர்மினல்கள், ரிலேக்கள், காண்டாக்டர் (Contactor), பாதுகாப்பு அலகுகள் (யூனிட்ஸ்), ஃப்யூஸ்கள், ஃப்யூஸ் ஹோல்டர்கள், சேசிஸ் மவுண்டட், ஃப்யூஸ்-லிங்க் (Link), ரெசிஸ்டன்ஸ்கள், நிலையான(fixed), மாறுபடும்(variable), கெபாசிட்டர்கள், ஸ்விட்ச்கள், விளக்குகள், லேபிளிங் கிரொமேட்டுகள் மற்றும் கிளிப்புகள். கேபிள் உருவாக்கம் - டெம்ப்ளேட், வயரிங் அட்டவணை, ரன் அவுட் ஷீட், பைண்டிங், தொடர்ச்சியான லேசிங், லூப் டை, லாக் ஸ்டிட்ச், பூர்த்தி முடிச்சு(finish knot) , பிரேக் அவுட்ஸ், லேசிங் பிரேக் அவுட்ஸ், ஸ்பாட் டைஸ், வயர்களை அமைத்தல், ட்விஸ்டட் பேர், கேபிள் மார்க்கர்கள் மற்றும் கலர் குறியீடுகள். கேபிள்களின் இணைப்புகள் மற்றும் வழிமுறைகள் - EMI/EMC பரிசீலனைகள், வெவ்வேறு சுற்றுகளின் கண்டக்டர்களை பயன்படுத்தும் முறைகள்- ரிலே தொடர்புகளின் சிம்பல்ஸ்கள் மற்றும் பயன்பாடு - NO, NC, சேஞ்ச் ஓவர் சுவிட்ச் (changeover switch), மேக் / பிரேக் (make/break) டிலே (delay), பல்வேறு கண்ட்ரோல் காம்போனென்ட்ஸ் மற்றும் சர்க்யூட்களின் பரிசோதனை- சர்க்யூட் பிரேக்கர், ஃப்யூஸ், MCCB, MCB, மற்றும் ELCB பழுது பாதுகாப்பிற்காக சாதனங்கள். கண்ட்யூட் வயரிங் - சுவற்றின் மேற்பரப்பு மற்றும் சுவற்றின் உள் அமைக்கப்படும் (surface and concealed) PVC வயரிங், கேபிள் ஃபார்மிங் மற்றும் ரூட்டிங் (forming and routing). ஸ்மார்ட் ஹோம் ஆட்டோமேஷன் வயரிங் - விளக்குகள், விசிறிகள் மற்றும் மின் சாதனங்கள். மதிப்பீடும் மற்றும் செலவு கணக்கீடு.

அலகு-X: வீட்டு, தொழில்துறை வயரிங் மற்றும் காயில் கட்டுதல் (Domestic, Industrial Wiring and Winding) (15 கேள்விகள்)

வீட்டு வயரிங் மற்றும் தொழில்துறை வயரிங் வகைகள் - வயரிங்கிற்கு தொடர்புடைய IE விதிகள், வீட்டு வயரிங்கிற்கான தேசிய கட்டிடக் குறியீடுகள், விவரக்குறிப்பு மற்றும் வகைகள், வயரிங் தரம் & பொருட்கள். கோட்பாடுகள்(terms) - அதிகபட்ச மின்பளூ தேவை, லோடு ஃபேக்டர் மற்றும் டைவெர்சிட்டி ஃபேக்டர், பல்வேறு வயரிங் உபகரணங்கள்/மின்சார ஃபிட்டிங்ஸ், கேபிள்களின் தரநிலை மற்றும் மின்னோட்டம் மதிப்பீடு. வீட்டு வயரிங்கின் தளவமைப்பு கோட்பாடு (lay out) - மின்னழுத்த வீழ்ச்சி கோட்ப்பாடு. IS 732-1863. வயரிங் பொருட்கள் - PVC கேபிள்கள், வயரிங் பொருட்களுக்கு இந்தியத் தரநிலைகள், வயரிங் மதிப்பீட்டு செயல்முறை, சர்க்யூட்களின் கிளைப்பிரிவு - விளக்குகள் மற்றும் மின்சார சக்தி - நிறுவல் மற்றும் பராமரிப்பு - மின்சார சாதனங்கள் - மின்கூண்டு மற்றும் பஸ்சர்கள் (Electric bells and buzzers), இன்டக்ஷன் ஹீட்டர்கள் மற்றும் ஃபுட் மிக்சர்கள், விசிறிகள், வாஷிங் மெஷின், ரெஃபிரிஜிரேட்டர், நீர்ப்பம்புகள் - மற்றும் அவற்றின் கால முறை பராமரிப்பு (periodic servicing). ஏர் கண்டிஷனர் (விண்டோ மற்றும் ஸ்ப்ளிட்). தொழிற்சாலை மோட்டார்கள் மற்றும் பம்புகள், மின்கல பராமரிப்பு மற்றும் மின் மாற்றி வைண்டிங். வயரிங் மதிப்பீடு – வீட்டு, வணிக மற்றும் தொழிற்சாலை, ஸ்மார்ட் வயரிங் கோட்பாடு, தொலை தொடர்பு மற்றும் பொழுதுபோக்கு வயரிங், கிரௌன்ட் ஃபால்ட் -சர்க்யூட் குறுக்கீடு(circuit interrupter) – வைண்டிங் வகைகள் – கான்செண்ட்ரிக், டிஸ்ட்ரிபியூட்டடு - சிங்கிள் / டபுள் அடுக்கு வைண்டிங் மற்றும் தொடர்புடைய கூறுகள்(terms). சிங்கிள் ஃபேஸ் - AC இன்டக்ஷன் மோட்டார்கள் மற்றும் யுனிவர்சல் மோட்டாரின் பழுது கண்டறிதல் – தொழிற்சாலை வயரிங் - மின் நிறுவலுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய எதிர்ப்புற நிலைகள், இயந்திர மற்றும் மின்சார பாதுகாப்பு அளவு, உச்சம் மற்றும் மிதமான பளூ (peak to peak load), லைட்டிங் டிசைன் - லைட்டிங் பவரின் அடர்த்தி, மதிப்பீடு – லோடு - கேபிள் அளவு, பொருட்களின் பட்டியல் மற்றும் செலவு, வயரிங் நிறுவல்களின் ஆய்வு மற்றும் பரிசோதனை. சிறப்பு வயரிங் - மருத்துவமனை, குடோன் (go down), சுரங்கம் (tunnel) மற்றும் பணிமனை, IE விதிகளின்படி அபாயக் குறிப்பு – கேபிள் மேனேஜ்மென்ட் - கேபிள்களின் வகைகள், பயன்பாடுகள், கேபிள் க்ளாண்டுகள், IP மதிப்பீடுகள், IP குறியீடு வடிவமைப்பு. பிணைப்பு மற்றும் கிரௌண்டிங் (Bonding and grounding), அதன் பல்வேறு வகைகள்.கேபிள்களின் பரிசோதனை, பழுதுகளை கண்டறிதல், ஓபன் சர்க்யூட், குறுகிய சர்க்யூட் மற்றும் கேபிள்களில் ஏற்படும் கசிவுகள்.

46. தொழிற்பிரிவு: பனிமனை கணக்கு மற்றும் அறிவியல்
(தொழிற் பயிற்சி தரம்)

குறியீடு: 540

அலகு I: அலகுகள், பின்னங்கள், வர்க்கமூலம், விகிதம் மற்றும் விகிதசமம், சதவீதம் (20 கேள்விகள்)

அலகு முறைகளின் வகைகள் – அடிப்படை மற்றும் வழிநிலை அலகுகள், SI அலகுகள், அளவீட்டு அலகுகள் மற்றும் அலகுகளை மாற்றுதல் – காரணிகள் மீப்பெரு பொது வகுத்தி (HCF), மீச்சிறு பொது மடங்கு (LCM) வர்க்கம், வர்க்கமூல கணக்குகள் – சாதாரண மற்றும் தசம பின்னங்கள் – கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் தொடர்புடைய கணக்குகள் – பிதாகரஸ் தேற்றத்தின் பயன்பாடு மற்றும் அதன் தொடர்புடைய கணக்குகள் – நேர்விகிதம் மற்றும் எதிர்விகிதம் – சதவீதம் – சதவீதத்தை தசமபின்னம் மற்றும் சாதாரண பின்னமாக மாற்றுதல் – பின்னங்களை சதவீதமாக மாற்றுதல்.

அலகு II: உலோக அறிவியல் மற்றும் வெப்ப பதனிடுதல் (30 கேள்விகள்)

உலோகங்களின் வகைகள் – இரும்பு கலந்த மற்றும் இரும்பு கலவாத உலோகங்கள் – உலோகங்களின் இயற்பியல் மற்றும் இயந்திரவியல் தன்மைகள் – இரும்பு, வார்ப்பிரும்பு, எஃகு மற்றும் கலப்பு எஃகு, கார்பன் எஃகு – எஃகின் கட்டமைப்பு – இரும்பிற்கும் எஃகிற்கும் இடையேயான வேறுபாடுகள் – இரப்பர், மரம் மற்றும் இன்சுலேட்டிங் மெட்டீரியலுக்கான தன்மைகள் மற்றும் உபயோகங்கள்.

வெப்ப பதனிடுதல் - நோக்கம் - நன்மைகள் – செயல்முறைகள் - மிருதுவாக்குதல் – தன்னிலைப்படுத்துதல் – கடினப்படுத்துதல் – பதப்படுத்துதல் – புறக்கடினப்படுத்துதல் – வெப்பப்படுத்தும்போது உள்ள எஃகின் கட்டமைப்பு – லோயர் மற்றும் அப்பர் கிரிட்டிகல் வெப்பநிலைகள் (LCT, UCT).

அலகு III: நிறை, எடை, கனஅளவு, அடர்த்தி, வேகம், திசைவேகம் மற்றும் வேலை, திறன், ஆற்றல் (20 கேள்விகள்)

நிறை, எடை, கனஅளவு, அடர்த்தி மற்றும் ஒப்படர்த்தி - தொடர்புடைய கணக்குகள் - வேகம், திசைவேகம் – ஓய்வு, இயக்கம், முடுக்கம் மற்றும் எதிர்முடுக்கம் - தொடர்பு கணக்குகள்.

வேலை - திறன் – ஆற்றல் – குதிரை திறன் (HP) – தீர்மானிக்கப்பட்ட குதிரைத் திறன் (IHP), பயன்படுத்தப்படும் குதிரைத் திறன் (BHP) – பயனுறு திறன்(efficiency) – நிலையாற்றல் – இயக்க ஆற்றல் – தொடர்புடைய கணக்குகள்.

அலகு IV: வெப்பம் மற்றும் வெப்பநிலை (20 கேள்விகள்)

வெப்பம் மற்றும் வெப்பநிலை – கருத்து – விளைவுகள் – வேறுபாடுகள் – பல்வேறு உலோகம் மற்றும் அலோகங்களின் கொதிநிலை மற்றும் உருகுநிலைகள் – அளக்கும் கருவிகள் – தெர்மோ மீட்டர் – பைரோமீட்டர் – வெப்பம் பரவுதல் – வெப்பக்கடத்தல், வெப்பச்சலனம், வெப்பக்கதிர்வீச்சு – நீளப் பெருக்க குணகம் – தொடர்புடைய கணக்குகள்- வெப்ப இழப்பு மற்றும் வெப்ப ஏற்பு – வெப்பக்கடத்து திறன் மற்றும் வெப்பம் கடத்தாப் பொருட்கள் (Thermal Insulator) - அழுத்தம் – கருத்து மற்றும் அலகுகள் – வளிமண்டல அழுத்தம் – முழுமையான அழுத்தம் – கேஜ் அழுத்தம் – அழுத்தமானிகள்.

அலகு V: அடிப்படை மின்னியல் (15 கேள்விகள்)

மின்சாரத்தின் உபயோகங்கள் – மின்னோட்டம் – நேர்திசை மின்னோட்டம் (DC) மாறுதிசை மின்னோட்டம் (AC) ஒப்பீடு – மின்னழுத்தம் – மின்தடையின் அலகுகள் – மின் கடத்திகள், இன்சுலேட்டர்கள் – மின்சுற்றின் வகைகள் – தொடர் மற்றும் பக்க இணைப்பு – ஓமின் விதி – தொடர்புடைய கணக்குகள் – காந்த தூண்டுதல் – சுய தூண்டுதல், பரஸ்பர தூண்டுதல் – மின் இயக்கு விசை (EMF) – மின்திறன், குதிரை திறன், மின்னாற்றல், மின்னாற்றல் அலகுகள்.

அலகு VI: அளவியல் (20 கேள்விகள்)

பரப்பளவு மற்றும் சுற்றளவு – சதுரம், செவ்வகம், இணைகரம், முக்கோணங்கள், வட்டம், அரைவட்டம், வட்டவளையம், வட்டகோணப்பகுதி, அறுங்கோணம் மற்றும் நீள்வட்டம்

திடப்பொருட்களின் புறப்பரப்பு (LSA), மொத்தப்பரப்பு (TSA) மற்றும் கனஅளவு (V) – கனசதுரம், கனசெவ்வகம், உருளை, கோளம், உள்ளீடற்ற உருளை – அறுங்கோணம், கூம்பு, உருளைவடிவ கொள்கலன்களின் கொள்ளளவு லிட்டரில் – தொடர்பு கணக்குகள்.

வெட்டப்பட்ட ஒழுங்கான வடிவங்களின் பரப்பளவு – வட்டம், வட்டத்துண்டு, வட்டகோணபகுதி, தொடர்பு கணக்குகள் – ஒழுங்கற்ற பரப்புகளின் பரப்பளவு – பயன்பாடு மற்றும் தொடர்பு கணக்குகள்

அலகு VII: உராய்வு (15 கேள்விகள்)

உராய்வு – நன்மைகள் மற்றும் தீமைகள் – உராய்வின் விதிகள் – உராய்வு பெருக்க குணகம் – உராய்வு கோணம் – தொடர்புடைய கணக்குகள் – பணிமனை பயிற்சியில் உராய்வின் பயன்பாடு மற்றும் விளைவுகள் – உயவு.

அலகு VIII: புவியீர்ப்பு மையம், நெம்புகோல் மற்றும் எளிய இயந்திரங்கள் மற்றும் மீட்சியல் (20 கேள்விகள்)

புவியீர்ப்பு மையம் மற்றும் அதன் செயல்முறை பயன்பாடுகள் – எளிய இயந்திரங்கள் – திறன் மற்றும் பளு –

இயந்திர லாபம் – திசைவேக விகிதம் – பயனுறு திறன்

இயந்திர லாபம்– திசைவேக விகிதம் – பயனுறு திறன் இவற்றிற்கிடையேயான தொடர்பு – மீட்சியல் தன்மை – மீட்சி மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் – தகைவு, திரிபு - கருத்து மற்றும் அலகுகள், யங் குணகம், அதிகபட்ச தகைவு, செயல்படும் தகைவு, தகைவு - திரிபு வளைவு

அலகு IX: அல்ஜீப்ரா மற்றும் முக்கோணவியல் (20 கேள்விகள்)

அல்ஜீப்ரா – கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் Indices-ன் சூத்திரங்கள் – தொடர்பு கணக்குகள் – கோணங்களை அளவிடுதல் – முக்கோணவியல் விகிதங்கள் – பணிமனை தொடர்பான உயரம் மற்றும் தூரம் கணக்குகள்

அலகு X: மதிப்பீடு மற்றும் செலவு, இலாபம் மற்றும் நஷ்டம் (20 கேள்விகள்)

மதிப்பீடு மற்றும் செலவு – பொருள்களின் தேவைக்கான மதிப்பீடு மற்றும் செலவு தொடர்புடைய கணக்குகள்.

இலாபம் மற்றும் நஷ்டம் - தொடர்புடைய எளிய கணக்குகள் – தனிவட்டி – கூட்டுவட்டி – தொடர்புடைய கணக்குகள்

பிற்சேர்க்கை IV

தேர்வர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

1. எழுத்துத் தேர்வு

1.1. தேர்வு மையத்திற்கு வருகை புரியும் நேரம்

1.1.1.. தேர்வு எழுத வரும் தேர்வர்களின் மெய்த்தன்மையை உறுதி செய்யவும், இதர தேர்வு விதிமுறைகளை தேர்வர்களுக்கு விளக்கும் விதமாகவும், தேர்வர்கள், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒருமணிநேரத்திற்கு முன்பாகவே தேர்வு மையங்களுக்கு வருகை புரிதல் வேண்டும்.

1.1.2. தேர்வுமையத்தின் அனைத்து நுழைவாயில்களும் தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே மூடப்படும். அதன் பின்னர், வரும் எவரும் தேர்வுமையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.1.3. காலை மற்றும் பிற்பகல் ஆகிய இருவேளைகளில் நடைபெறும் தேர்வுகளில், பிற்பகல் தேர்விற்கு, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வர்கள் தேர்வுக்கூடத்துக்குள் வந்துவிட வேண்டும். அதன் பின்னர் வருகைபுரியும் எவரும் தேர்வுக்கூடத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.2. தேர்வு மையத்திற்குள் அனுமதித்தல்

1.2.1. தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுடன் தேர்வு மையத்திற்கு வர வேண்டும். தவறும் பட்சத்தில், தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை தேர்வுமையத்திற்கு கொண்டு வர வேண்டும்.

1.2.2. தேர்வர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் (அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையத்தை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. உரிய முன் அனுமதி இல்லாமல், தேர்வர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வுமையத்திற்குப் பதிலாக வேறொரு தேர்வு மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.2.3. தேவைப்பட்டால், தேர்வு மையத்தில் காவல்துறையிலுள்ள ஆண் / பெண் காவலர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர்கள் மூலமாக தேர்வர்கள், முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

1.2.4. தேர்வர்களுடன் வரும் பெற்றோர்கள் மற்றும் பிற நபர்கள், தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.3. தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு

1.3.1. தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில், தேர்வரின் புகைப்படம் அச்சிடப்படவில்லை அல்லது தெளிவாக இல்லை அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லை என்றாலோ, தேர்வர்கள் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளை காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண் ஆகியவற்றை குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை, இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து, அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலொப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தேர்வர்கள் தன்னுடைய அசல் அடையாள அட்டையை, சரிபார்ப்பு நோக்கத்திற்காக அறைக்கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அறைக் கண்காணிப்பாளர் தேர்வரின் மெய்த்தன்மையை உறுதி செய்த பிறகு, தேர்வர்களின் மெய்த்தன்மையை குறித்தும், தேர்வர்களால் அளிக்கப்பட்ட தகவல்கள் பின்னாளில் தவறானவை என கண்டறியப்படும் பட்சத்தில், தேர்வாணையம் எடுக்கும் எந்தவொரு குற்றவியல் அல்லது மற்ற நடவடிக்கைக்கும் பொறுப்பேற்பார் என்பது குறித்தும் ஓர் உறுதிமொழியினை தேர்வர்களிடமிருந்து பெற்று தலைமைக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

1.3.2. தேர்வர்கள் தேர்வுக்கூடத்தில் அறைக்கண்காணிப்பாளர் / தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் / அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் எவரும் அனுமதிச்சீட்டினை ஆய்வுக்காக கேட்கும்பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

1.3.3. தேர்வர்கள் அனுமதிச்சீட்டினை தங்களது பாதுகாப்பில் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவேண்டும். தேர்வர்கள், தங்களது அனுமதிச்சீட்டினை அடுத்த கட்ட தேர்வுக்கு தெரிவு செய்யப்படும் நேர்வுகளில் / தேர்வாணையத்தால் கோரப்படுகின்ற நேர்வுகளில், சமர்ப்பிக்க வேண்டும். தேர்வர்கள், அனுமதிச்சீட்டினை தேர்வுக்குப் பின்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒளிநகல் எடுத்து தங்கள் வசம் வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு அனுமதிச்சீட்டின் பிரதி வழங்கப்படமாட்டாது.

1.4. தேர்வு அறை

1.4.1. தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் முன்பாகவே தேர்வு அறைக்குள் தங்களது இருக்கையில் அமர்ந்து விடவேண்டும்.

1.4.2. தேர்வு அறைக்கு உள்ளே குடிநீர், தேநீர், காபி, சிற்றுண்டி, குளிர்பானங்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது.

1.4.3. தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் தேர்வர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற தேர்வர்களுடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் தேர்வர்களின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன், தேர்வாணையம் தக்கதெனக் கருதும்காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அத்தேர்வர்கள் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

1.4.4. உடல்நலக் குறைவுடன் தேர்வு எழுதவரும் தேர்வர்கள், தலைமைக் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று அவர்களுக்குத் தேவையான மருந்து மற்றும் மருந்து உபகரணங்களைக் கொண்டு வந்து, அறைக் கண்காணிப்பாளரின் மேஜையில் வைத்து தேவைப்படும்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

1.4.5. எதிர்பாராத நிகழ்வுகளில், தொற்றுநோய் போன்ற காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள்/ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதாவது தொற்று நீக்கி பயன்படுத்துவது, முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவைகளை கடைப்பிடிக்கவேண்டும்.

1.5. எச்சரிக்கை மணி

தேர்வர்கள் நேரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, கீழ்க்கண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளின் போதும் ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும். தேர்வு அறைக்கண்காணிப்பாளர்களால் அவ்வப்பொழுது உரிய அறிவிப்புகள் வழங்கப்படும்.

நிகழ்வு	கால வரிசை	மணி ஒலிக்கும் கால அளவு
தேர்வு தொடங்குவதற்கு முன்		
கொள்குறி வகை தேர்வு OMR விடைத்தாள்களை வழங்குதல்	30 நிமிடங்களுக்கு முன்பாக	சிறு மணியோசை (2 நொடிகள்)
தேர்வு தொடங்கும் பொழுது மற்றும் நடைபெறும்பொழுது		
தேர்வு எழுதத் தொடங்குதல்	நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில்	நீண்ட மணியோசை (5 நொடிகள்)
தேர்வு நடைபெறும் பொழுது	ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும்	சிறுமணியோசை (2 நொடிகள்)
தேர்வு முடிவடைவதற்கு முன்	தேர்வு முடிவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக	சிறு மணியோசை (2 நொடிகள்)
தேர்வு முடிவுறும் போது		
தேர்வு முடிவடைதல்	நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில்	நீண்ட மணியோசை (5 நொடிகள்)

1.6. கொள்குறி வகைத் தேர்விற்கான அறிவுரைகள்

1.6.1. தேர்வர்கள் தேர்வு அறைக்கு கருமை நிற மையுடைய பந்து முனை பேனா, குறிப்பிடப்பட்டுள்ள அடையாளச் சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் மற்றும் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) ஆகியவற்றை மட்டுமே எடுத்து வர அனுமதிக்கப்படுவர். பிற பொருட்களுக்கு அனுமதி இல்லை.

1.6.2. ஒளிக்குறி உணரி (OMR) விடைத்தாள்

1.6.2.1. தேர்வுக்கூட அனுமதிச் சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்பட்டுள்ளபடி, புகைப்படம், பெயர், பதிவு எண், பாடம், தேர்வு மையம் மற்றும் இடம், தேதி மற்றும் அமர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட OMR விடைத்தாள், கொள்குறி வகை தேர்வு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பாக விநியோகிக்கப்படும்.

1.6.2.2. OMR விடைத்தாளை பயன்படுத்துவதற்கு முன்பு, புகைப்படம் மற்றும் அதில் அச்சிடப்பட்ட விவரங்கள் தேர்வர்களால் சரிபார்க்கப்பட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் உள்ள விவரங்கள் அத்தேர்வரின் விவரங்கள் தான் என உறுதி செய்ய வேண்டும். ஏதேனும் விவரங்கள் தவறாகவோ அல்லது குறைபாடுடையதாகவோ கண்டறியப்பட்டால், அதை உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் மாற்றுவதற்காக தெரிவிக்க வேண்டும். OMR விடைத்தாளினை பயன்படுத்திய பின்னர் மாற்றித் தரப்படமாட்டாது.

1.6.2.3. தேர்வர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரியான முறையின்படி, OMR விடைத்தாளில் உள்ள வினாத்தாள் எண் மற்றும் பதில்களை கருமையாக்க வேண்டும்:

1.6.2.4. OMR விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள வட்டங்களில் தேர்வர்கள் பயன்படுத்தும் சரியான வினாத்தாள் எண்ணை அவர்களால் எழுதி கருமையாக்கப்பட வேண்டும். தேர்வரால் கருமையாக்கப்பட்ட வினாத்தாள் எண்ணே இறுதியானது. வட்டங்களில் தேர்வர்களால் கருமையிடப்பட்டிருக்கும் வினாத்தாள் எண்ணின் படியே அவர்களது OMR விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும். வினாத்தாள் எண்ணை கருமையிடுவதற்கான சரியான முறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, வினாத்தாள் எண் 1234 எனில்.



1.6.2.5. தேர்வர்கள், ஒவ்வொரு வினாவிற்கும் OMR விடைத்தாளில் ஒரு வட்டத்தை மட்டும் கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் கருமையாக்கப்பட்டிருந்தால், அவ்வினாவிற்கான விடை மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

1.6.2.6. தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். தேர்வருக்கு ஏதாவது ஒரு வினாவிற்கு விடை தெரியவில்லை எனில், [E] என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கருமையாக்கியிருந்தால் "ஆம்" என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வினாக்களுக்கான விடைக்குரிய வட்டத்தை கருமையாக்காமல் காலியாக விடப்பட்டிருந்தால் "இல்லை" என்ற வட்டத்தை கருமையாக்குவதுடன்

கருமையாக்கப்படாத வினாக்களின் மொத்த எண்ணிக்கையை கீழே குறிப்பிட்டுள்ள கட்டத்தில் எழுத வேண்டும்.

(IV) 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டத்தை கருமையாக்கி விட்டீர்களா ?
Have you darkened the respective answer bubble for all 200 questions?

ஆம் / Yes	இல்லை / No
○	○

'இல்லை' எனில், கருமையாக்கப்படாத வினாக்களின் மொத்த எண்ணிக்கையை எழுதவும்.
If **'No'**, write the total Number of Questions not darkened

1.6.2.7. தேர்வர்கள் OMR விடைத்தாளில் தங்கள் கையொப்பத்தை அதற்கென உள்ள இடத்தில் இட வேண்டும்.

(II) தேர்வரின் உறுதிமொழி / Declaration of the Candidate:

OMR விடைத்தாளின் பக்கம் -2ல் உள்ள அறிவுரைகளை படித்து அறிந்து கொண்டேன். மேலும், OMR விடைத்தாளில் உள்ள அனைத்து விவரங்களும் (கருமையாக்கப்பட்ட வினாத்தாள் தொகுப்பு எண் உட்பட) என்னால் சரிபார்க்கப்பட்டது.

I have read and understood the Instructions at Page-2 of this OMR answer sheet. Further, all the contents in this OMR answer sheet (including Question Booklet Number darkened) are verified by me.

தேர்வரின் கையொப்பம்
SIGNATURE OF THE CANDIDATE
(தேர்வர் கையொப்பமிடவில்லையெனில், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்)
(Answer sheet will be invalidated, if Not Signed by the Candidate)

1.6.2.8. தேர்வர்கள் தங்கள் இடது கை பெருவிரல் ரேகையை OMR விடைத்தாளில் அதற்கென உள்ள இடத்தில் பதிய வேண்டும்.

இடது கை பெருவிரல் ரேகை பதியவில்லையெனில் தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.
0.5 mark will be deducted from total marks obtained by the candidate for not affixing Left Hand Thumb Impression.

(V) தேர்வரின் இடதுகை பெருவிரல் ரேகை மட்டும்.
Candidate's Left Hand Thumb Impression only.

1.6.2.9. அறை கண்காணிப்பாளர் வரிசை IA இல் உள்ள வட்டத்தை கருமை நிறமுடைய பந்து முனைப் பேனாவால் பின்வரும் விவரங்களுக்காக கருமையாக்க வேண்டும்:-

(I A) TO BE DARKENED BY THE INVIGILATOR (with Black ink Ballpoint pen)		
(a) Candidate's signature available in the space provided	YES ○	NO ○
(b) Candidate's Left Hand Thumb Impression available in the space provided	YES ○	NO ○

1.6.3. வினாத்தாள்

1.6.3.1. வினாத்தாள், தேர்வு தொடங்குவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் வழங்கப்படும்.

1.6.3.2. OMR விடைத்தாளில் வினாத்தாள் எண்ணை எழுதி கருமையாக்குவதற்கு முன், அனைத்து வினாக்களும் எவ்வித விடுதல்களும் இன்றி அச்சிடப்பட்டுள்ளதா என்பதை தேர்வர் முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டால் அதனை உடனடியாக அறை கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, முழுமையான மாற்று வினாத்தாளை பெற்றுக்கொள்ளலாம். தேர்வு தொடங்கிய பின்னர் வினாத்தாளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டு முறையிட்டால், வினாத்தாள் மாற்றித் தரப்பட மாட்டாது.

1.6.3.3. தேர்வர்கள் வினாத்தாளில் உள்ள விடைகள் குறித்து குறியீடு செய்யவோ அல்லது குறிக்கவோ கூடாது. இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றத் தவறினால், தேர்வரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

1.6.4. வருகைப் பதிவேடு: OMR விடைத்தாள் மற்றும் வினாத்தாளில் ஏதேனும் முரண்பாடுகள் உள்ளதா என சரிபார்த்த பிறகு, தேர்வர்கள் வருகைப் பதிவேட்டில் தங்கள் பெயர் மற்றும் பதிவு எண்ணைச் சரிபார்த்து, வினாத்தாள் எண்ணை முறையாகக் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும்.

1.6.5. கொள்குறி வகைத் தேர்வுகள் எழுதும் தேர்வர்களுக்கான விதிமுறைகள் தொடர்பான அறிவுரைகள் அடங்கிய காணொளி https://tnpsc.gov.in/English/omr-guidelines.html இல் உள்ளது.

1.7. கணினிவழித் தேர்வு (Computer Based Test)

1.7.1. தேர்விற்கான பதிவு செய்தல், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகத் தொடங்கும்.

1.7.2. தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் ஒரு கணினி ஒதுக்கப்படும்.

1.7.3. கணினி வழித் தேர்விற்கு, சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை.

1.7.4. தேர்வர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியன வழங்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை (login) செய்ய வேண்டும்.

1.7.5. பதிவு எண், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றுக்கு மட்டும் விசைப் பலகையைப் பயன்படுத்தவும்.

1.7.6. தேவையான அறிவுரைகள் திரையில் தோன்றும். அனைத்து அறிவுரைகளையும் கவனமாகப் படித்து அவற்றை தவறாது பின்பற்றவும்.

1.7.7. கணினி வழித் தேர்வில், ஒவ்வொரு வினாவும் ஐந்து விடைகளுடன் திரையில் காட்டப்படும்.

1.7.8. ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1.7.9. வினாக்களானது ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித் திரையில் தோன்றும். அதற்கு ஒன்றன் பின் ஒன்றாக விடையளிக்கவும்.

1.7.10. தேர்வர்கள் சுட்டியைப் பயன்படுத்தி சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் வினாக்களுக்கு பதிலளிப்பதைத் தொடரலாம்.

1.7.11. ஒரு வினாவிற்கான விடையைத் தேர்வு செய்ய அதற்கென அளிக்கப்பட்டுள்ள விடைத் தெரிவுகளில் ஒன்றின் மீது கிளிக் செய்யவும்.

1.7.12. ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்த பின் உங்கள் விடையை சேமிக்க Save and Next பட்டன் மீது கிளிக் செய்யவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்பட மாட்டாது.

1.7.13. நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்க வேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பட்டனை கிளிக் செய்யவும் அல்லது Clear Response பட்டன் மீது கிளிக் செய்யவும்.

1.7.14. தேர்வர்கள் வினாவிற்கு உரிய மிகச் சரியான விடையினைச் சொடுக்க வேண்டும். தேர்வர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முந்தைய கேள்விக்கு செல்லலாம்.

1.7.15. தேர்வர்கள் எந்த ஒரு வினாவினையும் பார்வையிடலாம், தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எப்போது வேண்டுமானாலும் விடையினை மாற்றலாம், அவர்கள் விரும்பினால், சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்ல முடியும்.

1.7.16. தேர்வர்கள் தேர்வு நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடைகளை சமர்ப்பிக்கலாம்.

1.7.17. விடைகளைச் சமர்ப்பித்த பின்னர், தேர்வர் மேலும் தேர்வினைத் தொடர வாய்ப்பில்லை.

1.7.18. தேர்வர்கள் தங்கள் விடையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேர்வு முடியும் நேரத்தில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

1.7.19. பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளின் எழுத்து வடிவங்களைத் தேவைக்கேற்ப பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

1.7.20. வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது கிளிக் செய்து மவுசில் உள்ள ஸ்க்ரோலிங் வீலை சுழற்றவும்.

1.7.21. கேள்வி எண் பெட்டி: திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையையும் காண்பிக்கும்.



'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன.

கேள்வி எண் பெட்டியின் இடது பக்கத்தில் தோன்றும் ">" அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்விஎண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்விஎண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால், திரையின் வலதுபுறம் உள்ள "<" அம்புக்குறி மீது கிளிக் செய்யவும்.

உங்கள் கேள்வியின் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ ஸ்க்ரோல் செய்யாமலேயே பார்க்க விரும்பினால் மற்றும் ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

1.7.22. தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை Time Left: என காண்பிக்கும். (உதாரணமாக தேர்விற்கான கால அளவானது 3 மணி நேரமாக இருப்பின், தேர்வின் தொடக்கத்தில், timer 180 நிமிடங்களைக் காண்பிக்கும் மற்றும் தேர்வில் உதவியாளருடன் / உதவியாளரின்றி வரும் தகுதியான மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு 240 நிமிடங்கள் என காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும்). Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

1.7.23. தேர்வர் ஒவ்வொருவருக்கும், வழிமுறைகளுக்காக பயன்படுத்தும் (Rough Work) பொருட்டு தனித்தாள் வழங்கப்படும். தேர்வு முடிவுற்ற பின் தனித்தாள் திரும்பப் பெறப்பட்டு விடும்.

1.7.24. தேர்வர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத் தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும்.

1.7.25. தேர்வறை கண்காணிப்புக் கருவி மூலம் கண்காணிக்கப்படும்.

1.7.26. தேர்வர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

1.7.27. வினா விடைகளில் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினா விடைகளே இறுதியானது.

1.7.28. தேர்வாணைய இணையதளம் (www.tnpsc.gov.in) –ல் உள்ள மாதிரி தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்து கொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது, தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணையத் தேர்வு போன்றது. மாதிரித் தேர்வில்

படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் மாதிரித் தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளலாம்.

1.8. எழுத்துத் தேர்விற்கான பிற அறிவுரைகள்

1.8.1. எந்த ஒரு தேர்வரும் தேர்வு முடிவடைவதற்குள் தேர்வுக் கூடத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்.

1.8.2. புகைப்படக்காரர் தேர்வரின் முகம் மற்றும் பதிவெண்ணினை மேசை மீதிலோ அல்லது நுழைவுச் சீட்டிலோ காணொளி படம் எடுக்க முற்படும்போது தேர்வர் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

1.8.3. ஒரு பதவிக்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது விடைத்தாள் நகல் அளிக்குமாறு கோரும் தேர்வர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1.8.4. தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், தேர்வர்களின் விடைத்தாள் தேர்வாணைய இணையதளத்தில் கிடைக்கப் பெறும். உரிய கட்டணம் செலுத்தி தேர்வர்கள் அவர்களது விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

1.9. பதிலி எழுத்தர்கள் (Scribes) மற்றும் கூடுதல் நேரம் பயன்படுத்துதல் தொடர்பான அறிவுரைகள்

1.9.1. மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.9.1.1. இணையவழி விண்ணப்பத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.9.1.2. மாற்றுத் திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(s)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் காரணமாக தேர்வு எழுதுவதற்கு பதிலி எழுத்தர் தேவை எனக் கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பதிலி எழுத்தர் மற்றும் கூடுதல் நேரத்திற்காக பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மருத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றினைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட சான்றினை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.9.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.9.2.1. இணையவழி விண்ணப்பத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.9.2.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(r)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பார்வைத்திறன் குறைபாடு, இயக்கக் குறைபாடு (இரண்டு கைகள் பாதிப்படைந்த) மற்றும் பெருமூளை வாதம் வகையினை சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் கோரினால் பதிலி எழுத்தருக்கான வசதி செய்து தரப்படும். அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக பதிலி எழுத்தரை பயன்படுத்தினாலும் / பயன்படுத்தாவிட்டாலும் வழங்கப்படும். மேற்கண்ட நிர்ணயிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

